
ராணி
முத்து
உமா பாலகுமார்
மண்ணில்
வந்த நிலவே



# கவுண்டமணி - செந்தில் கலாட்டா



**கவுண்டமணி:** "டேய் ஒரு பாட்டு பாடு..."

**செந்தில்:** "சினிமா பாட்டா... கர்நாடக சங்கீதமா...?"

**கவுண்டமணி:** "சினிமா பாட்டே பாடுடா..."

**செந்தில்:** "தனிப் பாட்டா..."

**கவுண்டமணி:** "பின்ன கோரஸ் பாட்டா?"

**செந்தில்:** "ஆண் பாடுவதுபோலவா? இல்ல பெண் பாடுவது போலவா?

**கவுண்டமணி:** "டேய் அறுக்காதே! ஆண் பாடுற பாட்டையே பாடு..."

**செந்தில்:** "எஸ்.பி. பாட்டா...? மலேசியா பாட்டா...?"

**கவுண்டமணி:** "டேய் பனங்கொட்ட தலையா! என்னடா கேள்வி இது? எஸ்.பி. பாட்டையே பாடு..."

**செந்தில்:** "யார் இசையில் பாட? ரகுமானா? பரத்வாஜா...?"

**கவுண்டமணி:** "பூ... ராஸ்கல்... ரகுமான் இசையில் பாடி தொலை."

**செந்தில்:** "சோகப்பாடலா, காதல் பாடலா?"

**கவுண்டமணி:** "உனக்கு எங்கடா காதலப் பத்தி தெரியப்போவுது... சோகப்பாட்டையே பாடு."

**செந்தில்:** "மணிரத்தினம் படமா, ரவிக்குமார் படமா?"

**கவுண்டமணி:** "மண்டை வெடிச்சிரும் போலிருக்கு! ரவிக்குமார் பட பாட்டையே பாடு."

**செந்தில்:** "ரஜினி நடிச்சதா? விஜய் நடிச்சதா?"

**கவுண்டமணி:** "உன்னைபோயி பாடச் சொன்னேனே.... என் புத்திய செருப்பாலதான்டா அடிக்கணும்."

**செந்தில்:** "அண்ணே, என் செருப்பாலயா? இல்ல உங்க செருப்பாலயா?"

கவுண்டமணிக்கு கோபம் கொப்பளிக்கிறது... செந்தில் விடுகிறார் ஜூட்!

**– கற்பனை: எம். செல்லையா, சாத்தூர்.**





# மண்ணில் வந்த நிலவே!



## உமா பாலகுமார்

## 1

**வி**டியல் மெல்லிய பனிச்சாரலை சால்வையா... போர்த்தியிருக்க, வானம் செஞ்சுடராய் எழுந்த சூரியனை அணைத்தபடி விடிந்துகொண்டிருந்தது.

தோட்டத்தில் இரவு சொரிந்திருந்த மகிழம்பூ மலர்கள் இளம்பச்சை பட்டு விரிப்பாய்... பூக் கம்பளமாய்... மண் தரையை மாற்றியிருந்தன.

கிருஷ்ணன், குளித்து முடித்து ஈரத் துண்டணிந்து பூஜையி... இருந்தார். சூரியனின் ஒளிபட்ட பனிக்கட்டியாய் நேரம் கரை... ஆரம்பித்தது.

"அம்மா எனக்கு டிபன் ரெடியா? சீக்கிரம் கிளம்பணு...

அவசரமாகக் கூறியபடி வந்த சாகித்யா, தாய் சாரதாவின் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்டுவிட்டு, அவர் கொடுத்த டிபன் பாக்ஸையும், ஹேண்ட் பேக்கையும் எடுத்துக்கொண்டாள்.

"அப்பா.. அம்மா.. நான் கிளம்பறேன்.." என்றபடி விடை பெற்று, அவள் தன் இரு சக்கர வாகனத்தை உசுப்பியபோது, மணி ஏழரையாகியிருந்தது.

சாகித்யா, 'பி.எஸ்.சி. நர்ஸிங்' பயிற்சி முடித்துவிட்டு, ஒரு தனியார் மருத்துவமனையில் நர்ஸாகப் பணிபுரிகிறாள்.

அவள் வேலை செய்கிற மருத்துவமனைக்குள் நுழையும்போதே, இரவுப் பணியிலிருந்த நர்ஸ் சாந்தா, நிம்மதியுடன் புன்னகைத்தாள்.

"வா... சகி.. உனக்காகத்தான்" காத்திட்டிருந்தேன்... அந்தக் குட்டிப்பையன் விஷால், உன்னையே கேட்டிட்டிருக்கான்... நீ வந்தாதான் 'டிபன்' சாப்பிடுவேன்னு ஒரே அடம்..!"

"அப்படியா? நான் பாத்துக்கறேன்... நீங்க கிளம்புங்க..."

"காலையில என் மாமியாருக்கு கீழே விழுந்து அடிபட்டிருக்காம். என் வீட்டுக்காரர் 'போன்' பண்ணி உடனே வரச்சொன்னாரு.. ஒரே 'டென்ஷன்'தான் போ! உன்மாதிரி எப்பவுமே நோயாளிகிட்டே கனிவா சிரிச்சிப்பேசி, அவங்க குறைகளை காதுகுடுத்து கேக்கற பொறுமை வரவர எனக்கு குறைஞ்சிட்டே வருது..!" சிறு சலிப்புடன் கூறினாள், சாந்தா.

"ம்... எல்லாத்துக்கும் மனசுதான் காரணம் சாந்தா! இன்னிக்கு முழுக்க, சந்தோஷமா இருக்கணும்.. தேவையில்லாத கவலைகளை உள்ளே புகவிடக்கூடாதுன்னு உறுதியோடு இருந்து பாருங்க. நம்மை சுத்தி இருக்கிற எல்லாமே பிரகாசமா, அழகா இருக்கும்..."

"ம்.. வீட்டில சதா கத்திட்டிருக்கிற மாமியார், சிடுசிடுன்னு நம்மை புரிஞ்சிக்காத ஒரு புருஷன், சொல்ற பேச்சைக் கேட்காத பையன், இவங்களோட இருந்தாக் கூட அந்த மந்திரம் 'ஒர்க் அவுட்' ஆகுமா?" உடைமாற்றியபடி கேட்டாள் அவள்.

சிறு முறுவலுடன் தலைஅசைத்துவிட்டு, "முயற்சி பண்ணிப் பாருங்களேன்" என்றபடி நர்ஸ் சீருடையுடன் 'ரவுண்ட்ஸ்' செல்லத் தயாரானாள் சாகித்யா.

முதல் அறையிலிருந்த விஷாலைப் பார்க்கச் சென்றபோது, அங்கு அவன் சாப்பிடமாட்டேன் என்று அழுது அடம் பண்ணிக்கொண்டிருந்தான்.

"ஹாய் விஷால்.. என்னாச்சு.. ஏன் அழறே? நீ ரொம்ப சமத்துப்



பையன்னு, இப்பதான் சாந்தா நர்ஸ்கிட்டே சொல்லிட்டு வரேன். அப்படித்தானே கண்ணா.. ம்..?"

அவனுடைய முன்னுச்சி முடிக் கற்றையை செல்லமாகக் கலைத்து விட்டபடிக் கேட்டாள்.

"வாங்க சிஸ்டர்! நீங்க சொன்னாதான், அடம் பண்ணாமக் கேக்கறான். என் பேச்சைக்கூடக் கேக்கறதில்லை.." விஷாலின் தாய் சலுகையுடன் கூறினார்.

"அதெல்லாம் இல்லை.. இனிமே விஷால் யார் சொன்னாலும் கேட்பான். ஏன் குட்டிப்பையா! உங்கப்பா ரொம்பக் குண்டமா?" அறியாதவள் போல் கேட்டாள்.

"ஊஹூம்.. இல்லை! அவ்ளோ உயரம்! வானம்வரை கைகளை விரித்தான் குழந்தை.

"அப்ப நீயும் நல்லா சாப்பிட்டாதானே அப்படி வளர முடியும். இல்லைன்னா இப்படியே இருக்க வேண்டியதுதான்.."

"நான் வளரணும்.. ஆனா ஊசி போட மாட்டீங்களே?" கெஞ்சலாகக் கேட்டான் அவன்.

"இன்னிக்கு ஊசி கிடையாது.. நாளைக்குத்தான்! சரியா? அம்மாகிட்ட சமத்தா சாப்பிடணும்.. அப்புறமா நான் வந்து மருந்து தரேன்...!" என்றபடி அவன் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்டாள் சகி.

அவன் கன்னம் பூவைவிட மிருதுவாக இருக்க, குழந்தைகள் இறைவன் கொடுக்கும் வரமென்று தோன்றியது.

மழலைகள்.. ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியையும், பாசத்தையும் அறிமுகப்படுத்த வரும் கடவுளின் வடிவமாய்... எவ்வளவு கஷ்டங்களிருந்தாலும், தங்களின் குறும்புத்தனத்தால் சட்டென்று அதிலிருந்து விடுபடச்செய்யும் மகிழ்ச்சி ஊற்றாய்...!

"சரி.. ஆன்ட்டி 'ரவுண்ட்ஸ்' போயிட்டு வந்துடறேன்."

அவன் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு வெளியே வரும்போதே, உள்ளே விஷால் சமர்த்தாக சாப்பிட ஆரம்பித்திருந்தான்.

அவளுக்கு 'டியூட்டி' அளிக்கப்பட்டிருக்கும் அறைகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு 'பிபியும், டெம்பரேச்சரும்' பார்த்து எழுதி வைத்தாள்.

பிறகு விஷாலுக்கு மருந்து கொடுத்துவிட்டு, அவளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு வந்தபோது, விஷாலின் நினைவுகள் மனதில் பெரும் சோகத்தை வரவழைத்தன.

அந்தக் குழந்தைக்கு வயிற்றில் புற்றுநோய் வந்திருப்பதால், 'கீமோ தெரபி' இரண்டாவது கட்ட சிகிச்சைக்காக இங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறான்.

'நாளை சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். இவ்வளவு சிறிய குழந்தை என்ன பாவம் செய்தது- இவ்வளவு பெரிய நோய்வர..?' மனம் கனத்துப்போனது.

**அ**ன்று மாலை சாந்தா வருவதற்கு ஏனோ தாமதமானது.

வந்ததும் அவசரமாக உடைமாற்றிக்கொண்டு வந்தவள், "சாரி சகி! மாமியாருக்கு உடம்பு சரியில்லையா? டிபன் செஞ்சி வச்சிட்டு வர தாமதமாயிடிச்சி" தர்மசங்கடத்துடன் சொன்னாள்.

"ம்.. நாச்சும் சாதாரண மனுஷிதானே சாந்தா! அவங்களுக்கும் குடும்பம் பிரச்சினை எல்லாம் இருக்குமே.. என்ன.. நான் சொன்னதை முயற்சிபண்ணிப் பார்த்தீங்களா?" ஆவலுடன் கேட்டான்.

"எங்கே வீட்டுக்குப் போனதிலிருந்து ஒரே 'டென்சன்!' மாமியார் படுத்துட்டாங்க! பையன் பள்ளிக்கூடத்துக்கு போகமாட்டேன்னு அடம் பண்ணி லீவு போட்டிருக்கான். இவர் எல்லாக் கோபத்தையும் என்கிட்ட காட்டிட்டு, ஆபிஸ் கிளம்பிப் போயிட்டாரு. பிரச்சினைகள் நம்மைப்பார்த்து கைகொட்டி சிரிக்கிறப்ப, நாம எங்கே சிரிக்கிறது?" சோர்வுடன் கூறினாள் அவள்.

"அப்படி இல்லை.. ஒரு நாள், நமக்கும் பிரச்சினைகளைப் பார்த்து சிரிக்கிற பக்குவம் வந்துடும் சாந்தா! தனக்குத்தானே மனிதனை அறிமுகப்படுத்துறதே, பிரச்சினைகளும் துன்பமும்தான்.. துன்பத்தைப் போல் சரியான கல்வி எதுமில்லை" எவ்வளவு அற்புதமான வரிகள்!

"இந்த நிமிடம் அந்த அறிஞரின் வாக்குதான் நினைவுக்கு வருது சாந்தா! நான் வரேன்.." சிறுமுறுவலுடன் கூறிவிட்டு சகி கிளம்பினான்.

இந்த மருத்துவமனையில், நோயாளிகளிலிருந்து ஆயாவரை பாசமாக அவன்மேல் இருப்பதற்கு, எந்தக் கஷ்டங்களையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் மனோபாவமும், எல்லோரையும் அரவணைத்து அனுசரித்துப் போகும் அவனுடைய குணமும்தான் காரணமென்று சாந்தாவிற்குப் புரிந்தது. வேலை முடிந்து சாகித்யா வீட்டிற்குச் சென்றபோது, அவர்களுடைய குடும்ப நண்பர் கணபதி வந்திருந்தார்.

தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தவரை வரவேற்றவள்,



"ஆன்ட்டி, பிரபு அண்ணா, எல்லோரும் எப்படி இருக்காங்க அங்கிள்?" புன்னகையுடன் விசாரித்தாள்.

"எல்லோரும் நல்லா இருக்காங்கம்மா.. நம்ம பிரபுவோட நண்பர் ஒருத்தர், ஆய்வு விஷயமாக இந்த ஊருக்கு வராரு.. அவருக்குதான் நம்ம மாடிப்பகுதியைக் குடுப்பியான்னு அப்பாவை கேட்க வந்தேன்.."

"அப்படியா அங்கிள்! நீங்க பேசிட்டிருங்க" என்றவள் உள்ளே சென்று குளித்துவிட்டு வந்தபோது, சாரதா சூடான காப்பியுடன் வந்தார்.

அன்று மருத்துவமனையில் நடந்ததையெல்லாம் அவரிடம் கூறியவள், "யாரும்மா அது? மாடிக்கு குடித்தனம் வரப்போறதா அங்கிள் சொல்றாரு?" மெதுவாக வினவினாள்.

"தெரியலை! யாரோ பிரபுவோட நண்பராம்! ரொம்ப நல்ல குடும்பத்து பையன்றாரு.. அடுத்தவாரம் வருவாரு போலருக்கு" என்றார் அவர்.

**அ**ந்த வாரமே வீட்டிற்குத் தேவையான பொருட்களை எல்லாம், கணபதியே வாங்கி வைத்து- வீட்டை தயார் செய்துவிட்டு, அருகிலிருந்த மெஸ்ஸில் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார்.

அந்த வாரம் முழுவதும் மருத்துவமனையில் வேலை அதிகமாக இருக்க- அன்று மாலை சகி வீட்டிற்கு வந்தபோது, வாசலில் அழகிய கார் ஒன்று நின்றிருந்தது.

உள்ளே சென்றதும், "வாசலிலே நிக்குதே.. யாருதும்மா அந்த காரு! நம்ம வீட்டுக்குத்தான் யாரோ விருந்தினர் வந்திருக்காங்களோன்னு நினைச்சேன்" ஆவலுடன் கேட்டாள்.

"மாடிக்கு, அந்தத் தம்பி மதியானமே வந்துட்டாரு! கணபதி அண்ணாதான் அழைச்சிட்டு வந்தாங்க. ரொம்பப் பேசலை.. 'ரிசர்வ் டைப்' போலருக்கு! அந்தப்பையனோட சுபாவமே அப்படித்தான்னு கணபதி அண்ணா சொன்னாங்க!" என்றார் சாரதா.

ஆனால், அன்றிரவே அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் நேருமென்று இளையவள் எதிர்பார்க்கவில்லை.

சில நாட்களில் பவுர்ணமி நிலவை ரசிக்க, அவள் மொட்டை மாடிக்குச் சென்றுவிடுவாள்.

அன்றும், அதேபோல் சென்று கைப்பிடிச் சுவரில் அமர்ந்து வானத்தையே பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள்.

மனதிற்குள் சந்தோஷமும், நிம்மதியும் அருவியாய்ப் பெருகின.

தங்க நிறத்தட்டாக, உலகெங்கும் மென்மையான வெளிச்சத்தைப் படரவிட்டபடி, வான சாம்ராஜ்ஜியத்தில் உலா வரும் ஒரு அரசகுமாரியைப் போல் ஒளிவீசிக்கொண்டிருந்தது நிலவு!

தோட்டத்திலிருந்து வந்த சில்லென்ற காற்றும், பன்னீர்ப்பூவின் மணமும் இரவு நேரத் தாலாட்டாய் மனதிற்கு இதம் தந்தன. கண்களை மூடி - மூச்சை உள்வாங்கி அதை ரசித்தபோது, சட்டென்று ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தால், மாடிக் கதவருகே ஒரு புதிய மனிதன் நின்றிருந்தான்.

நிலவொளியில் அவன் விழிகள் வைரமாய் மின்ன, அவன் அசாத்திய உயரத்துடன் இருப்பது தெரிந்தது.

அவசரமாகக் கீழே செல்லத் திரும்பியவனைத் தடுத்தவள், "அலோ சார்! நீங்கதான் பிரபு அண்ணாவோட நண்பரா? நீங்க மதியமே வந்துட்டதா அம்மா சொன்னாங்க.. வெல்கம்! நான் சாகித்யா... ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் நர்ஸா இருக்கிறேன்" புன்னகையுடன் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

பதிலாக ஏதும் கூறாமல் மெல்லத் தலை அசைத்தவன், "ஐ யம் யுகேந்திரன்!" ஆழ்ந்த குரலில் கூறிவிட்டு, விருட்டென்று திரும்பி கீழே இறங்கிச் சென்றுவிட்டான்.

அவனுடைய கம்பீரம் கலந்த அலட்சியம், அவளை ஏனோ மிகவும் பாதித்தது.

தோள்களைக் குலுக்கிக் கொண்டவள், வெகுநேரம் கழித்தே கீழே இறங்கி வந்தாள்.

மறுநாள் இரவு வேலை என்பதால், மாலையில் மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது, வரவேற்பில் ஒரே கூட்டமாக இருந்தது.

பெரிய அரசியல் பிரமுகர் ஒருவரை மாரடைப்பு என்று அவசரப்பிரிவில் அனுமதித்திருப்பதாக நர்ஸ் தேவி கூறினாள்.

அன்று ஐ.சி.யூவில் பணிபுரிகின்ற நர்ஸ் விடுமுறை என்பதால், சகியே அங்கும் பார்த்துக்கொள்ளும்படி நேர்ந்தது.

நடு இரவில், எல்லா நோயாளிகளையும் பார்த்துவிட்டு ஐ.சி.யூ.விற்குள் நுழைந்தபோது, அந்த அரசியல் பிரமுகர் கோதண்டம் மூச்சுவிட வெகுவாகத் திணறிக்கொண்டிருந்தார்.

'மானிட்டர்' திரை தாறுமாறாக ஓட ஆரம்பிக்க, உடனே டியூட்டி டாக்டரை அழைத்தவள், மார்புக்கு 'மசாஜ்' செய்ய ஆரம்பித்தாள்.

அந்த மனிதரின் உயிர்த்துடிப்பும், தவிப்பும் பரிதாபமாக இருந்தன.



அவருடைய கை பதற்றத்துடன் அலைபாய, சுவாசம் பெரிதாக வரத்தொடங்கியது. உடனே அவரை மீட்பதற்கான முயற்சிகளை இருவரும் செய்தனர்.

பிறகு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு, அவர் இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்தார்.

அதன் பிறகுதான், சகியால் இயல்பாக சுவாசிக்க முடிந்தது.

மறுநாள் காலையில் வீட்டிற்குக் கிளம்பும்போது, அவளைத் தேடி வந்த ஒருவன், தன்னை 'ஆனந்த்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"நான் கோதண்டத்தோட மகன்! 'பிசினஸ்' பண்ணுறேன். எங்க அப்பாவைக் காப்பாத்தினது, நீங்களும் அந்த டியூட்டி டாக்டரும்தான்னு எங்கம்மா சொன்னாங்க. ரொம்பத் தேங்ஸ்" நெகிழ்ச்சியுடன் கூறினான்.

"வெல்கம். இதுஎங்க டியூட்டி. நோயாளிகளை பார்த்துக்கிறதுக்குதான் நாங்க இருக்கிறோம். அந்த நிமிடம் உடனே கவனிச்சு, முதலுதவி பண்ணிட்டோம். இனிமே பிரச்சினை இருக்காது. இருந்தாலும் வீட்டுக்குப் போனதுக்கப்புறம், அவரை கவனமா பார்த்துக்கங்க" சிறு முறுவலுடன் கூறிவிட்டுக் கிளம்பினாள்.

ஆனால், அவளையே தொடர்ந்த ஆனந்தின் விழிகளில் தெரிந்த சுவாரசியத்தை அவள் கவனிக்கவில்லை.

தன்னால், அவன் பெரிதும் சலனப்படப் போவதையும் அன்று அவள் அறியவில்லை.

## 2

**கா**லையில் வீட்டிற்கு வந்தபோது, அந்த யுகேந்திரன் வெளியில் கிளம்பத் தயாராக நின்றுகொண்டிருந்தான்.

அவள் வருவதையே கவனிக்காத ஒருவித அலட்சியத்துடன் தெரிந்த அவன் பாவனையும், அவளைக் கண்டதும் சலனமின்றித் திரும்பி தன் 'ஷூ'வை மாட்டிக்கொண்டு கிளம்பியவனின் புறக்கணிப்பும், ஏனோ மனதில் ஆழமாய் தைத்தன.

வாகனத்தை 'ஸ்டாண்ட்' போட்டு நிறுத்தி வைத்துவிட்டு "ஹலோ மிஸ்டர் யுகேந்திரன் எப்படி இருக்கீங்க?" சிறுமுறுவலுடன் நலம் விசாரித்தாள்.

ஒருகணம் இடுங்கிய கண்களால் அவளையே கூர்ந்தவன், பி

"நலம்!" என்று கூறிவிட்டு, திரும்பியும் பார்க்காமல் ஒரு கம்பீர நடையுடன் சென்று காரில் ஏறியதும், யாரோ முகத்தில் அறைந்தாற் போலிருந்தது சகிக்கு!

அன்று மதியம் ஓய்வெடுக்கையில் யோசித்தபோது, அவன் ஏன் இவ்வளவு கடுமையானவனாக, புன்னகைக்கே பஞ்சமாய், சிறு நட்புணர்வுகூட இல்லாமல் வித்தியாசமாக இருக்கிறான் என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டது, மனம்!

சரி, அவன் எப்படி இருந்தால் நமக்கென்ன வந்தது என்று திரும்பிப் படுக்கும்போதுதான், ஏனோ அவன் நினைவுகள் மீண்டும் மீண்டும் அவளை ஆக்கிரமித்தன.

ஒரு திடுக்கிடலுடன் எழுந்து அமர்ந்தபோது, அவனுடைய பாராமுகமே ஏதோ ஒருவகையில் தன்னை ஈர்த்திருப்பதும் புரிந்தது.

**நா**ட்கள் கடந்து செல்ல– ஒருநாள் மருத்துவமனைக்குச் செல்லும்போதுதான், வழியில் யுகேந்திரனின் கார் நின்றிருப்பதைக் கவனித்தாள் அவள்.

எதிர்ச்சாலையில் கண் தெரியாத ஒருவருக்கு பாதையைக் கடக்க உதவிவிட்டு, வேகமாக வந்து காரை கிளப்பியவன், அவனை கடந்து சென்ற சகியை கவனிக்கவில்லை.

ஆனால், அவன் செயலை கவனித்த அவளுக்கோ பெரிய அச்சரியம்!

தொட்டாற்சுருங்கியாய், யாரிடமும் பேசாமல் தனக்குள்ளேயே சுருங்கிக்கொண்டாலும்... அவனிடம் மனித நேயமும், பச்சாதாபமும், உதவிசெய்யும் குணமும் இருப்பதை நினைத்தால மனம் வியப்பானது.

பிறரை மதிக்கத் தெரியாதவனைப் போல் தோற்றம் அளிப்பவனுக்குள்ளும், ஒரு ஈரமுள்ள மனமிருப்பது புரிந்தது.

மருத்துவமனைக்குச் சென்றபோது, கோதண்டம் மூன்று நாட்களுக்கு முன்பே அறைக்கு மாறியிருந்ததால், அவருடன் ஆனந்த் துணையிருந்தான்.

அவளைக் கண்டதும் முகம் மலர்ந்தவர், "வாம்மா! உன்னைத் தான் எதிர்பார்த்திட்டிருந்தேன்.. இன்னிக்கு சாயங்காலம் நான் 'டிஸ்சார்ஜ்' ஆகப்போகிறேன்.." புன்னகையுடன் கூறினார்.

"இனிமே தவறாம 'செக்கப்'புக்கு வந்துடுங்க சார்! டாக்டர் சொல்றமாதிரி நடந்துக்கங்க... சாப்பாடு விஷயத்துல ரொம்ப



கண்டிப்புடன் இருக்கணும். அனாவசிய 'டென்சன்' வேணாம்.. சந்தோஷமா இருங்க.." அனுசரணையாகக் கூறினாள்.

"எல்லா நர்சும் உன்னை மாதிரி இருந்துட்டா, நோயாளிங்க சீக்கிரமே குணமாயிடுவாங்கம்மா.." ஒருவித மெச்சதலுடன் கூறினார் அவர்.

"அதெல்லாம் இல்லை சார்.. எல்லா நர்சும் அப்படித்தான்! நான் உங்களை அன்னிக்கு ராத்திரி பாத்து காப்பாத்தினதால, நீங்க இப்படிப் பேசறீங்க.. ஆமாம், திரும்ப எப்ப வரச்சொல்லி இருக்காங்க...?" ரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தபடிக் கேட்டாள்.

"மூணு மாசம் கழிச்சிதான்! இடையில வரமாட்டேன்! நான்.. அந்தமாதிரி அரசியல்வாதி இல்லைம்மா! நேர்மையானவன்! ஏதாவது வழக்கில மாட்டப் போறோம்னா, உடனே நெஞ்சு வலின்னு வந்து படுத்துக்க எனக்குத் தெரியாது.." வறண்ட முறுவலுடன் கூறினார்.

"ஓ! சாரி சார்..! நான் அந்த அர்த்தத்தில கேட்கல.. எப்ப 'செக்கப்'புக்கு வருவீங்கன்னுதான் கேட்டேன்.."

புன்னகையுடன் கூறிவிட்டு ஆனந்திடம் திரும்பினாள்.

"இப்ப அப்பா நார்மலாக ஆரம்பிச்சிட்டாங்க.. ஜோக்கெல்லாம் அடிக்கிறாங்க பாத்தீங்களா! அம்மாகிட்ட இனிமே பயப்பட வேணாம்னு சொல்லுங்க... அவங்கதான் பாவம்! ரொம்ப உடைஞ்சு போயிட்டாங்க."

தைரியம் கூறிவிட்டு வெளியே வந்தபோது, ஆனந்தின் பார்வை அவளிடமே பதிந்திருந்தது.

**அ**ன்று மாலையில் வீட்டிற்குச் சென்றபோது, ஒருவர் தயங்கியபடி அவள் வீட்டு வாசலில் நின்று இருந்தார்.

"யாரைப் பாக்கணும்? யார் நீங்க?"

அவள் விசாரிக்க, "நான் ஆசிரமத்துல இருந்து வந்திருக்கேம்மா.. இங்க மிஸ்டர் யுகேந்திரன்னு..? இந்த முகவரிதான் குடுத்தாங்க என்றார் தயக்கத்துடன்.

"ஓ! அவர் மாடியில குடியிருக்காரு.. போய்ப்பாருங்க" என்று அனுப்பியவளுக்குள், அவனுக்கும் அநாதை ஆசிரமத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கும் என்று கேள்வி எழுந்தது.

மிகவும் உயர்ந்த உள்ளத்துடன் நல்லெண்ணங்கள் நிறைந்தவனாக இருப்பவன், ஏன் எப்போதும் வீட்டுக்குள்ளேயே அடைந்து

இடக்கிறான் என்ற யோசனையும் வந்தது.

ஒருநாள், அவன் தந்தை கிருஷ்ணன் – தன்னிடம் கூட அவன் முகம் கொடுத்துப் பேசியதில்லை என்று கூறியதும் நினைவுக்கு வந்தது.

அவன் செயல்கள் புதிராய் தோன்ற, தனக்குப் பிடித்த பாடலை முணுமுணுத்தபடி குளிக்கச் சென்றான்.

அடுத்த வாரமே, கணபதியின் மகன் பிரபு ஊரிலிருந்து வந்துவிட்டான்.

வாரக் கடைசி நாட்களில் அவனுடன் ஊர் சுற்றுவதும், அரட்டைப் பேச்சுக்களுமாய் யுகேந்திரன் மாறி இருக்க, அந்த வீடே கலகலவென்றிருந்தது.

அன்று கீழே வந்த பிரபுவிடம், "பிரபுண்ணா... உங்க நண்பருக்கு என்ன மாய மந்திரம் போட்டீங்க... மாடியில ஒரே பேச்சும், சிரிப்புமா இருந்தது" குறும்புடன் கேட்டாள் சகி.

"ஆமாம்பா! அந்தத் தம்பி ரொம்ப அமைதி. பேசவே மாட்டாரு! ஒரு நாளு நம்ம வீட்டுல சாப்பிடலாமேன்னு கேட்டேன்... 'சாரி, தெரியாதவங்க யார் வீட்டுலயும் நான் சாப்பிடுறதில்லை'ன்னு மூஞ்சியில அடிச்ச மாதிரி சொல்லிட்டு போயிடுச்சு" சிறு வருத்தத்துடன் கூறினார் சாரதா.

"நீங்க ஏம்மா அவர்கிட்ட போய் கேட்டீங்க... நம்மளை மதிக்கிறவங்களை மதிக்கணும். மதிக்காதவங்க கிட்டப் போகாதீங்க" சகியிடம் சிறு கோபம் தெரிந்தது.

"ஏய் சகி! அவன் நீ நினைக்கிற மாதிரி இல்லம்மா! ரொம்ப நல்லவன்... நல்ல குடும்பத்துல பிறந்தவன்! அவன் எப்பவுமே கலகலப்பாக பழக மாட்டான். கொஞ்சம் சிடுமூஞ்சிதான்! ஆனா, பழகிட்டா உயிரையே கொடுப்பான்."

உடனே பரிந்து பேசினான் பிரபு.

"ஓ! உயிர் கொடுப்பான் தோழனோ...?"

ஏளனத்துடன் கேட்டுவிட்டு, 'டிபன்' எடுத்து வந்து தந்தாள் சகி.

"நீங்க மட்டும் சாப்பிடுங்க. அவரைப் பொறுத்தவரைக்கும் எங்க வீடு ஒரு தீண்டத்தகாத வீடு" கேலியாகக் கூறினாள்.

புன்னகையுடன் சாப்பிட்ட பிரபு. "அப்படி இல்லைம்மா... அவன் யாருக்கும் அநாவசியமா தொந்தரவு கொடுக்கமாட்டான்... அவ்வளவுதான். அவன் குணமே அப்படித்தான்" என்றான்.

மறுநாள் மாலை, அவள் காந்திமதியம்மன் கோவிலுக்குச்



சென்றிருந்தபோது, அங்கு ஆனந்தும் வந்திருந்தான்.

அவளைக் கண்டதும் ஆவலுடன் அருகில் வந்தவன், "எப்படி இருக்கீங்க சகி மேடம்? ஆஸ்பத்திரி வேலை எப்படி இருக்கு? ரொம்பக் கஷ்டம். இல்லை... எனக்கு உங்களை எல்லாம் பார்த்தா பாவமா இருந்தது. இந்த மாதிரி நர்ஸா வேலை செய்யணுமான்னு... பொதுநலனும், பொறுமையும், அருவருப்பு இல்லாத சேவை மனப்பான்மையும் இருந்தாதான் முடியும்கிறதை, நான் இப்ப புரிஞ்சிக்கிட்டேன்" என்றான்.

"நான் நல்லாருக்கேன்... நீங்கதான் பாத்திங்களே... வேலை கொஞ்சம் அப்படித்தான்! ஆனா ரொம்பப் பிடிச்ச வேலைங்கிறதாலே கஷ்டமா தெரியலை. எந்த வேலையுமே விரும்பிச் செய்யறப்ப சுலபமாயிடும். மனசுக்குப் பிடிச்சதாகவும் மாறிடும்" சிறு முறுவலுடன் கூறினாள்.

"எப்பவும் இந்தக் கோவிலுக்கு வருவீங்களா?"

"இல்லை... எப்பவாவது வரணும்னு தோணினாத்தான்! அப்பா எப்படி இருக்காங்க...? டாக்டர் சொன்னபடி நடந்துக்கிறாங்களா?" விசாரித்தாள்.

"நல்லா இருக்காங்க... வீட்டுல உங்க பெருமைதான்... உங்களை அவருக்கு ரொம்பப் பிடிச்சிடுச்சி!"

"நன்றி! நான் கிளம்பறேன். அவரை விசாரிச்சதா சொல்லுங்க!"

அவனிடம் விடைபெற்று சந்நிதிக்கு சென்றபோது— பின்புறமிருந்து யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

திரும்பினால் பிரபுவும், யுகேந்திரனும் வந்து கொண்டிருந்தனர்.

"சகி! யுகேனுக்கு நம்ம கோவிலைப் பத்தி தெரிஞ்சிக்கணுமாம்... திடீர்னு கேட்டானா... எப்படி வழிகாட்டியா மாறுறதுன்னு யோசிச்சிட்டே வந்தேன்! நல்ல வேளை... உன்னைப் பார்த்தாச்சு... நீதான் சொல்லணும்" புன்னகையுடன் கோரினான்.

"சரி! ஆனா, வழிகாட்டிக்கான கட்டணத்தைக் குடுத்திடுவீங்க இல்லை...?"

குறும்புடன் கேட்டுவிட்டு நிமிர்ந்தால், ஒருவித இறுக்கத்துடன் மேல் விதானத்தில் பார்வையைப் பதித்திருந்தான் யுகேன்.

யோசனையுடன் திரும்பியபோது, "யாரும்மா அது? உன்கிட்டப் பேசிட்டுப்போனது? எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு?" என பிரபு வினவினான்.

"அவரா... மிஸ்டர் ஆனந்த...! அரசியல் பிரமுகர் கோதண்டத்தோட மகன்! அவங்கப்பா மாரடைப்பு வந்து எங்க ஆஸ்பத்திரியிலேதான் 'அட்மிட்' ஆகியிருந்தாரு. அப்படிப் பழக்கம் விசாரிச்சிட்டுப் போறாரு."

"ஓ! அப்ப பெரிய ஆள்தான்– ஆனா, அவங்கப்பா வித்தியாசமான ஒரு அரசியல்வாதி... ஆனா இவங்க கிட்டல்லாம் ரொம்பக் கவனமா இருக்கணும் சகி."

உடனே பிரபுவை இடைமறித்தான் யுகேன்.

"ப்ச... மத்தவங்க விஷயம் நமக்கெதுக்கு பிரபு? அது அவங்க தனிப்பட்ட விஷயம். நாம போகலாமே!" அசுவாரசியமாகக் கேட்டான்.

"யுகேன்– உனக்குத் தெரியாது– சின்னதிலிருந்தே சகி குடும்பமும், எங்க குடும்பமும் ரொம்ப நெருக்கம்! அவ எனக்கு ஒரு குட்டித் தங்கை மாதிரி!

"அவங்க குடும்பம் ரொம்ப அருமையானது. சகியும் அப்படித்தான்! நான் 'அட்வைஸ்' பண்ணினா அவ தப்பா எடுத்துக்க மாட்டா."

"சரி சரி... வா முதல்லே கோவிலைப் பார்க்கலாம்" என்று அவன் வேகமாக முன்னே நடக்க ஆரம்பித்தான்.

"ஏண்ணா! அவர் எப்பவுமே இப்படித்தான் சிடுமூஞ்சித்தனமா, முசுடா இருப்பாரா? நரசிம்மராவுக்கு சொந்தக்காரரா? பாவம் இவருக்கு வரப்போகிற பொண்ணு" குறும்புடன் காதில் கிசுகிசுத்தாள் சகி.

"நீ வேறம்மா. அதுக்கு வாய்ப்பே இல்லை. நம்ம ஆளு அந்தக்கால ரிஷ்ய சிருங்கர் மாதிரி! பெண்கள்னாலே சுத்தமா ஆகாது! வாழ்க்கையில அவன் நல்ல பெண்களையே சந்திச்சதில்லைன்னு எனக்குத் தோணும்! அதான் அவனுக்கு அப்படி ஒரு வெறுப்பு!" அடிக்குரலில் கூறினான். அந்த நிமிடம் ஏனோ அவனை மாற்ற வேண்டுமென்றும், பெண்மையின் பெருமையை, உயர்வை புரிய வைக்க வேண்டும் என்றும், அவளுள் ஒரு வேகம் வந்தது.

ஒரு முடிவுடன் சென்று, அந்தக் கோவிலைப்பற்றி அவனுக்கு விவரிக்க ஆரம்பித்தாள் சகி!

இதுவரை சலனங்களே இல்லாத மனது, இனிவரும் நாட்களில் குழப்பங்களால் சூழப்படப் போவது புரியாமல் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.



## 3

"மிஸ்டர் யுகேந்திரன்! எங்கக் கோவில் பதிமூனு நூற்றாண்டாடப் புகழ் பெற்றது. 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைஞ்சது. சுவாமி பேரு நெல்லையப்பர்– காந்திமதியம்மன்!"

"இங்கே மயில் வாகனத்தோடு ஒரே கல்லில் செதுக்கிய முருகன், மண்டபங்கள்லே இருக்கிறது. ராஜுர் சிலைகள் ஊஞ்சல் மண்டபம், அம்மன் கோவில் வாசலில் 96 தூண்களும், அதுக்குப் பக்கத்துல ஆயிரங்கால் மண்டபமும் இருக்கு. இசை ஒலி எழுப்புற தூண்களும் செதுக்கப்பட்டிருக்கு!

"முஸ்லிம் தலைவர் ஒருத்தர் தன் மனைவியோட நோய் தீர பிரார்த்தனை செஞ்சு குணமடைந்தாலே தன் பெயரால ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை பண்ணி இருக்காரு.

அது இப்போ 'அனவரத நாதர்'னு அழைச்சி... இந்தக் கோயில் சிற்பகலைக்கும் பெயர் பெற்றது" வேகமாகக் கூறி முடித்தாள்.

அவள் கூறுவதையே யோசனையுடன் கேட்டபடி வந்த யுகேன், "பிரபு– நீ சொன்ன மாதிரி நல்ல வழிகாட்டிதான். கேக்கற பணத்தைக் கொடுத்திடு" சிறு கேலியுடன் கூறினான்.

அவனுடைய முதல் கேலியும், கண்ணோரங்கள் 'இடுங்க' சிறு புன்னகையால் இளகிய முகத்தில் விளைந்த மாற்றமும், பளபளத்த விழிகளும் சகிக்குள் ஏனோ பெரும் சலனத்தை ஏற்படுத்தின.

அந்தப் பாதிப்பு மனதில் பெரும் விதிர்ப்பை ஏற்படுத்த தரிசனம் செய்துவிட்டு வெளியில் வந்தபோது, "என்ன சகி! திடீர்னு அமைதியாயிட்டே?" என்றான் பிரபு.

"கோவிலுக்குள்ளே அனாவசியமா பேசறது எனக்குப் பிடிக்காதுண்ணா! அதான் எனக்குத் தெரிந்த விஷயங்களை வெளியில் பிரகாரத்திலேயே சொல்லிட்டேன்.

"சந்நிதிக்கு முன்னாடி நிக்கும்போது மனசு தூய்மையா அமைதியா இருக்கணும். அப்பதான் நம்ம கோரிக்கையை சாமிகிட்ட சமர்ப்பிக்கமுடியும்."

அவள் கூறிவிட்டுத் திரும்ப, விழிகளில் யோசனையுடன் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான் யுகேன்.

"அப்புறம் இன்னொன்னு சொல்ல மறந்திட்டேனே– இன்னிக்கு

நாங்க கோவிலுக்கு வந்த காரணம் தெரியுமா உனக்கு?" பிரபு கேட்டான்.

"ம்.. உங்க நண்பர் கோவிலைப்பத்தி ஆராய்ச்சி செய்யறாரா?" சந்தேகமாகக் கேட்டாள் அவள்.

"இல்லை. இன்னிக்கு அவனுக்குப் பிறந்தநாள்! அதான் பக்கத்து ஊரில இருக்கிற அநாதை ஆசிரமத்துக்குப் போயிருந்தோம்.

"இன்னிக்கு அங்கே எல்லாருக்கும் யுகேன் செலவுலதான் சாப்பாடு" என்று குட்டை உடைத்தான் அவன்.

உடனே யுகேனிடம் திரும்பியவள், "பிறந்தநாள் வாழ்த்துக்கள்" உற்சாகமான குரலில் வாழ்த்தினாள்.

"நன்றி" என்றாலும், அவன் உதட்டோரம் ஏனோ ஒரு விரக்திப் புன்னகையே பூத்திருந்தது.

ஒரு பிறந்தநாள் வாழ்த்தைக் கூட, ஏன் ஒருவிதக் கசப்புடனே இவன் ஏற்றுக்கொள்கிறான் என்ற யோசனை வந்தது அவளுக்கு!

அவனைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தையும், அவன் செயல்களே விதைத்தன.

பிறகு வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் இதுபற்றிக் கூற, அவர் உடனே கேசரி செய்து, அவளிடமே தந்து– அதை மாடியில் கொடுக்கச் சொன்னார்.

அவருக்கு ஆண் குழந்தை இல்லாததால், எப்போதுமே பிரபுவிடம் ஒரு தனிப்பிரியமும், பரிவும் உண்டு.

கணபதியும் அப்படித்தான்.

தனக்குப் பெண்குழந்தை இல்லாத குறையை அவளுக்கு ஏதாவது வாங்கித்தந்து தீர்த்துக்கொள்வார்.

கேசரியை எடுத்துக்கொண்டு மாடிக்குச் செல்லும்போதே, இதை ஏன் அம்மாவிடம் சொன்னோம் என்று தோன்ற, மெதுவாக வாசல் கதவைத் தட்டினாள்.

உள்ளே மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருந்த இருவரின் பேச்சும், உடனே நின்றது.

பிரபுதான் கதவைத் திறந்தான்.

"என்னம்மா! கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே..." என்றான்.

"அம்மா இந்தக் கேசரியை அவருக்குக் கொடுத்துட்டு வரச்சொன்னாங்க. நான் பிறந்தநாள்னு சொன்னேன்.. அதான்" என்றபடி கொடுத்தாள்.

"நன்றிம்மா" என்று வாங்கிக்கொண்டவன் கதவைச்



சாத்திக்கொள்ள– 'இந்த ஆண்கள் இருவரும் அப்படி என்ன ரகசியத்தை ஒளித்து வைத்திருப்பார்கள்?' என்ற கேள்வியுடன் கீழே வந்தாள் அவள்.

ஒரு நாள் விஷம் குடித்துத் தற்கொலைக்கு முயன்ற ஒரு இளைஞனை மருத்துவமனையில் அட்மிட் செய்திருந்தனர்.

காலையில் சகி வேலைக்குச் சென்ற உடனே– அவனும், விஷாலும் அனுமதிக்கப்பட்டுள்ள விஷயத்தைக் கூறிவிட்டு, இருவரையும் பார்க்கப் பரிதாபமாக இருப்பதாக கூறினாள் சாந்தா.

அந்த அறைக்குச் சென்றபோது, மேலே வெறித்தபடி ஓய்ந்துபோய் படுத்திருந்தவனைப் பார்த்தால், மிகவும் காயம் பட்டவனாகத் தெரிந்தது.

ஒல்லியாக, தங்க பிரேமிட்ட கண்ணாடி அணிந்து, சுருட்டை முடியுடன் பெரும் அப்பாவியாய் காட்சியளித்தான் அவன்.

மெதுவாக அவனருகில் சென்றவள், "குட்மார்னிங் ராஜ்குமார்– எப்படி இருக்கீங்க..?" என்றபடி அவனைப் பரிசோதித்தாள்.

ஆனால் அவன் பதிலேதும் கூறவில்லை.

"குட்! இப்ப நீங்க 'நார்மல்..' ஏன் இவ்வளவு சோகம்? உங்களைப்பத்தி சாந்தா 'சிஸ்டர்' சொன்னாங்க.. வாழ்க்கை சந்தோஷமா வாழத்தான் சார்.. அத அழிக்கிற உரிமை நமக்கு இல்லை..."

ஊக்கம்தரும் விதமாகப் புன்னகைத்தாள்.

அதற்குப் பதிலாக சலனமேயின்றி அவன் வெறித்தபோது, 'பாத்ரூம்' கதவைத் திறந்துகொண்டு ஒரு வயதான பெண்மணி வெளியில் வந்தாள்.

"யாரு.. நீங்கதான் விஷால் சொன்ன சகி சிஸ்டரா? நான் உங்களைத்தான் பாக்கணும்னு துடிச்சிட்டிருந்தேன்.

"பக்கத்து ரூம் விஷாலோட அம்மா சொன்னாங்க.. 'சகிசிஸ்டரைப் பார்த்தா, நம்ம கஷ்டமெல்லாம் பறந்துபோயிடும். அவங்க பேசினா, மனசு இலவம் பஞ்சு மாதிரி லேசாயிடும்'னு ரொம்பப் புகழ்ந்து சொன்னாங்க.

"என் பையனுக்கும் கொஞ்சம் 'அட்வைஸ்' பண்ணுங்கம்மா! பத்துவருஷம் குழந்தை இல்லாம தவமிருந்து பெத்தவன்.. இப்ப என்னை விட்டுட்டுப் போயிடுவான் போலிருக்கு. இவங்க அப்பாவும் இல்லை.. எனக்கு யாரு இருக்கா?"

கண்ணீருடன், அவளுடைய கைகளைப் பிடித்தபடிக்

கூறினார்.

"சரிம்மா... நீங்க கவலைப்படாதீங்க... தைரியமா இருங்க. நான் பார்த்துக்கறேன்" என்று ஆறுதல் படுத்திவிட்டு விஷாலின் அறைக்குச் சென்றாள்.

"ஆண்ட்டி" ஓடி வந்து அணைத்துக்கொண்டவனின் தலை, மொட்டை அடிக்கப்பட்டிருந்தது.

"செல்வம்! உன் தோழி வந்தாச்சு... இனிமேலாவது ஒழுங்கா சாப்பிடுவியா?" அவனுடைய அம்மா நிம்மதிப் பெருமூச்சுடன் கேட்டாள்.

"விஷால் நல்ல பையனாச்சே... கெட்டபசங்கதான் அடம் பிடிப்பாங்க... அப்படித்தானே!" எங்க விஷால், சொன்னா உடனே கேட்பானே... இன்னிக்கு ஒரு சின்ன ஊசிதான்... நானே போடுறேன். எறும்பு கடிக்கிற மாதிரி வலிக்கும்... சரியா?"

அவனைக் கொஞ்சியபடி கேட்டுவிட்டு, ஊசி போட்டபோது சிறு முகச் சுணக்கத்துடன் அமைதியாக இருந்தான் அவன்.

"ஏன் ஆண்ட்டி! உங்களுக்கு கடவுன்னா ரொம்பப் பிடிக்குமா?"

அவள் நெற்றியிலிருந்த விபூதியை சுட்டிக்காட்டியபடி– அவன் கேட்டான்.

"ம்! ஏன்டா கண்ணா!" என்றாள் அவள்.

"அப்ப, என்னை அவருக்குப் பிடிக்கவேணாம்னு வேண்டிக்கிறீங்களா? ஏன்னா, ரொம்பப் பிடிச்சவங்களை அவர் தன்கிட்ட அழைச்சிப்பாராமே!"

வெகுளித்தனமும், சோகமுமாய் கேட்ட அந்தப் பிஞ்சைப் பார்த்தபோது, சட்டென்று மனம் கனத்துப் போயிற்று.

"யார் கண்ணா உனக்கு அப்படிச் சொன்னது?" பரிவுடன் கேட்டாள் சகி.

"எங்க மாமியார்தான் சகி! இந்தக் குழந்தைகிட்ட போய் இப்படியா பேசுவாங்க. 'என்னை எடுத்துக்க... இந்தக் குழந்தைய விட்டுன்னு' ஓப்பாரியா அழுது புலம்பிட்டு இப்படி சொல்லி இருக்காங்க" கோபத்துடன் கூறினாள் விஷாலின் தாய்.

"சாமிகிட்ட நீயே வேண்டிக்கடா செல்வம்! நான் பெரிய ஆளாகணும்... நல்லா படிச்சி நிறைய சம்பாதிக்கணும்... பேரன்–பேத்தி கூட விளையாடற பாட்டி மாதிரி இருக்கணும்னு கேளு! அவர் நிச்சயமா செய்வாரு... குழந்தைங்க வேண்டுதல் அப்படியே பலிக்கும்" என்று கூறி முத்தமிட்டுவிட்டு வெளியே வந்தாள்.



சிறு குழந்தையிடம் என்ன பேசுவது என்ற தெளிவுகூட இல்லாமல், சில பெரியவர்கள் மனமுதிர்ச்சியின்றி இருப்பதை நினைத்தால் மிகுந்த வருத்தமாக இருந்தது.

**அ**ன்று, சகி வீட்டிற்கு வந்தபோது, யுகேனுக்கு அம்மை போட்டிருப்பதாகவும், இன்று தானே அவனை கவனித்துக் கொண்டதாகவும் சாரதா கூறினார்.

"சாதாரண மணல்வாரி அம்மைதான்... உடம்பெல்லாம் ஒரு மாதிரி இருக்கு... 'மெஸ்' சாப்பாட்டை நிறுத்த சொல்லிட்டேன். நானே ஒரு பத்து நாளைக்கு சுத்தபத்தமா பத்திய சாப்பாடு தரேன்னு சொல்லியிருக்கேன்."

"அதுக்கு ஒத்துக்கிட்டாராம்மா?" கூர்மையுடன் கேட்ட மகளிடம், ஆமாம் என்று தலையசைத்தார்.

குளித்துவிட்டு மாடிக்குச் சென்றபோது கணபதி அருகில் அமர்ந்திருக்க, ஒரு பாயின்மேல் மெல்லிய வேட்டித்துண்டு விரிக்கப்பட்டு, அதில் படுத்திருந்தான் யுகேன்.

அவளைக் கண்டதும், பரந்து விரிந்த உறுதியான தன் வெற்று மார்பை, அருகிலிருந்த துண்டால் அவசரமாக போர்த்திக் கொண்டான்.

"வாம்மா– அம்மா சொன்னாங்களா? டாக்டரை வரவழைச்சிப் பாக்கணும்! உனக்குத் தெரிஞ்சவங்களை வரச் சொல்றியா? நம்ம குடும்ப டாக்டர் சீதாராமன் ஒரு நிகழ்ச்சிக்காக சென்னை போயிருக்காரு" கவலையுடன் கூறினார் அவர்.

"சரி அங்கிள்! எங்க ஆஸ்பத்திரி டாக்டர் வரதராஜன் இருக்காரு– அவரை வரச்சொல்றேன்" என்றவள், யுகேனிடம் திரும்பினாள்.

"இப்ப எப்படி இருக்கு? பரவாயில்லையா?" கனிவுடன் கேட்டாள்.

பார்வையைத் தழைத்துக்கொண்டவன், "ம்..." என்றான் மெதுவாக.

**'உள்ளம் என்பது கவலைகளை நிரப்பும் குப்பைத் தொட்டி அல்ல...**

**அழகிய எண்ணங்களை இனிதாய் நிரப்பும் பூந்தொட்டி!'**

லியானார்டோ டாவின்சியின் வரிகளைப் பற்றி அவனிடம் கூற வேண்டும்போல் இருந்தது.

ஆனால், எதுவும் பேசாமல் அமைதியாகக் கீழிறங்கி வந்தாள் அவள்.

தன்னால் அவனை.. அவன் மனதிலிருக்கும் தேவையில்லாத குழப்பங்களை மாற்ற முடியுமா?

உள்ளே விடை தெரியாத பல கேள்விகள்!

## 4

அன்றிரவே யுகேனை வந்து பார்த்த வரதராஜன், மருந்துகள் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

கணபதியே எல்லாவற்றையும் வாங்கிவந்து கொடுத்துவிட்டு அவனுக்குத் துணையிருந்தார்.

இரவு வேளைகளில் அவர் உடனிருக்க, பகல் நேரத்தில் சாரதா பார்த்துக்கொண்டார்.

ஒரு நாள், இரவு வேலை முடிந்து வந்து உறங்கிய சகி, மதியம் எழுந்து பார்த்தபோது, சாப்பாட்டு மேஜையில் எல்லாம் தயாராக இருந்தன.

சாப்பிட்டுவிட்டு மாடிக்குச் சென்றபோது, யுகேந்திரனின் அருகில் தரையில் அமர்ந்து மாரியம்மன் தாலாட்டைப் படித்துக் கொண்டிருந்தார், சாரதா.

சப்தமின்றி அருகில் சென்று அமர்ந்தவள், கண்மூடிப் படுத்திருந்தவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு அவர் படித்து முடித்ததும், முன் அறைக்குச் சென்று விஷாலைப் பற்றியும், ராஜகுமாரைப் பற்றியும் வருத்தத்துடன் சாரதாவிடம் எப்போதும்போல் பேசிக்கொண்டிருந்தாள்.

கண்கள் உறங்குவதுபோல் மூடியிருந்தாலும், அவள் பேச்சைக் கேட்டபடி இருந்த யுகேனுக்குள் அவளுடைய மனிதநேயமும், பரோபகாரமும் பெரும் வியப்பைத் தூண்டுவதாய்!

தினமும் பத்தியமாக சமைத்து, ஒரு மகனைப்போல் கவனித்துக்கொண்ட சாரதாவின் பரிவும், அன்பும் சமீபகாலமாக அவனிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

சிறு வயதிலிருந்தே விடுதியில் வளர்ந்து பழகியவனுக்கு, அந்த அனுசரணையான அணுகுமுறை புதியதாய்!

இப்போதெல்லாம் சகியின் மருத்துவமனை பற்றிய பேச்சுகளை, அவனும் ஆர்வத்துடன் கேட்க ஆரம்பித்திருந்தான்.

பத்தாம் நாள் அவனுக்கு தலைக்கு ஊற்றுவதற்கு சாரதா எல்லா ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்தார்.



முறைப்படி அவனுக்குத் தலைக்கு ஊற்றியபிறகு, கணபதியிடம் பார்த்துக்கொள்ளும்படிக் கீழே வந்து சாப்பாடு தயாரிக்க ஆரம்பித்தார்.

அன்று, மருத்துவமனையில் இரவுப்பணி முடிந்து ராஜகுமாரின் அறைக்குச் சென்ற சகி– அங்கு ஆனந்தை எதிர்பார்க்கவில்லை.

அவளைக் கண்டதும், முகம் பிரகாசிக்க புன்னகையுடன் எழுந்தான் அவன்.

"ராஜ்குமார் என்னோட நண்பன்! அன்னிக்கு நான் பாக்க வந்தப்ப நீங்க 'டியூட்டி'யில இல்லை.. அவங்கம்மா இன்னிக்கு கோவிலுக்கு போயிட்டு வரேன்னாங்க.. அதான், நான் கூட இருக்கேன்" என்று விளக்கினான்.

"என்ன ராஜ்குமார்... எப்படி இருக்கீங்க? இன்னிக்கு நான் உங்க கூடக் கொஞ்சம் பேசலாம்னு நினைக்கிறேன்.. பேசலாமா?" 'பிபி'யை சரிபார்த்தபடிக் கேட்டாள்.

அவன் பதில் கூறாமல், சலனமின்றி இருந்தான்.

"ம்..! மனசார நேசிச்ச பொண்ணு இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மனசு சுக்குநூறா உடைஞ்சுதான் போயிடும்.. நான் இல்லேங்கலை! ஆனா, அதுக்கும்மேலே வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கே! வாழ்க்கையில நாம பிறக்கும் போதிலிருந்து, நம்மகூட இருக்கிறவங்க அப்பா– அம்மா!" அதை மறந்துட வேண்டாமே..!"

"காதல் உயர்வானதுதான்! ஆனா அந்த உணர்வு உங்களை ஆக்கிரமிச்சி ஒரு வருஷம் இருக்குமா? அந்தக் காதல் நிறைவேறலைன்னு அதுக்குக் கொடுக்கிற மரியாதைய, நீங்க பிறக்கலையேன்னு வருத்தப்பட்டு, தவமா தவமிருந்து பத்துவருஷம் கழிச்சி நீங்க பிறந்தப்புறம், உங்களை ஒரு பொக்கிஷமா வளர்த்திருக்காங்களே உங்கம்மா.. அவங்களுக்கு கொடுத்திருக்கலாமே!

"அந்த அன்பான உறவை, உங்களை ஒரு நல்ல மனிதரா உயர்ந்த பண்புகள் உள்ளவரா, ஒரு சின்ன தோல்வியைக்கூட தாங்க மனசில்லாம இப்படி முடிவெடுக்கிற, ஒரு மென்மையான மனிதனா உருவாக்கின அவங்களை, நீங்க எப்படி மறந்தீங்க சார்?

"ஒருத்தர் உங்களை ஏமாத்தினா, அவங்களுக்கு முன்னாடி நீங்க தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்ட வேணாமா? உங்க முன்னேற்றத்தைப் பார்த்துட்டு அவங்கதான் மனசுக்குள்ளே புழுங்கி சாகணும்.. அதுதானே நீங்க அவங்களுக்குத் தர்ற நிஜமான, சரியான தண்டனை!

"துரோகம் பண்ணினவங்களே தைரியமா வாழுறப்ப, தப்பே

செய்யாத நீங்க ஏன் சார் சாகணும்? வாழ்க்கையில நமக்குன்னு ஒரு குறிக்கோள் இருக்கணும்.. அதை அடையணும்னு வெறியோடு பாடுபடணும்..

"காதல்தான் உங்க எதிர்கால லட்சியமா...? ஹ்ம்.. இந்த உலகத்தில எதுவுமே சாகவதில்லைங்கறப்ப, இந்தக் காதல் பிரச்சினை மட்டும் சாகவதமா என்ன..? நீங்க கொஞ்சம் அவகாசம் குடுத்தா, மேகம் மாதிரி, இதுகூட கலைஞ்சி போயிடும்!

"ஒருத்தர் செத்துட்டதால எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துடும்னா, சாவு ஒண்ணுதான் அதுக்கு தீர்வுன்னா, இந்த உலகமே சுடுகாடாயிட வேண்டியதுதான்!

"உங்கக் காதலியோட குணம் முன்னாடியே தெரிஞ்சதேன்னு சந்தோஷப்படுங்க.

"இப்படி நிறம் மாறுற ஒரு பொண்ணு நமக்கு தேவையில்லை.. நாம அவளுக்கு முன்னாடி பெரிய ஆளா உயர்ந்து காட்டணும்கிற உறுதியை வளர்த்துக்கங்க.

"மனுஷனுக்கு, காயம், வலி எல்லாம்கூட ஒரு உணர்வுதான்! அதுவும் மனசுல அடிபடுறப்ப ரொம்பவே வலிக்கும்தான்!

"ஆனா, வலியை தாங்கப் பழகிக்கணும்.. ஒரு நிமிஷம் உங்க பிரச்சினையை யாரோ ஒருத்தரோடப் பிரச்சினையா விலகி நின்னு பாருங்க.. உடனே தைரியமா முடிவெடுக்கலாம்.

"கொஞ்சநாள் முன்னாடி சில சின்னப் பொண்ணுங்க... பிரபலமானவங்க தற்கொலை பண்ணிக்கிட்டாங்க..! பாவம், அவங்க இறந்த சோகத்துல அவங்க குடும்பமே ஆடிப்போயிடுச்சி..

"நமக்குப் பிரியமானவங்களுக்காக வாழணும்னு நினைச்சா, இந்த எண்ணமே வந்திருக்காது..

"அவங்களுக்கெல்லாம் நிச்சயமா தம்பி- தங்கைங்க இருப்பாங்க... அவங்களோட எதிர்காலத்தை இவங்க மறந்துட்டாங்க.. இப்ப சிலுவைய சுமக்கப் போறது அவங்கதான்!

"வாழ்க்கையே ஒரு சவால்தான்! ஒவ்வொரு சவாலும் தனக்குள்ளே உங்களுக்கான வெகுமதியையும், பரிசையும் இறுக மூடி வெச்சிருக்கு.. முயற்சி செஞ்சா, அந்தக் கதவைத் திறந்திட்டா- அதை அடைஞ்சிடலாம்.

"இனிமே உங்களை நான் புது ராஜ்குமாரா பாக்கணும்.. நான் சின்னப் பொண்ணுதான். இது நிச்சயமா புத்திமதி இல்லை.

"ஒரு சின்னக்கோரிக்கை! உங்களை ஒரு ராஜகுமாரனா நினைக்கிற உங்க அம்மாவுக்கு நீங்க மட்டும்தானே? அவங்களைப்



பத்து போயிங்க.. ஓய்வு எடுங்க.. ரொம்ப போரடிச்சிட்டேனோ.. நான் வரேன்.. உடம்பைக் கவனிச்சுக்கங்க."

புன்னகையுடன் கூறிவிட்டுத் திரும்பினாள், ஆனந்தப்பிரமிப்புடன் விழிகள் கசிய, அவளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

அவளிடம் விடைபெற்றபோது, ராஜ்குமாரின் விழிகளில் புதிதாய் ஒரு மின்னல் தெரிவதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

வெளியில் வந்தவுடன், வேகமாகப் பின்தொடர்ந்து வந்து அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டான் ஆனந்த்.

"சசி! நான் உங்களை ரொம்ப நேசிக்கிறேன். உங்களைப் பார்த்த நிமிஷத்துல இருந்து நீங்கதான் எனக்கு மனைவியா வரணும்னு விரும்பறேன்" உணர்ச்சிகள் நிரம்பியகுரலில் கூறினான்.

சட்டென்று பரவிய விதிர்ப்புடன் அவனிடமிருந்து கையை விடுவித்துக்கொண்டவளுக்கு, மனமும்.. உடலும் ஒருசேரப் பதறிப்போயின.

"சாரி! நீங்க நினைக்கிற மாதிரிப் பொண்ணு நான் இல்லை.. எனக்கு காதல் மேலெல்லாம் சுத்தமா நம்பிக்கையே இல்லை.. உங்க மனசை அலைபாய விடாதீங்க.. உங்களுக்கேத்த பொண்ணை பாத்து கல்யாணம் செஞ்சிக்கங்க.."

அழுத்தமாகக் கூறிவிட்டு வெளியேறினாள் சசி.

ஆனால், கூடிய சீக்கிரமே தானும் காதலெனும் பொன்வீதியில் வலம் வரப்போவதை அவள் அறியவில்லை.

அன்று வீட்டிற்குச் செல்லும்வரை, ஏனோ இதயம் படபடத்தபடி இருந்தது.

**அ**ன்று மாலை சாரதாவுடன் மாடிக்குச் சென்றபோது, உடம்பிலிருந்த சிறுபுள்ளிகள் குறைந்து, தலை குளித்துவிட்டு ஓய்வாக அமர்ந்திருந்தான் யுகேன்.

"எப்படி இருக்கீங்க? இப்போ பரவாயில்லையா...?" என்று விசாரித்தவுடன், முதன்முதலாக அவன் இயல்பாய் புன்னகைத்த போது, மனதில் சட்டென்று ஒரு பூ மலர்ந்தது.

இதயத்தின் ஆழத்திலிருந்து எழும்பி வந்த அந்தப் புன்னகை, அவன் முகத்தையே பெரிதும் அழகாக்குவதைக் கண்டாள்.

"ம்.. ஆன்ட்டியோட கவனிப்புல நல்லா இருக்கேன்.. இன்னிக்கு என்ன நடந்தது, உங்க ஆஸ்பத்திரியிலே உங்க அம்மா கிட்ட சொல்லிட்டாங்களா?" ஆர்வத்துடன் கேட்டான்.

வியப்புடன் நிமிர்ந்து, "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று





வினவினாள் அவள்.

"தினம், உங்க அம்மாவோடு 'ஹால்'லே நீங்க பேசறதைக் கேட்டுட்டுதானே இருக்கேன்."

கேலியாக ஒற்றைப் புருவம் உயர்த்திக் கூறினான்.

"ஓ-நான் தினமும் பேசி உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேனா? சாரி... நீங்க தூங்கறீங்கன்னு நினைச்சேன்!"

"பரவாயில்லை. இன்னிக்கு ஏதும் பரபரப்பு செய்தி இருக்கா?"

சட்டென்று, ஆனந்தின் ஞாபகத்தில் மனதிற்குள் ஒரு பதற்றம் விரவிப் பரவியது.

"இல்லை! அப்படி ஏதும் இல்லை. நான் கீழே போறேம்மா... நீங்க அப்புறம் வாங்க" கூறிவிட்டுக் கீழே சென்றுவிட்டாள்

ஆனால் இதயம் வெகுநேரம் தாறுமாறாகத் துடிக்க, தன்னையும் அறியாமல் யுகேனிடம் தன் மனதை இழக்கத் தொடங்கியிருப்பது புரிந்தது.

ஆனந்திடம் மதியம் கூறிய வார்த்தைகள், பெரும் கேள்விக்குறியாய் எழுந்து கண்முன் நின்றன.

குழப்பத்தில் மனம் சோக வலை பின்ன, உள்ளே துள்ளும் சுறா மீனாய் யுகேன் இருந்தான்.

அவளுடைய தற்காப்பு வலைகளை வேகமாக அறுத்து, மூர்க்கத்துடன் மனதிற்குள் உட்புகுந்தான்.

சிறுசிறு நீர்த்துளிகள் சேர்ந்து ஓடை உருவாவதுபோல், அவனுடைய நினைவுகள் தனக்குள் வித்தாய் விழுந்து- மெல்ல மெல்லத் துளிர்விட்டு- இப்போது விருட்சமாகி இருப்பது புரிய, தவித்துப்போனாள் சகி!

அப்போது எங்கிருந்தோ காற்றில் கலந்து வந்த அந்தப் பாடல் அவளுக்குள் சிலிர்ப்பாய் ஊடுருவியது.

**"காதல் வந்ததும் கன்னியின் உள்ளம்**
**காதலை யாருக்கும் சொல்வதில்லை**
**புத்தகம் மூடிய மயிலிறகாக**
**புத்தியை மறைப்பாள்... தெரிவதில்லை!"**

மனம் படபடக்க, வயிற்றில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் ஒன்றாய் சிறகடிப்பதைப்போல் ஒரு அவதியான உணர்வு!

தன் முகமே தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற பயத்துடன், ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றவள், இரவு சாப்பிடுவதற்குத்தான் வெளியில் வந்தாள்.

நாட்கள் விரைந்து போகும் நதியாய் செல்ல– ராஜ்குமாரும், விசாலும் 'டிஸ்சார்ஜ்' ஆகி சென்றுவிட்டனர்.

புதிய நோயாளிகளின் வருகை, சகியை நிறக நேரமின்றி வேலையில் ஆழ்த்தியது.

ராஜ்குமார் 'டிஸ்சார்ஜ்' ஆவதற்கு முன்பு, அவனுடைய அம்மா சகியின் கைகளைப் பிடித்துக்கொண்டு அழுதுவிட்டார்.

"அன்னிக்கு நான் கோவிலுக்கு போயிருந்தப்ப, என் பையனுக்கு நல்ல புத்திமதி சொன்னதா ஆனந்த் தம்பி சொன்னாரு. ரொம்ப நன்றிம்மா!

"என் மகன் வாழ்க்கையை புரிஞ்சிக்கிட்டான்... இனிமே எதுக்காகவும் உன்னை விட்டுட்டுப் போகமாட்டேன்மான்னு உறுதியாக சொல்லிவிட்டான்" கண்ணீருடன் விடைபெற்றார்.

ஒரு நோயாளிக்கு நோய் தீவிரமடையக் காரணம், மனசுதான் என்பது புரிந்தது.

தனக்கு குணமாகாதோ என்ற நம்பிக்கையின்மையும், தனக்கு யாருமே இல்லை என்ற உணர்வும்தான் அவர்களை பலவீனப்படுத்தும்.

உனக்கு நானிருக்கிறேன் என்ற ஒரு பாதுகாப்பு உணர்வையும், நீ சரியாகிவிடுவாய் என்ற நம்பிக்கையும் ஏற்படுத்திவிட்டால், அனைவரையும் குணப்படுத்திவிடலாம் என்று சகிக்கு தோன்றியது.

அவ்வப்போது, மருத்துவமனைக்கு வந்து அவளைச் சந்தித்து தன் காதலைக் கூறிய ஆனந்தை நினைத்தால்தான் கோபமாக வந்தது.

அன்றும், அதுபோல் அவன் சாப்பாட்டு நேரத்தில் வந்து நிற்க, தர்மசங்கடத்துடன் அவனைப் பார்த்தாள் சகி.

முகத்தை மறைத்த தாடியும், மெலிதான சோகம் சுமந்த கண்களும், அவன் உருக்குலைந்து இருப்பதை அறிவித்தன.

'இவன் ஏன் இவ்வளவு சொல்லியும் புரிந்துகொள்ளாமல் என்னை வெறித்தனமாக நேசித்து தன்னையே வதைத்துக்கொள்கிறான்? இவனை மாற்றவே முடியாதா?' மனம் பெரும் ஆயாசமானது..

இன்னொரு ராஜ்குமார் உருவாகிவிடக்கூடாதே என்றும் மனம் பரிதவித்தது.

"ப்ளீஸ் ஆனந்த்! இனிமே என்னைத் தேடி இப்படி வராதீங்க..என் மனசுல இப்ப வேற ஒருத்தர் இருக்கார்.. என்னைப் புரிஞ்சுக்கங்க. இதுதான் நீங்க என்னைப் பாக்கற கடைசி தடவையா இருக்கணும்" அழுத்தமாகக் கூறிவிட்டு ஒரு நோயாளியின் அறைக்குள் சென்றுவிட்டாள் அவள்.



அடிபட்ட முகத்துடன் சென்றவன், மிகவும் உடைந்துபோய் இருந்தான்.

சிறிது காலமாகவே, தன் மகனிடம் பெரும் மாற்றங்களை கவனித்த கோதண்டம் அன்று முழுவதும் அவன் சாப்பிடாமல் இருக்கவே அன்றிரவே தனிமையில் அவனிடம் மனம் திறந்து பேசினார்.

காதல் விஷயத்தில் அவன் மிகவும் காயப்பட்டிருப்பது புரிந்தது. அவன் கூறியதைக் கேட்டதும், எப்படியாவது சகியைத் தம் மருமகளாக்கிக்கொள்ளும் வேகம் வந்தது.

ஒரு முடிவுடன்– தான் அவர்கள் வீட்டில் சென்று பேசுவதாக கூறி, மகனை சமாதானப்படுத்தினார் அவர்.

பிறகு யோசனையுடன், "அந்தப் பொண்ணு வேற யாரையாவது விரும்புறாளா ஆனந்த்?" என்று கேட்டார்.

"ம்...தெரியலைப்பா!" என்றான் ஆனந்த், உண்மையை கூற மனமின்றி!

"சரி.. நீ கவலைப்படாதே! நான் நாளைக்கே அவங்க வீட்டுல போய் பேசறேன்."

அவர் தீர்மானமாகக் கூறியபிறகு, அன்றிரவுதான் நிம்மதியா உறங்கினான் ஆனந்த்.

இதுவரை, தான்கேட்டு எதையுமே கோதண்டம் மறுத்ததில்லை என்றாலும், ஒரு பயத்துடனேதான் அவன் தன் காதலை கூறினான்.

ஆனால், அவர் உடனே ஒத்துக்கொண்டது மனதிற்குப் பெரும் இதமாக இருந்தது.

நாளை, தன் காதலுக்கு சாவுமணி அடிக்கப்போவதை அறியாமல், பாவம்.. நிம்மதியாக உறங்க ஆரம்பித்தான், ஆனந்த்.

## 5

அன்று மருத்துவமனையில் இருந்து வந்ததுமே, ஆனந்த் தன்னிடம் காதலிப்பதாகக் கூறியதை, சாரதாவிடம் கூறினாள், சகி.

தான் அவனை மறுத்ததையும், சமீப காலமாகவே அவன் தன்னைத் தொடர்ந்து வற்புறுத்துவதையும் பற்றிக்கூறினாள்.

"எப்ப நடந்தது சகி இது! எல்லாத்தையும் சொல்ற நீ, இதை மட்டும் ஏன் என்கிட்ட இருந்து மறைச்சே?" பதற்றத்துடன் கேட்டார்.

"மறைக்கணும்னு இல்லம்மா... நீங்க யுகேனுக்கு உடம்பு சரியில்லாம ரொம்ப 'பிஸி'யா இருந்தீங்க.

"இது சும்மா! ஆனந்த் என்னை மறந்திடுவார்னு நான் நினைச்சேன்.

இப்பதான் புரியுது. அவர் எவ்வளவு தீவிரமா இருக்காருன்னு. ஆனா இன்னிக்கு முடிவா சொல்லிவிட்டேன்" என்றாள் யோசனையுடன்.

"எனக்கென்னவோ பயமா இருக்கு சகி! அவங்கப்பா அரசியல்வாதி வேற! நான் இதுபற்றி அப்பாகிட்ட இன்னிக்கே சொல்லிவிடுறேன்" தவிப்புடன் கூறியவரைத் தடுத்தாள் அவள்.

"நீங்க நினைக்கிற மாதிரி இல்லம்மா அவரு! ரொம்ப நல்ல மனுஷர்... அவரால எந்தப் பிரச்சினையும் வராது" என்று ஆறுதல்படுத்தினாள்.

அன்றிரவு திடீரென்று கோடை மழை பெய்ய ஆரம்பிக்க, சுகமான அந்தச் சாரலை ரசித்தபடி ஜன்னலருகே நின்றிருந்தபோதுதான், தன்னை எண்ணி அவளுக்கே வியப்பாய்!

தன் மனதை யாருமே அசைக்கமுடியாது என்று ஆழமாய் நம்பியிருக்க, தனது இதயத்தில் அவன் எப்படி நுழைந்தான் என்பது புரியாத புதிராய்!

அவனிடம் அப்படி என்ன ஈர்ப்பு நிலை என்று யோசித்தபோது, அவன் தன்னிடமிருந்து பெரிதும் விலகியே இருந்ததும், அழகான பெண்களிடம் ஆண்களுக்கே எழும் இயல்பான– அறிந்து கொள்ளும் ஆர்வம், அவனிடம் சிறிதுகூட இல்லாதிருந்ததும் நினைவில் வந்தன.

கம்பீரத்துடன் அவன் பழகும் முறையும், தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்ளாத அமைதியான மனிதநேயமும், அந்தப் பாராமுகமுமே, தன்னை ஈர்த்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அந்த நிமிடம், உன்னைக் காதலுடன் திரும்பிப் பார்க்க வைப்பேன்... எனக்காக ஏங்கி உன்னை உருக வைப்பேன் என்ற வைராக்கியமும், வேகமும் மனதில் வந்தன.

**ம**றுநாள் காலையிலேயே அவர்கள் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து கோதண்டம் வந்து இறங்கினார்.



மருத்துவமனைக்குக் கிளம்பிக்கொண்டிருந்தவள், அவரைக் கண்டதும் வாசலுக்கு வந்து வரவேற்றாள்.

"வாங்க சார்... இப்ப எப்படி இருக்கீங்க?" என்றபடி உள்ளே அழைத்துச் சென்றபோது, கிருஷ்ணனும் அடையாளம் தெரிந்து அவரை வரவேற்றார்.

சாரதாவைத்தான் பெரும் பயம் தொற்றிக்கொண்டது.

"என்னம்மா... எப்படி இருக்கே? உன் வேலை எப்படி இருக்கு? நோயாளிகளுக்கு எது தேவைன்னு தெரிஞ்சு அதைச் செய்யறதில சகி ஒரு தேவதை மாதிரி மிஸ்டர் கிருஷ்ணன்! அத நான் என் அனுபவத்தில் பார்த்திருக்கேன். இப்படி ஒரு பெண்ணைப் பெற நீங்க குடுத்து வச்சிருக்கணும்."

அவர் கூறும்போதே, வாசல் பக்கம் யுகேன் வருவது தெரிந்தது.

"வாங்க யுகேன்... உள்ளே வாங்க..." கிருஷ்ணன் அவனை அழைக்க–

"பரவாயில்லை அங்கிள்! யாரோ 'கெஸ்ட்' வந்திருக்காங்க போலருக்கு– நான் அப்புறமா வரேன்..." என்றபடிக் கிளம்பினான் அவன்.

"உள்ளே வாங்க... தம்பி யாரு?" கோதண்டம் அழைத்தபடி கேட்டார்.

"எங்க வீட்டில மாடியில குடியிருக்காரு... என் நண்பரோட மகனுக்கு நண்பர்! ஒரு ஆராய்ச்சி விஷயமா இந்த ஊருக்கு வந்திருக்காரு! வாங்க யுகேன்... உக்காருங்க..." வரவேற்றார் கிருஷ்ணன்.

பிறகு, "இவர் மிஸ்டர் கோதண்டம்... இந்த ஊரிலேயே பெரிய அரசியல் பிரமுகர்!" என்று இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"சரி! நான் நேரடியாவே விஷயத்துக்கு வரேன்... என் சின்ன பையன் ஆனந்த் உங்க பொண்ணை உயிரா விரும்பறான்... அதான் உங்க முடிவையும் சகியோட விருப்பத்தையும் தெரிஞ்சுட்டுப் போகலாம்னு நான் நேரிலேயே வந்தேன்..." புன்னகையுடன் கூறினார் அவர்.

கிருஷ்ணனுக்கு விஷயம் தெரியாததால் அதிர்ச்சியும், குழப்பமுமாக நிமிர்ந்தார்.

"அப்போ சகி... நீ...?" என்று அவர் தடுமாற, "ஒரு நிமிஷம் அங்கிள்! அப்பா... ப்ளீஸ்! கொஞ்சம் வாங்களேன்..." என்று

அழைத்தாள் சகி.

சட்டென்று முகம் மாறிவிட எழுந்த யுகேன், "சரி நீங்க பேசிட்டிருங்க சார்! நான் கொஞ்சம் வெளியில போகணும்.. வேலையிருக்கு" என்று கிளம்பிவிட்டான்.

உள் அறைக்கு வந்ததும் அவன் எல்லா விபரத்தையும் கூறியவுடன், "அப்போ நீ அவர் மகனை விரும்பலை இல்லை!" நிம்மதிப் பெருமூச்சுடன் கேட்டார் கிருஷ்ணன்.

"இல்லைப்பா... அதை அவர்கிட்டே நேத்தே நான் சொல்லிட்டேன்.. ஆனா ஏன் புரிஞ்சிக்க மாட்டேன்றாருன்னு தெரியலை...!"

"இதெப்படி அவர்கிட்ட சொல்றதும்மா! அவர் பெரிய அரசியல் பிரமுகர் வேற.. எனக்கு பயமா இருக்கு.. மறுத்தா அதை எப்படி எடுத்துப்பாரோ..!" குழப்பத்துடன் கூறினார்.

"சரிப்பா... நானே பேசறேன்! ஆனா அவர் நீங்க நினைக்கிற மாதிரி இல்லை.. ரொம்ப நல்லவரு.. நியாய- அநியாயங்களை உணர்ந்தவர்! வாங்க.. நானே சொல்லிடறேன்.." என்று ஹாலுக்கு அழைத்து வந்தாள்.

தன்னுடைய ஆழ்மனதில் வேர்விட்டு நெஞ்சம் முழுவதும் அகலக் கிளை பரப்ப ஆரம்பித்திருந்த காதலை இனி மறைக்க முடியாதென்பது அவளுக்குப் புரிந்தது.

புன்னகையுடன் அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தார் அவர்.

"அங்கிள்! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க.. எனக்கு உங்க பையன் மேல அது மாதிரி எந்த அபிப்பிராயமும் இல்லை... அதை நிறையதடவை ஆனந்த் கிட்ட நான் சொல்லிட்டேன்...! நீங்களாவது என்னைப் புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன்.. சாரி!" என்றாள், மெல்லிய குரலில்.

அவளையே பார்த்திருந்த கோதண்டம் தொண்டையை செருமியபடி பேச ஆரம்பித்தார்.

"சகி! வாழ்க்கையில எல்லாருடைய விருப்பங்களும் நிறைவேறுவதில்லை. அதே மாதிரி எல்லா விஷயங்களும் நாம் எதிர்பார்த்த மாதிரி நடக்கறதில்லை... எனக்கு இப்ப தெரிய வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான்!

நீ ஆனந்தை வெறுக்கறியா? இல்லை.. வேற யாரையாவது விரும்பறியா? நீ என்ன சொன்னாலும் நான் ஒத்துக்கிறேன்.. ஆனா சரியான காரணம் இருக்கணும்! உன் முடிவுதான் எனக்கு முக்கியம்.



ஏன்னா, வாழப் போறது நீதான்!" கூர்மையாகக் கேட்டார்.

"அங்கிள்! நான் என்னை அறியாமலே ஏதோ ஒரு விதத்துல ஆனந்தை பாதிச்சிருந்தேன்னா என்னை மன்னிச்சிடச் சொல்லி அவர்கிட்ட சொல்லிடுங்க... நான் அவரை வெறுக்கலை...! மதிக்கிறேன்! ஆனா, வேற ஒருத்தரை மனசார விரும்புறேன் அங்கிள்.. அதான்."

அவள் முடிப்பதற்குள் கிருஷ்ணனின் முகத்திலும், சாரதாவின் முகத்திலும் பெரும் அதிர்ச்சி அலையாகப் பரவியது.

ஒரு வறண்ட புன்னகை உதடுகளில் படர, "நான் இதை எதிர்பார்க்கலை சகி! பரவாயில்லைம்மா.. ஆனா அந்தப் பையன் யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா? உங்க அம்மா- அப்பா முகத்தைப் பாத்தா, அவங்களுக்கும் இது தெரியாதுன்னு தோணுது..! அப்படித்தானே?" சோர்ந்த குரலில் கேட்டார் அவர்.

"ம்... இப்ப வந்துட்டுப் போனாரே அந்த யுகேன்தான் அங்கிள் நான் விரும்பறவரு! நீங்க சொன்ன மாதிரி அம்மா- அப்பாவுக்கு இதுவரைக்கும் தெரியாது.. நானே சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன்... அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு..." தர்மசங்கடமான முறுவலுடன் கூறினாள்.

அந்த நிமிடம் அவருக்கு, சகியால் யாரையும் வெறுக்கவோ, மற்றவரின் மனம் புண்படும்படிப் பேசவோ முடியாதென்பது புரிந்தது.

தன் விருப்பத்தை உறுதியாக, ஆணித்தரமாக கூறினாலும் அதிலும் ஒரு இதம் இருப்பதும் தெரிந்தது.

ஆனாலும் அவளின் மறுப்பு தன் குடும்பத்துக்கு பெரிய இழப்புதான் என்பதை புரிந்துகொண்டார் அவர்.

"சரிம்மா நான் கிளம்புறேன். இன்னொருத்தரை விரும்பற பொண்ணை கட்டாயப்படுத்தறது பெரிய பாவம்! அத நான் கட்டாயமா செய்யமாட்டேன்.

அதோட, என் தங்கச்சி பொண்ணைத்தான் ஆனந்துக்குன்னு சின்ன வயசில இருந்து முடிவு பண்ணி இருந்தோம். ஆனந்த் தான் மாறிட்டான். ஆனா, ஆண்டவன் முடிவே அதுதான்போலிருக்கு.. நான் அவனை சமாதானப்படுத்தி மாத்த முயற்சி பண்ணுறேன்..!

நான் வரேன் கிருஷ்ணன்! வரேம்மா.." உறைந்துபோய் சிலையாய் நின்றிருந்தவர்களிடம் கைகூப்பி விடைபெற்றுக் கிளம்பினார்.

அவரை வாசல்வரை வந்து வழியனுப்பியவன் உள்ளே வந்தபோது- அம்மாவையும், அப்பாவையும் ஏறிட்டுப் பார்க்கவே

மிகவும் கஷ்டமாக இருந்தது.

குற்றஉணர்வுடன் தவித்தவளுக்கு, எந்த விஷயமுமே மற்றவர்களுக்கு என்று வரும்போது ஒருவிதமாகவும், தமக்கென்று வருகையில் வேறுவிதமாகவும் மனிதனை செயல்பட வைப்பது புரிந்தது.

"அப்பா! நான் இதை முதல்லே உங்கிட்டதான் சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன்... ஆனா சந்தர்ப்பம் இப்படி?" மெதுவாக நிறுத்தினாள்.

அவள் அப்பா செல்லம் என்பதாலும், கிருஷ்ணன் இதை எதிர்பார்த்திராததாலும், அவளுடைய பதில் அவரை வெகுவாக பாதித்திருப்பது புரிந்தது.

"அப்பா!" என்று அருகில் சென்றவளை அணைத்துக்கொண்டார் அவர்.

"நீ தப்பான முடிவை எடுக்கமாட்டேன்னு தெரியும்டா... ஆனால் புகேந்திரனுக்கும் இதிலே, விருப்பமிருக்கா?" ஒரு தகப்பனுக்கே உரிய தவிப்புடன் கேட்டார்.

"தெரியலைப்பா...! இனிமேதான் பேசணும்..." அவள் கூறியவுடன் இருவரும் பதைத்துப் போயினர்.

"அப்படி அந்தப் பையன் ஒத்துக்கலைன்னா..." சாரதா பயத்துடன் கேட்டார்.

"ம்... கடைசிவரைக்கும் இதே மாதிரி உங்களோடவே இருந்துடுவேன்" விரக்தியை மறைத்து கண்களில் தெரியாத புன்னகையுடன் கூறியவளைப் பார்த்தால், இருவர் மனதிலும் அவளுடைய விருப்பம் நிறைவேற வேண்டுமே என்ற பிரார்த்தனையும், தவிப்பும் நிறைந்தன.

அன்று கிருஷ்ணன் அலுவலகம் செல்லாததால் சசியும் விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்தாள்.

அன்றைய பொழுது மவுனமாகவே கழிய, இரவு மொட்டை மாடியில் அமர்ந்து எதிர்காலமில்லாத தன் காதலைப் பற்றி, கண்மூடி யோசித்துக்கொண்டிருந்தாள் சசி.

அந்த நிமிடம், அவன் தோளில் முகம் பதித்தபடி மொட்டை மாடியில் தங்கச்சாயம் பூசிய முழுநிலவை ரசிக்க ஆசை வந்தது.

உறுதியான காலடிச் சப்தம் உணர்வுகளை உசுப்ப- சட்டென்று விழித்தபோது, அவளுடைய கனவுகளின் நாயகனே எதிரில் நின்றிருந்தான்.

"வாழ்த்துக்கள்! கல்யாணம் முடிவாகியிருக்கு போலருக்கு!" ஒருமாதிரிக் குரலில் கேட்டான்.



வேகமாக எழுந்தவள், "இல்லை... முடிவாகலை..." என்றபோது, ஏனோ அவனிடமிருந்து சீரான ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

"ஏன்... காலையில அந்த 'பிக் ஷாட்' வந்திருந்தாரு... எல்லாம் பேசி முடிவாகி இருக்கும்னு நினைச்சேன்... அன்னிக்கு நாம கோவில்ல பாத்த ஆனந்த்தானே?" யோசனையுடன் கேட்டான்.

"ஆமாம்...!"

"என்னாச்சு... அவங்க கேட்ட வரதட்சணையை உங்களால கொடுக்க முடியலையா?" கூர்மையாகக் கேட்டான்.

"இல்லை... எனக்கு விருப்பமில்லைன்னு நான் சொல்லிட்டேன்..."

"ஏன்... அந்தப் பையன் பாக்க நல்லாத்தானே இருக்கான்... பெரிய பணக்காரங்க வேற... இந்த ஊரில செல்வாக்குள்ள ஒரு குடும்பம்... ஆனந்த் நல்லாப் படிச்சிருக்கிறதா பிரபு சொன்னான்."

"இதெல்லாம் இருந்தா மட்டும் போதாது... முதல்லே மனசுக்குப் பிடிக்கணும்... அதுதான் முக்கியம்!" அழுத்தமாய் கூறினாள் சாகித்யா.

காதல் தவம் மட்டும் எந்நாளும் பொய்த்துப் போகாதென்பதையும், சாகா வரம்பெற்று வாழ்வின் இறுதிவரை துணைவரும் என்பதையும், இவன் என்றாவது புரிந்துகொள்வானா என்ற ஏக்கம் வந்தது அவளிடம்!

## 6

ஒருகணம் அவளையே ஆழமாக ஊடுருவியது அவன் பார்வை!

"அன்னிக்கு அவரோட கோவில்லே ரொம்ப சிநேகிதமா சிரிச்சுப் பேசிட்டிருந்தே! இப்ப பிடிக்கலைங்கிறே?" இடுங்கிய கண்களுடன் கேட்டான்.

அந்த நிமிடம், அவனுடைய விழிச் சாளரங்களின் வழியே அவன் மனதை தரிசிக்கலாமென்று மூச்சுக்காற்றாய் நுழைந்தும், வழிபுரியாது திகைத்து திணறித் திரும்பியது அவள் காதல்!

ஒரு பெருமூச்சுடன், "நட்புணர்வோடு பேசறது வேற... நேசிக்கிறது வேற! யார்கூட வேணாலும் நட்பா இருக்கலாம்... ஆனா மனசுக்கு பிடிச்ச ஒருத்தரை மட்டும்தான் விரும்ப முடியும்" அழுத்தமாக

கூறினான்.

"ஓஹோ… அப்ப நீ யாரையாவது விரும்பறியா?"

"ஆமாம்…" என்றவுடன், "அவன் பெரிய பணக்காரனா" ன்றான் யுகேன் கூர்மையுடன்.

"இல்லை… எங்களை மாதிரி நடுத்தர குடும்பம்தான்…"

"பணம் எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?"

"தெரியும்! ஆனா, பணத்துக்காக காதலை விலை பே ாடியாது… மனசுல ஒருத்தரை நினைச்சிட்டா, கடைசி வரைக்கு றுதியோடு இருந்து ஜெயிக்கணும்…!

என்னைப் பொறுத்தரைக்கும் அளவான ஆசைகளு நறைவான தேவைகள், நிறைவான ஆத்ம பலம்… அதான் எ ந்தோஷத்துக்கான காரணம்!

அதோடு, இதயம்கிறது ஒண்ணும் மாயாஜால பலன ல்லை… உடனே எழுதினவங்களை அழிக்கிறதுக்கு! கோபமாக கூறினாள்.

"காதலுக்காக தேடிவந்த வளமான வாழ்க்கையை தூக் றிஞ்சிருக்கே… அந்தக் காதல் கிறுக்கன் யாருன்னு நா தெரிஞ்சிக்கலாமா…?"

ஏளனக் குரலில் அவன் கேட்டபோது சகியின் நெஞ்ச கித்துப்போனது.

ஒருகணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், "அது நீங்கதான்" ன வேகமாகக் கூறிவிட்டுத் திரும்பிக்கொண்டாள்.

ஒரு கணம் உறைந்து நின்றவனின் உலகமே இயக்கமின்றி ஸ்தம்பித்ததைப் போல்!

அந்த பதில் பெரும் அதிர்ச்சியாய் வந்து சுனாமியாய் அவனைத் தாக்க, முகத்தை மெல்ல மெல்ல சுடும் சீற்றம் ஆக்கிரமித்தது.

"ஏய்…" சினத்துடன் அவள் கையைப்பிடித்துத் திருப்பினான் அவன்.

"உன் மனசுல நீ என்னைப்பத்தி என்ன நினைச்சிட்டிருக்கே? நீ கை காட்டின உடனே உன் காலடியில வந்து நான் விழுந்துடுவேன்னா?

ஹ்ஹ்ம்! பெண்களைப் பத்தி என்னோட கணிப்பு என்னன்னு தெரியுமா உனக்கு? பெண்கள் எல்லாருமே நயவஞ்சகிகள்… மோசக்காரிகள்…!

நான் இதுவரைக்கும் நல்ல பெண்களையே சந்திச்சதில்லை… என் வாழ்வில் ஒரு பொண்ணுக்கு இடமும் இல்லை… புரிஞ்சிக்க!"



பிருகமாய் உறுமினான்.

அவன் இரும்புப்பிடியாக அழுத்தப் பற்றியிருந்த கை சிவந்துவிட, அதன் வலியைவிட, சகியின் மனதில் சட்டென்று ஒரு வலி பரவியது.

அவனுடைய வார்த்தைகள் அவளை ஒடித்துப் போட்டன. வாழ்க்கையில் முதன் முதலாக 'ஓ'வென்று அழவேண்டும் போலிருந்தது!

ஆனந்தின் தவிப்பும், வேதனையும் இப்போது புரிந்தன.

ஆனால், எதற்காகவும் தன் மனதில் ஆழப் பதிந்த நேசத்தை விட்டுத் தர முடியாதென்று ஒரு உறுதி வந்தது.

வேகமாகக் கையை உதறிவிட்டு நிமிர்ந்தவள், "பெண்களைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? கடவுளாலே எல்லா இடத்துக்கும் நேரில் வரமுடியாதுன்னுதான் அம்மாவைப் படைக்கிறான். அவளோட அன்புக்கு எல்லாக் காயங்களையும் ஆற்றுகிற சக்தி உண்டு தெரியுமா?"

"ஹ்ஹ்ம்… தெரியாது… நீ சொல்ற மாதிரி அம்மாவை நான் பாத்ததில்லை… காயப்படுத்தற அம்மாவைத் தான் பாத்தேன்…" சுள்ளென்று கூறினான் அவன்.

"இருக்கவே முடியாது… உறவுகளோட அருமை உங்களுக்குப் புரியலை!"

"எனக்கு எல்லாரைப் பத்தியும் நல்லாத் தெரியும். உன் அறிவுரைக்கு நன்றி! அந்த ஆனந்தை கல்யாணம் செஞ்சுகிட்டு சந்தோஷமா இரு! இப்போ மனசு முழுக்க பெண்களின் துரோகம் தந்த காயத்தாலே ரணப்பட்டிருக்கிற என்னால ஒரு பொண்ணுக்கு சந்தோஷத்தையும், நிம்மதியையும் சத்தியமா தரமுடியாது" ஆழமான குரலில் கூறினான்.

"என்னை ஆனந்தை கல்யாணம் பண்ணிக்க சொல்ற உரிமை உங்களுக்குக் கிடையாது! என்னால உங்கக் காயத்தை நேசம்கிற மயிலறகு கொண்டு ஆத்த முடியும்… அன்பால சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை!"

"மன்னிக்கணும், என்னை தவறாக புரிஞ்சிக்கிட்டிருக்கே! என்னை எதாலயும் வளைக்க முடியாது. நேரத்தை விரயம் பண்ணாதே. நீ விரும்புறவனைவிட உன்னை விரும்புறவனை மணக்கிறதுதான் புத்திசாலித்தனம்! நான் இப்ப சாதாரணமானவன்… அந்த ஆனந்த் பெரிய பணக்காரன்… புத்திசாலித்தனமா நடந்துக்க."

...தைக் கசக்கிப் பிழிந்த வேதனையில் விழிக்குடங்கள் ததும்...

...களின் ஓரம் ஜனித்த கண்ணீர்த் துளிகளுடன் அவன் முக...யே ஒருகணம் ஆழமாக ஊடுருவினான் அவன்.

...ல ஒருத்தனை சுமந்துக்கிட்டு மனசார இன்னொருத்தனை ...வ நல்லவனா இருக்க முடியாது...!" சட்டென்று கூறிவிட்டு ...க் கீழே இறங்கிச் சென்றாள்.

...கையுடன் வந்த மகளைக் கண்டதும், சாரதாவின் மனம் ...ராய் உடைந்துபோனது.

...புளே என் குழந்தை நினைவு தெரிந்த நாளிலிருந்து ...மே அழுததில்லை... முதல் முதலாய் அழுகிறாள். ...யாத்தைப் போக்கி சந்தோஷத்தைக் கொடு' இறைவனிடம் ...சினார் அவர்.

...ன்றிரவு சாகித்யா ஒரு நிமிடம்கூட கண்ணயரவில்லை. ...வின் புறக்கணிப்பு அவளை வெகுவாய் பேதலிக்கச் ...ருக்க, அவனுடைய வார்த்தைகள் உயிரின் அடி ஆழம்வரை ...ய் தாக்கின.

...சந்தோஷத்தையும், தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் ...டு பிடுங்கி எரிகிற சக்தி அவனுடைய வார்த்தைகளுக்கு ...து புரிந்தது.

...ண்டு போன மனம் பாலையாய் வறண்டிருக்க, அவனுடைய ...க் தூறலுக்காக மனம் ஏங்கித் தவிக்க ஆரம்பித்தது.

...நாள் காலையில் அவளால் எழுந்திரிக்கவே முடியவில்லை. ...ி காய்ச்சல் வந்தவளைப் போல் படுத்திருக்க, கிருஷ்ணனும் வி...யமறிந்து வேலைக்கு செல்லாமல் கவலையுடன் தன் அ...றையிலேயே அடைந்திருந்தார்.

அவன் 'டிபன்' சாப்பிடாததால் இருவருமே பட்டினியாய் இருக்க, யுகேனும் தன் அறையிலேயே தனித்திருந்தான்.

மதியம் தொலைபேசி ஒலித்து, அந்த அமைதியைக் கலைத்தது. சாரதா எடுத்தபோது, மருத்துவமனையிலிருந்து நர்ஸ் சாந்தா பேசினாள்.

"சகி இருக்காங்களாம்மா! அவங்ககிட்ட முக்கியமான ஒரு விஷயம் பேசணும்" என்றாள்.

"சகிக்கு உடம்பு சரியில்லை... ஒரு நிமிஷம்!" என்றவர் 'கார்ட்லெஸ்'ஸை அவளிடம் கொடுத்தார்.



சாந்தா கூறியதைக் கேட்டதும் வேதனையில் முகம் கசங்கிவிட– "சரி.. உடனே வரேன்" என்று வைத்தாள்.

"என்னாச்சு சகி!" என்று கேட்ட சாரதாவிடம், "அந்தக் குட்டிப்பையன் விஷால் இறந்துட்டானாம்மா.. அவங்கம்மா எனக்கு சொல்லணும்னு ஆஸ்பத்திரிக்கு 'போன்' பண்ணியிருக்காங்க.. நானும், சாந்தாவும் போறோம்!" உடனே கிளம்பிச் சென்ற சகியைப் பார்த்தால் சாரதாவிற்கு கண்ணீர் வந்தது.

தனக்குக் கிடைத்த அன்பையும், அனுசரணையையும் மற்றவர்களுக்கும் அளித்து தன்னால் முடிந்த உதவிகளை ஓடி ஓடிச் செய்யும் தன் மகள் எதையுமே இதுவரை ஆசைப்பட்டுக் கேட்டதில்லையே... அவள் முதல் முதலாக விரும்பிய ஒன்று மறுக்கப்பட்டுவிட்டதே என்ற சோகம் சாரதாவை ஆழமாய் தாக்கியது.

நேற்று சகி அழுதபடி வந்தவுடன் அவளை சமாதானப் படுத்திவிட்டு மாடிக்குச் சென்றபோதுதான், யுகேன் தன் உணர்வுகளை மறைக்காமல் வெளிப்படுத்தியிருந்தான்.

விஷாலின் வீட்டிற்குச் சென்ற சகிக்கும், சாந்தாவிற்கும் புன்னகையுடன் சாலை ஏறு சயனித்திருந்த அந்தச் சின்னஞ்சிறு ஜீவனைக் கண்டதும் மனம் தாங்கவே இல்லை!

ஏற்கெனவே ஒடிந்து போயிருந்த சகியால் அழுகையை நிறுத்தவே முடியவில்லை.

அவனுடைய தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு, உறவினர் கூட்டம் அதிகமிருந்ததால் சிறிதுநேரம் வாசல் வராந்தாவில் அமர்ந்திருந்தனர்.

மருத்துவமனையில் அவனுடன் பழகிய நினைவுகள் மனதை அதிகமாக ஆக்கிரமிக்க கண்மூடி சுவரில் சாய்ந்திருந்தாள் சகி.

"கிளம்பலாமா சகி" சாந்தாவின் குரல் உசுப்ப– வேதனையுடன் விழிகளைத் திறந்து எழுந்தபோது– அருகிலிருந்த அன்றைய தினசரி பத்திரிகை கண்ணில் பட்டது.

முதல் பக்கத்தில் கீழே பெரிதாக யுகேந்திரனின் புகைப்படம் தெரியவும், பதறிப்போய் எடுத்துப் பார்த்தாள் அவள்.

அந்தப் படத்தின் கீழ் 'சின்ன ஜமீன் ராஜா யுகேந்திர வர்மன்' என்று போட்டு ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

**"அண்ணா! அம்மா சாகும் தருவாயில் உங்களிடம் மன்னிப்புக்கோர விரும்புகிறார்கள். நீங்கள் எவ்வளவு வேதனையில் இருப்பீர்கள் என்பது புரிகிறது. வெளிநாட்டிற்கு நீங்கள் படிக்கச் சென்றிருப்பதாக அம்மா**

**கூறியதை நானும் நம்பியிருந்தேன். உங்களைத் தேடவேண்டாம் என்று நீங்கள் எழுதிவைத்துவிட்டு சென்றதால்தான் அதற்கு முயற்சி செய்யவில்லை என்று அம்மா கூறினார்கள். தவறை உணர்ந்தவர்களுக்கு மன்னிப்பு தரலாம் இல்லையா? உங்களுக்காக இந்த சமஸ்தானமே காத்திருக்கிறது. நானும் உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.**

**-மதிவதனி,**
**ராஜசிம்மபுரம் ஜமீன்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்."**

படித்து முடித்தவுடன் சகியின் விழிகள் நம்பமுடியா ஆச்சரியத்தில் விரிந்தன.

இதயமோ மூச்சுக் காற்றுக்காக தவித்துத் திணறியது.

## 7

அந்தச் செய்தித் தாளை கையோடு எடுத்துக்கொண்டு சாந்தாவிடம் விடைபெற்று உடனே வீட்டிற்குச் சென்றாள் அவள்.

செல்லும் வழி முழுவதும் பலவித உணர்ச்சிகள் அவளைத் தாக்க, தான் எப்படி உணர்கிறோமென்றே அவளுக்குப் புரியவில்லை.

வீட்டிற்கு வந்தபோது, முன் அறையில் கணபதியும், யுகேந்திரனும் தயாராக அமர்ந்திருந்தனர்.

சூழ்நிலையில் ஒருவித இறுக்கம் நிலவ, ஒரேநாளில் பல அதிர்ச்சிகள் தாக்கியதில் ஓய்ந்துபோய் நுழைந்த சகியை உணர்ச்சிகளைத் தொலைத்த முகத்துடன் எதிர்கொண்டான், ராஜா யுகேந்திர வர்மன்.

அவள் கையிலிருந்த செய்திதாள்களைப் பார்த்தபடி, "வாம்மா, உனக்காகத்தான் காத்துட்டிருந்தோம்.. தம்பி யாருன்னு உனக்கும் தெரிஞ்சிடுச்சா? நல்லது. நாங்க உடனே ராஜசிம்மபுரம் கிளம்பறோம். யுகேன் யாருன்னு உங்ககிட்ட மறைக்கவேண்டியதாய் போச்சு. அவ்வளவு பெரிய ஜமீனோட வாரிசு.. ஆனா தான் யாருன்னு தெரியக்கூடாதுன்னு என் வாயை அடைச்சிட்டாரு... நாங்க வரோம்.." என்றபடி எழுந்தார், கணபதி.

கிருஷ்ணனிடம் சென்று நட்புடன் கைகளைப் பிடித்துக் குலுக்கி விடைபெற்ற யுகேன், சாரதாவிடம் திரும்பினான்.



"உங்களை என்னால மறக்க முடியாதும்மா! எனக்கு ஒரு அம்மா செய்ய மறந்ததை எல்லாம் செஞ்சவர் நீங்க. இதுக்கு எப்படி நன்றி சொல்றது?" என்றான், உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்.

டிரைவர் பெட்டிகளை எடுத்துக்கொள்ள- அவன் புறம் திரும்பினான்.

"சகி... நான் கிளம்பறேன்" என்ற ஒற்றை வார்த்தையுடன் வெளியேறி, காரில் ஏறினான்.

அந்தக் கார் புறப்பட்டுச் சென்றதும் தன் உயிரே தன்னைவிட்டு நீங்கிச்சென்றது போன்ற ஒரு உணர்வுடன் ஓடிச்சென்று தன் கட்டிலில் படுத்து விம்ம ஆரம்பித்தாள் சகி.

பின்னாலேயே வந்து அவள் முதுகையே நீவிக்கொடுத்த சாரதாவின் விழிகளும், வெகுநேரம் கண்ணீரைச் சொரிந்து கொண்டே இருந்தன.

தன் காதல் கூடு சிதைக்கப்பட்டதை உணர்ந்தவளின் மனதில் ஒரு வெற்றிடம் பரவ ஆரம்பித்தது.

காரில் சென்றுகொண்டிருந்த யுகேந்திரனின் மனதிலும் பெரும் புயல் மையம் கொண்டிருந்தது.

சகியின் நினைவு மனதில் நிழலாய் வந்து போனாலும், தான் மறக்க விரும்பி வந்ததை அன்றைய செய்தித்தாள் கிளறிவிட, கனன்று கொண்டிருந்த மனம் தீப்பிடிக்கத் தொடங்கியது.

மனதில் பழைய ஞாபகங்களின் அணிவகுப்பு!

நினைவுதிர் காலமாய், நினைவுச் சருகுகள் நெஞ்சப் பரப்பை ஆக்கிரமிக்க ஆரம்பித்தன.

யுகேந்திரன்தான் ராஜசிம்மபுரத்து முதல் வாரிசு! இரண்டாவதாக நெடுநாள் கழித்துப் பிறந்தவள்தான் மதிவதனி!

யுகேந்திரனும், அவளும் சிறு வயதிலிருந்தே படித்ததெல்லாம் ஊட்டியில் இருக்கும் பெரிய 'கான்வென்ட்'டில்தான்!

விடுமுறைக்கு வரும்போதும், அவனுடைய தாய் 'ராணி' தேம்பாவணி அம்மையார் பெரிதாகப் பாசம் காட்டியதில்லை.

எப்போதாவது அரவணைக்கும் அன்புப் பிடியிலும், பாசத்தைவிட ஆளுமைத்தனமே மிகுந்திருக்கும்.

அவனுடைய அப்பா, ராஜவிஜயேந்திர வர்மன், யுகேந்திரனின் பத்தாவது வயதிலேயே மரணமடைந்துவிட்டார்.

பல ஏக்கர் விளைநிலங்களும், நெசவுத் தொழிற்சாலையும், மருத்துவமனையும், பழப் பண்ணையும், காப்பித் தோட்டமும்,

ஏற்றுமதி நிறுவனமும் நிர்வகிக்க யாருமின்றிப் போயின.

பிறகு அந்த ஜமீனைப் பார்த்துக்கொள்ள தேம்பாவணி அண்ணன் பாஸ்கரராஜா, தன் குடும்பத்துடன் வந்துவிட்டார்.

அவருடைய ஒரே மகள்தான் மாதங்கினி!

சிறு வயதில் விடுமுறையில் வரும்போதெல்லாம் மதிவதனி மாதங்கினியும்தான் அவனுக்கு விளையாட்டுத் தோழிகள்.

பிறகு விடுமுறை நாட்களில் குதிரையேற்றம், களரிவித்தை துப்பாக்கி சுடுதல் என்று அவன் பயிற்சியெடுக்க ஆரம்பித்தா

வாள், கத்தி, தடி, முழு, குந்தம், சூலம், கதை... இப்படி ஆயுதங்களைக்கொண்டு களரி வித்தைகளை ஆர்வத்து பயின்றான்.

மனம் ஒன்றுபடப் பழகிய பிறகு, பருவ வயதில் அதிக தனிமையை நாடிவிட..., அவனுக்கு நண்பர்களே அதிகம் இல்ல போயினர்.

எம்.பி.ஏ. படிக்கும்போது தான் தங்கும் விடுதியில் பி அவனுக்கு அறிமுகமாகி உயிர் நண்பனாக மாறினான்.

ஆனாலும், யுகேந்திரனிடம் எல்லாரிடமும் சகஜமா பழகிவிடாத ஒருவித குணமும், தன்னைச்சுற்றி ஒரு வட்ட போட்டுக்கொண்டு வாழும் தனித்தன்மையுடன் கூடிய கம்பீர கைகோர்த்திருந்தன.

படிப்பு முடிந்து அவன் அந்த சமஸ்தானத்தின் பொறுப் ஏற்றுக்கொள்ள முன்வந்தபோதுதான் தேம்பாவணி அவனை தடுத்தார்.

"எம்பா! கொஞ்ச நாள் போகட்டுமே! அண்ணாதா எல்லாம் பாத்துக்கறாரே... நீ இப்பதானே படிச்சிட்டு வந்திருக்க கொஞ்ச நாள் ஓய்வெடுத்துக்க" என்றபோது அவனும் தவறா நினைக்கவில்லை.

குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல், களரிப் பயிற்சி எல்லாவற்றிலு தன் ஆர்வத்தை செலுத்தியவன்– அந்தத் திறமைகளில் தன்னை நன்றாக கூர்தீட்டிக்கொண்டான்.

அப்போதுதான் மாதங்கினி அவனையே சுற்றி சுற்றி ஆரம்பித்தாள்.

ஏனோ, ஆரம்பத்திலிருந்தே மதிவதனியோடு உடன் வளர்ந்தவ ஒரு சகோதரியாக மட்டுமே அவனால் நினைக்க முடிந்தது.

அதை அவளுக்கு எப்படிப் புரியவைப்பது என்று அவ



யோசித்துக்கொண்டிருந்தபோதுதான், ஒரு நாள் தேம்பாவணி அவனுடைய திருமணம் பற்றிப் பேசினார்.

"யுகேந்திர வர்மா! உனக்கு கல்யாணம் முடிச்சி வச்சிட்டு உன் கையில ஜமீன் பொறுப்பை ஒப்படைச்சிடலாம்னு நானும், அண்ணனும் முடிவு பண்ணி இருக்கோம்! அப்பாவும் உன்னோட இருபத்தைஞ்சாவது வயசு முடிஞ்ச உடனே நீ ஜமீன் பொறுப்பை ஏத்துக்கலாம்னு எழுதி இருக்காங்க!

பொண்ணுதான் தயாரா இருக்காளே நம்ம மாதங்கினி! நீ சரின்னு சொன்னா ரொம்ப நாள் கழிச்சு நம்ம ஜமீன்லே ஒரு நல்ல காரியம் நடத்த ஏற்பாடு செய்யலாம்... என்னப்பா சொல்றே?"

"அம்மா! எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்... அதோட மாதங்கினியை என்னால வேறுவிதமா கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியலை... அவளையும் என் தங்கை மாதிரிதான் நினைக்கிறேன். மதிவதனியையும், அவளையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க என்னால முடியாது. அப்பா சொன்ன மாதிரி அடுத்த மாசம் என்னோட இருபத்தஞ்சாவது பிறந்த நாள் வருது அதுக்கப்புறம் இந்த ஜமீன் பொறுப்பை நான் ஏத்துக்கறேன்" தீர்மானமாகக் கூறினான்.

தேம்பாவணியின் முகம் இடிவிழுந்தாற்போல் மாறியது.

"நல்லா யோசிச்சு உன் முடிவை நாளைக்கு சொல்லு யுகேந்திரா" கம்பீரமாய் அவர் கட்டளையிட, "இல்லையம்மா இதுதான் என் முடிவு!" என உறுதியாக வந்தது அவன் குரல்.


அன்றிரவு நடுநிசி வரையில் உறக்கம் வராமல் வராந்தாவில் நடந்து கொண்டிருந்தான் யுகேந்திரன்.

அப்போதுதான் தன் தாயின் அறையிலிருந்து கசிந்த பேச்சை அவன் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது.

"தேம்பாவணி! இப்ப என்ன செய்யறது... நான் மாதங்கினிகிட்ட யுகேந்திரனை விரும்பற மாதிரி எப்படியாவது நடிச்சி வளைச்சிப் போட்டுடுன்னு சொன்னேன். அவ தன்னோட கல்லூரியில படிச்ச ஒருத்தனை காதலிக்கிறதா சொல்லி முதல்ல மறுத்தா.

அவனைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா நமக்கு ஜமீன் வாழ்க்கை கிடைக்காது... அன்னக் காவடியாதான் அலையணும்னதும் மிரண்டுபோய் ஒத்துக்கிட்டா.

"ஆனா, அவளுக்கு சாமர்த்தியம் பத்தலை... 'முயற்சி பண்ணினேன்... முடியலைப்பா' அப்படிங்கறா. மாமா வேற சொத்தெல்லாம் அவன் பேரில எழுதி இருக்காரு. அடுத்த மாசம்





பிறந்த நாளுக்கப்புறம் நிர்வாகம் அவன் கைக்குப் போயிட்டா அப்புறம் அவ்வளவுதான்.

"நாம செஞ்சிருக்கற தில்லு முல்லு எல்லாம் அம்பலமாயிடும். அவனைப் பார்த்து உனக்கும், வதனிக்கும் ஏதாவது செஞ்சாதான்! பிறகு அவனுக்கு மனைவியா வர்றவ எப்படி இருப்பாளோ... நம்ம கதை முடிஞ்சுது..." என்று கூறினார்.

இதற்கு, தன் தாய் என்ன பதில் கூறப்போகிறாள் என்று அவன் தவித்து நின்றபோது ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு தேம்பாவனி பேச அரம்பித்தார்:

"என்ன செய்யலாம்... நானும் எவ்வளவோ பேசிப் பார்த்துட்டேன். மிரட்டிப் பணியவைக்க யுகேந்திரன் சின்னக் குழந்தையில்லை... நீங்கதான் ஒரு முடிவு சொல்லணும்..."

"நாம எல்லாரோட நலனுக்காகவும் இதை செஞ்சுதான் ஆகணும். ஒரு ஊர் வாழ ஒரு குடும்பம் சாகிற மாதிரி! வர்ற பிறந்த நாள் அன்னிக்கே அவனோட இறந்த நாளாக்கிடலாம்... என்ன சொல்றே?" அழுத்தமான குரலில் கேட்டார்.

'அய்யய்யோ... என்ன வார்த்தை பேசறீங்கண்ணா! யாரு உங்களுக்கு இவ்வளவு தைரியத்தை குடுத்தது. அவன் என் பையன் அவனைவிட எனக்கு சொத்து முக்கியமில்லை... இனிமே இப்படி பேசறதா இருந்தா என்னைப் பார்க்க வராதீங்க...'

தன் அம்மா இப்படி கூறுவாரென்ற நம்பிக்கையுடன் மூச்சடைச அவன் காத்திருந்தபோது, சில நிமிடங்கள் அமானுஷ்யமாக கடந்த அமைதிக்குப் பின்னும் அவரிடமிருந்து பதில் வராமல் போனது.

"சரி... யோசிச்சு ஒரு நல்ல முடிவா சொல்லு" என்று கூறிவிட அவர் செல்வது கேட்டது.

முன்னறிவிப்பின்றி தலையில் இடி விழுந்ததைப்போல் இத


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

கருகிநின்று விட்டவனின் பாதங்கள் வேரோடிப் போயின.

பிறகு உணர்வுகள் மரத்துப்போக, நம்பமுடியாத இ வெறித்த பார்வையுடன் தன் அறைக்குள் வந்தவன் விடிய விடிய உறங்கவேயில்லை.

அந்த நேரம் தெரிந்த தன் தாயின் அர்த்தமுள்ள மவுனம் ஆயிரம் கத்திக் குத்துகளுக்கு சமமாய்!

ஒரு தாயால் எப்படி இப்படியொரு நேரத்தில் பதற்றப்படாமல் அமைதியாக இருக்க முடியும்? அதற்கு அர்த்தம்– தன் அண்ணன் விரும்பிய காரியத்தை துணிந்து செய்ய ஒப்புதல் தருகிறேன் என்பதா?

தன் மகனையே கொல்லத் துணிகிற அளவுக்கு பணத்தாசை கண்களை மறைக்கிறதா? இதற்கு ஆஸ்டலில் படித்துக்கொண்டிருக்கும் மதிவதனியும் உடந்தையா?

சுயவிருப்பமின்றி அப்பாவின் வற்புறுத்தலுக்காக மந்தாகினியால் எப்படித் தன்னைக் காதலிப்பதுபோல் நடிக்க முடிந்தது?

பல கேள்விகள் கண்முன் வந்து உடலையும், மனதையும் இறுக்கிய நாணாய் விரைப்புறச் செய்தன.

மனதில் வன்மத்தையும், வெறுப்பையும் ஆழ வேரூன்றி விதைத்தன.

காலையில் பிரபுவுக்கு 'போன்' செய்தவன், பெரும் விரக்தியுடன் எல்லா விஷயங்களையும் கூறினான்.

தன்னை யாரென்ற அறியாத, மனிதத் தடங்களற்ற பூமிக்கு அழைத்துச்செல்ல முடியுமா என்று உடைந்து போய்க்கேட்டான்.

உடனே தங்கள் ஊருக்கு வரும்படி அவனைக் கூப்பிட்ட பிரபு, தன் தந்தையிடம் விபரம்கூறி– யுகேந்திரன் தங்குவதற்கு பாதுகாப்பான ஒரு இடத்தை ஏற்பாடு செய்யும்படி சொன்னான்.

அவன் சென்னையில் வேலையில் இருந்தாலும், யுகேனைத் தேடி யாராவது அவன் வீட்டிற்கு வந்தால் பதில் சொல்கிற நிலையில் இருந்தாலும் அவன் திருநெல்வேலிக்கு உடனே வராமல் ஒரு மாதம் கழித்தே வந்தான்.

பிறகு ஜமீன் வக்கீலிடம் சென்று ஒரு புதிய பங்கை தனக்காக எடுத்துக்கொண்டவன், எல்லா சொத்துளையும் மதிவதனியின் பெயருக்கே எழுதிவிடும்படிச் செய்தான்.

தான் கிளம்பும் நாளன்று தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதி வைத்தவன், ஒரு நாள் இரவில் யாரும் அறியாமல் ஜமீன் பங்களாவிலிருந்து கிளம்பிவிட்டான்.



# 8

யுகேந்திரனின் மனதை ரணமாய் ஆட்படுத்தியிருந்த துரோக நினைவுகள் ஞாபகப் பரப்பில் வெளிவந்து, அவனிடம் ஒரு இறுக்கத்தை வரவழைத்தன.

“சார்! இங்கே கொஞ்சநேரம் ஓய்வு எடுத்துட்டுப் போகலாமாங்க..?” வழியில் ஒரு பெரிய ஓட்டலுக்கு வெளியே காரை நிறுத்தியிருந்த டிரைவர் பவ்வியமாகக் கேட்டான்.

அவன் சரியென்று தலைஅசைக்க, கணபதியுடன் இறங்கி 'டிபன்' சாப்பிட்டுவிட்டு உடனே கிளம்பினர்.

இரவு அவர்கள் கோயமுத்தூரைத் தாண்டி ராஜசிம்மபுரத்தை அடைந்தபோது பத்துமணியாயிருந்தது.

ஜமீன் பங்களா முழுவதும் தீபங்களாய் ஒளிர்ந்த விளக்குகளுடன் பகலைப்போல் மேலும் ஒளிமயமாகக் காட்சியளிக்க, நிறைய கார்கள் நின்றுகொண்டிருந்தன.

அமைதியான அந்த சூழ்நிலையே நிலைமையைப் புரியவைக்க, இறுகிய முகத்துடன் அவன் உள்ளே சென்றான்.

தேம்பாவனிக்கு முறைப்படி சடங்குகள் செய்யப்பட்டு, அந்தப் பெரிய ஹாலுக்குள் பேழைக்குள் கிடத்தப்பட்டிருந்தார்.

அவனைக்கண்டதும் ஓடிவந்து அணைத்துக்கொண்ட வதனியைச் சமாதானப்படுத்தியவன், மேனேஜர் பொறுப்பிலிருந்தவரிடம் எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்கும்படிக் கூறினான்.

பாஸ்கரராஜா குற்ற உணர்வுடன் ஒரு மூலையில் நின்றிருக்க, அவன் அவர்கள் இருந்த திசைக்கே திரும்பவில்லை.

மரியாதை நிமித்தம் சில முக்கிய நபர்களிடம் பேசிக்கொண்டிருந்தவன், கணபதியை சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்கும்படிக் கூறினான்.

பிறகு காலையில் இறுதிச் சடங்குகள் எல்லாம் நடந்து முடியும்வரை மதிவதனிக்கு அருகிலேயே ஒரு அண்ணனாகத் துணையிருந்தான்.

அன்று மாலையே யுகேந்திரனைத் தேடி அவனுடைய அறைக்கு வந்தாள் மதிவதனி.

ஒரு பெரிய பத்திரக்கட்டை அவனிடம் கொடுத்துவிட்டு தோளில் சாய்ந்து அழத் தொடங்கினாள்.

“அண்ணா! அம்மா தன் தப்பை உணர்ந்திட்டாங்க!

அவங்களை மன்னிச்சிடுங்கண்ணா- உங்ககிட்ட நேரா மன்னிப்பு கேக்கணும்னுதான் உயிரைக் கையிலப் பிடிச்சி வச்சிட்டுக் காத்திருந்தாங்க. ஆனா, மதியமே..." முகம்மூடி விம்மியவளை யுகேந்திரன் சமாதானப்படுத்தினான்.

சிறிதுநேர விசிப்பிற்குப் பிறகு, "உங்களுக்கு ஒண்ணு தெரியுமா..? என்கூட வாங்கண்ணா. ஒரு அதிசயத்தை நான் உங்களுக்குக் காட்டறேன்!" என்றாள்.

அவனை அழைத்துச்சென்று அவர்களுடைய தந்தையின் 'பீரோ'வின் அடித்தட்டிலிருந்த பெரிய படத்தை எடுத்துக் காட்டினாள்.

"இவங்கதான் என் பெரியம்மா- உங்க அம்மா..! நீங்க பிறந்தபோது பிரசவத்தில் அவங்க இறந்துட்டாங்களாம். அப்புறமா அப்பா கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கதான் தேம்பாவனி அம்மா!"

அவள் கூறியதை நம்ப இயலாத வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தவனுக்குள் பெரும் அதிர்ச்சி!

தன்னைப் போன்ற உருவத்தில் கண்களில் கருணையுடன் புன்னகைத்த அந்த உருவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த- கீழே பார்த்தால் 'வனரோஜா' பிறப்பு- இறப்பு என்று எழுதி, தேதிகள் போடப்பட்டிருந்தன.

அவன் பிறந்த தேதியும், அவர் இறந்த தேதியும் ஒன்றாக இருப்பது புரிய- அந்த உருவத்தை கண்களுக்குள் தேக்கி, இதயத்தில் பதித்துக்கொண்டான் யுகேந்திரன். முன்பு புரியாத பல உண்மைகள், இன்று திரை விலக்கிச் சிரித்தன!

"இந்த போட்டோ என் அறையிலேயே இருக்கட்டும்... இப்பதான் எல்லாம் புரியுது வதனி" மெல்ல முணுமுணுத்தான்.

"அண்ணா" தயக்கத்துடன் அழைத்தாள் வதனி.

"நான் ஆஸ்டல்லேருந்து வந்தப்ப நீங்க மேற்படிப்புக்காக வெளிநாடு போயிருக்கறதா அம்மா சொன்னாங்க... ஆனா ரொம்ப மாறி இருந்தாங்க... எப்பவுமே ஏதோ யோசனையிலேயே எதையோ பறிகொடுத்த மாதிரி இருந்தாங்க.

"அவங்க மன உளைச்சல் உடம்பையும் பாதிச்சிடுச்சின்னு நினைக்கிறேன். திடீர்னு மூணு நாள் முன்னாடி நெஞ்சு வலிக்குதுன்னாங்க. உடனே நம்ம ஆஸ்பத்திரியில் சேத்தோம்.

'சிவியர் ஹார்ட் அட்டாக்'னு டாக்டர் சொன்னாரு. மறுநாள் ஐ.சி.யூ.வில் இருக்கிறப்ப என்கூடத் தனியா பேசணும்னாங்க. அப்பதான் எல்லா விஷயமும் சொன்னாங்க.



"எனக்கு எதுவுமே தெரியாததாலே ரொம்ப அதிர்ச்சி... அம்மா மேல வெறுப்புகூட வந்தது. அன்னிக்கு நீங்க போனவுடனே கடிதத்தை படிச்சப்பதான் ரொம்ப வேதனையை உணர்ந்ததா அழுதாங்க.

'பாஸ்கர மாமா பேச்சைக் கேட்டுட்டு தப்பான ஒரு பாதையிலப் போகலாமான்னு யோசிக்க ஆரம்பிச்சேன். பணத்தாசை என் கண்ணை மறைச்சிடுச்சி... நான் பெறலைன்னாலும் இத்தனை வருஷம் வளர்த்த மகனை இழக்க எனக்கு எப்படி மனசு வந்தது..? நான் பாவி... யுகேந்திரனை உடனே நான் பாக்கணும்... மன்னிப்பு கேக்கணும்'னு ரொம்ப அழுதாங்க...

"நான் உடனே மேனேஜர்கிட்ட சொல்லி நான் பேசற மாதிரி விளம்பரம் கொடுக்கச் சொன்னேன். ஆனா அம்மா நீங்க வர்றதுக்குள்ளே... திரும்பவும் 'அட்டாக்' வந்து..."

தொடர முடியாமல் தவித்தபடி அழுதவளை தன் தோளில் சாய்த்து சமாதானப்படுத்தினான் யுகேந்திரன்.

"ம்... அழக்கூடாது வதனி! நாளைக்கே நான் மாமா குடும்பத்தை ஊரைவிட்டு அனுப்பப்போறேன். உனக்கு ஏதும் ஆட்சேபனை இல்லையே?" மெதுவாகக் கேட்டான்.

"இல்லைண்ணா! நம்ம மாதங்கினி, தன்கூட படிக்கிற கோபின்ற பையனோடு ஓடிப்போய் கல்யாணம் செஞ்சுக்கிட்டா! இனிமே இது உங்க ஜமீன். நீங்க என்ன முடிவெடுத்தாலும் அதுக்கு நான் கட்டுப்படுறேன்.

"இப்ப எல்லாமேஉங்க பெயருக்கு மாத்தியாச்சு. அம்மா நான் போன வாரம் எல்லா ஏற்பாடும் பண்ணி என்கிட்ட கையெழுத்தெல்லாம் வாங்கினாங்க. அம்மாவை மன்னிப்பீங்கள்லே.. அப்பதான் அவங்க ஆத்மா சாந்தியடையும்..."

அவள் கூறும்போதே வரவேற்பறையிலிருந்த அந்த பழைய காலக் கடிகாரம் "டங்... டங்..." என்று அதை ஆமென்பதுபோல் ஆமோதித்தது.

அவன், அவள் முகத்தை இரு கைகளாலும் ஏந்தினான்.

"நிச்சயமா... யாருக்காக இல்லைன்னாலும் என் குட்டித் தங்கைக்காக! தப்பை உணர்ந்து திருந்தினவங்களை எப்படி என்னால மன்னிக்காம இருக்க முடியும்?" சிறு புன்னகையுடன் கேட்டான்.

பிறகு "நீ போய் ஓய்வு எடு... ரெண்டு நாளா சரியாவே தூங்கியிருக்கமாட்டே போ!" என்று அனுப்பி வைத்தான்.

அவனுடைய மேசையில் கம்பீரமாக வீற்றிருந்த தாயின்

புகைப்படத்தைப் பார்த்தபோது மனம் சொல்லொணாத அமைதியை தத்தெடுத்தது.

வெகுநாட்களுக்குப் பிறகு, அன்றிரவு நிம்மதியாக உறங்கினான் யுகேந்திரன்.

மறுநாளைய விடியல், ராஜசிம்மபுரத்திற்கே இனிய விடியலாய்!

ஒரு இருண்ட முடிவிற்குப் பின் பூபாளமாய் யுகேந்திரனின் பல முடிவுகள்!

காலையிலேயே வக்கீல் வரவழைக்கப்பட- உயில் சாசனங்களை தனக்கும், மதிவதனிக்குமாக சரிசமமாகப் பிரித்து பொதுவுடமை ஆக்கினான்.

பாஸ்கரராஜாவிற்கு சேரவேண்டிய தொகையை அளித்து, அவரை சொந்த கிராமத்திற்கே அனுப்பி வைத்தான்.

திருந்திவிட்டேன் என்று மன்னிப்பு வேண்டி நின்றவருக்கு அங்கு கிராமத்தில் தேம்பாவணி அம்மையாரின் பெயரில் இருந்த பல ஏக்கர் நிலங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அளிக்கப்பட்டது.

மேனேஜரை வரவழைத்து எல்லாக் கணக்குகளையும் சரிபார்த்த போதுதான், அதில் எவ்வளவு குளறுபடியென்பது புரிந்தது.

மதிவதனி மீண்டும் இறுதிப் பரீட்சைக்காக ஆஸ்டலுக்கு சென்றுவிட, தனிமை அவனை மிகவும் வாட்டியது.

பகலில் ஜமீன் கணக்கு வழக்குகளைப் பார்ப்பதும், வயல்கள்- மேற்குத் தொடர்ச்சி மலைச்சரிவில் அமைந்திருந்த காப்பித் தோட்டம், நெசவுத் தொழிற்சாலை, ஏற்றுமதி நிறுவனம் எல்லாவற்றையும் மேர்பார்வையிடுவதும் என்று பொழுது விரைவாகச் சென்றாலும், இரவு நேரங்கள் பெரும் தனிமை உணர்வைத் தந்தன.

இவ்வளவு இருந்தாலும் தனக்கென்று உறவுகள் யாருமில்லாத ஒரு நிலை, பெரும் வெற்றிடமாய் அவனை வியாபிக்கத் தொடங்கியிருந்தது.

அப்போதுதான் மேகம் திரைவிலக்கிய முழு நிலவாய் சகியின் முகம்,அவனுடைய மன வானில் பவனி வரத் தொடங்கியது.

அவளுடைய மனிதநேயம் கலந்த அன்பும், எதற்காகவும் தன் காதலை விட்டுக்கொடுக்காத உறுதியும், மீண்டும் மீண்டும் மறக்கமுடியாமல் நினைவுகளை ஆக்கிரமித்து வதைக்க ஆரம்பித்தன.

அவனுக்கே பெரும் ஆச்சரியமாய்...!




"மனைவிதான் பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிறதா சொன்னீங்களே, பிறகு எதுக்கு பூ வாங்கிறீங்க?"

"மல்லிகைப்பூ மணம் இல்லாட்டி எனக்குத் தூக்கமே வராது..."

—சீர்காழி ரேவதி.





"எங்க மாமியாரை அடுத்த நிறுத்தத்துல இறக்கிவிட்டுடுங்க!"

"இந்த பஸ் அங்கே நிக்காதேம்மா!"

"அப்ப தள்ளி விட்டுடுங்க!"

—பொகுதை பாலு.

"உமான்னு பேர் வெச்சது தப்பாப் போச்சு!"

"ஏன், என்னாச்சு?"

"உம்மா, உம்மான்னு கூப்பிடுறாங்கடி."

ச.க.பழநிச்சாமி,
அருப்புக்கோட்டை.



# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**

## இரட்டை சதம்

தீபாவளி மலராய் வெளிவந்த இரட்டை நாவல்களும் 'இரட்டை சதம்' அடித்தன.

**எஸ். மாரிமுத்து, அரியலூர்.**

தீபாவளி மலரை படித்த சந்தோஷத்தில் தீபாவளியையே மறந்துபோனேன்.

**ஆனந்த்ராஜ், சாஸ்திரிநகர்.**

"நூறு கோடி வைரம்" மறக்க முடியாத மதிப்புமிக்க தீபாவளிப் பரிசு!

**த. சத்தியநாராயணன், அயன்புரம்.**

தீபாவளி மலரை கண்கள் பார்த்ததும், இதயத்தில் ஆனந்த வெடிகளை வெடிக்க வைத்தன.

**எஸ். பாலாஜி, வடக்கு மாங்குடி.**

இரட்டை நாவல்களில் ஆறு மணி நேரம் தவமிருக்க நேரிட்டது.

**ஆர். காயத்திரி, திசையன்விளை.**

'நூறு கோடி வைரம்', 'உன் மடியில் நானுறங்க' இரண்டு நாவல்களும் நயம்.

**பிச்சைமுத்து,**
**சிங்கப்பெருமாள்கோவில்.**

ஆறு பக்கங்களில் வழங்கிய துணுக்குகள் அனைத்தும் அறிவுக்கு விருந்து.

**பிரேமா இராஜசேகரன், சென்னை.**

## சாதனை நடிகை

நடிகை பானுமதி தன் கடைசிப் படம்வரை சொந்தக் குரலில்தான் பாடினார். இரவல் குரலில் பாடுவதுபோல் நடிக்க பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

பானுமதி சிறந்த எழுத்தாளரும்கூட. அவர் எழுதிய 'அத்தகாரு' என்ற தெலுங்கு நாவலுக்கு ஆந்திராவில் பரிசு கிடைத்தது. பானுமதி ஒரு இயக்குநர்– தயாரிப்பாளரும் கூட.

**–அனிதா ராமச்சந்திரன், பெங்களூர்.**



ஒரு பெண்ணால் நீ பாதிக்கப்படுவாய்... அவள் நினைவுகளால் பெரிதும் அலைக்கழிக்கப்படுவாய் என்று யாராவது முன்பு கூறியிருந்தால் ஏளனமாகச் சிரித்திருப்பான்.

ஆனால் இன்று சிரிக்க முடியவில்லை... ஏனென்று சிந்திக்கத்தான் தோன்றியது!

எல்லோருடைய வாழ்க்கையிலும் இறைவன் ஒரு அற்புதமான தருணத்தை எங்கோ ஒளித்து வைத்திருப்பதும், தனக்கு அப்படி வாய்த்த தருணங்கள் சகியின் வீட்டிலிருந்த நாட்களே என்றும் இப்போதெல்லாம் தோன்ற ஆரம்பித்திருந்தன.

மனமெங்கும் புண்ணாகி ரணமாய் பெருகிய வலியுடன், எவர் பார்வையிலும் பட விருப்பமின்றி தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்ட அந்த நாட்களில், சாரதாவின் அன்பும், சகியின் நேசமுமே தன்னை வீழ்ந்துவிடாமல் காத்ததோ என்ற ஐயமும், ஆராய்ச்சியும் தலைதூக்கின.

நெஞ்சத்துக்குள் ஊடுருவி மெல்லக் கொல்லும் நோயாய் காதல் ஆக்கிரமித்தது– அவளுடைய பிரிவுக்கு மருந்தாய் அவளையே தேடியது!

இப்போதெல்லாம் உறங்காத நேரங்களில் கரைசேராக் கனவுகள் நிறைவேறா விருப்பங்களாய் மாறின. பிறையாகி, நிறைவடையும் நிலவாய் பிரகாசிக்க மனம் ஏங்கியது.

இனம் புரியாமல் மனம் கனத்துப் போகின்ற வேளைகளில் மயிலிறகாய் அவன் உணர்வுகளை வருடின– அவளுடைய நேச வார்த்தைகளின் பதிவுகள்!

நாட்கள் செல்லச்செல்ல புரியாத ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் அவனுக்குள் வியப்பை விதைத்தன.

சகியின் மனிதநேயமும், பரிவான பேச்சுகளும், பிறருக்கு ஏதாவது கஷ்டமென்றால் துடித்துப்போய் ஓடிச்சென்று உதவும் குணமும், பணத்திற்காக தன் காதலை விலை பேசாத உயர்ந்த உள்ளமும், எந்த நிலையிலும் தன் சுய கவுரவத்தை விட்டுத்தராத திமிரும், உறுதியும் அவனுள் இரண்டறக் கலந்து இனி அவளின்றி தனக்கு வாழ்வில் சுகம் ஏதுமில்லை என்பதை புரியவைத்தன.

ஜாமீன் பொறுப்பை ஏற்ற ஒரு மாதத்திலேயே தெளிவான முடிவுக்கு வந்தான் யுகேந்திரன்.

அநத முடிவு, அவன் வாழ்க்கையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

9

**ம**றுநாள் காலையிலேயே, பிரபுவிற்கு 'போன்' செய்தான்.

"பிரபு! எனக்காக நீ இன்னொரு உதவி செய்யணும்! சகியோட அப்பா கிருஷ்ணன் அங்கிள் ஒரு சாதாரண வேலையில் தானே இருக்காரு...

"அவரை நம்ம ஜமீனோட வரவு-செலவு கணக்கை எல்லாம் பார்க்க உன்னால இங்கே வரவழைக்க முடியுமா?" ஆர்வத்துடன் கேட்டான்.

"அப்படியா! ரொம்ப வருஷமா அங்கே வேலை பாக்கறாரு... விருப்ப ஓய்வு குடுக்க சொல்லி கேட்டுப் பார்க்கலாம்... வருவாரா தெரியலையே... ஏன் யுகேன் குறிப்பா அவரைக் கேக்கறே?"

"ம்... ஒண்ணுமில்லை. அவங்க ரொம்ப நல்ல குடும்பம்ங்கறதை நான் அங்கே தங்கி இருந்தப்ப தெரிஞ்சிக்கிட்டேன். இப்ப பாஸ்கர மாமாவை அனுப்பினப்புறம் எனக்கும், நம்பிக்கையா ஒருத்தர் தேவைப்படுது. அது அங்கிளா இருந்தா நல்லதுன்னு நான் நினைச்சேன்" யோசனையுடன் கூறினான்.

"ஓ... சரி! அப்பா சொல்லை அவர் நிச்சயமா கேட்பாரு... சம்பளம் பத்திக் கேட்டா என்ன சொல்றது"

"அங்கே என்ன வாங்கிக்கிட்டிருந்தாரோ அதையே இரட்டிப்பா குடுத்திடலாம்னு சொல்லு. ஆனா, இத்தனை வருஷம் வாழ்ந்த ஊரைவிட்டு வருவாங்களா?"

"தெரியலை... இந்த வாரக்கடைசியில் நானே நேரல போய் பேசி பாக்கறேன்... முயற்சி பண்றேன்..." என்று போனை வைத்தான்.

அந்த வாரமே அவன் திருநெல்வேலிக்குச் சென்று தன் தந்தையை அழைத்துக்கொண்டு சகியின் வீட்டிற்குச் சென்றான்.

இரவுப் பணிமுடிந்து அப்போதுதான் சகியும் வந்திருந்தாள்.

கணபதி மெதுவாக யுகேந்திரனின் விருப்பத்தையும், அதனால் கிடைக்கப் போகின்ற நன்மைகளையும் கூறியபோது கிருஷ்ணன் யோசிக்க அரம்பித்தார்.

"அங்கிள்! உங்களுக்கு விருப்பஓய்வு பணமும் வந்துடும்... அங்கே ராஜசிம்மபுரத்திலே வீடு குடுத்துடுவாங்க. இதுமாதிரி இரட்டைச் சம்பளம்! இந்த வீட்டையும் வாடகைக்கு விட்டுடலாம்... என்ன சொல்றீங்க... அவசரமில்லை... நல்லா யோசிச்சி சொல்லுங்க..." என்றான்.



இடையென்று குறுக்கிட்டாள் சகி.

"அப்பா! நான் ஒரு நிமிஷம் பேசலாமா? எனக்கென்னவோ இது சரின்னு படலை... இத்தனை வருஷமா இங்க இருக்கிற வீடு-வேலை எல்லாத்தையும் விட்டுட்டு திடீர்னு ஒரு இடத்துக்கு மாறறது சரியில்லை... பணத்தாலே எல்லாத்தையும் விலைக்கு வாங்கமுடியாதுன்னு உங்க நண்பர்கிட்ட சொல்லுங்கண்ணா!"

சிறு கோபத்துடன் கூறிய சகியைப் பார்த்தவுடன், ஏனோ ஒரு சுவாரசியம் வந்தது பிரபுவிற்கு!

யுகேனுக்கும், இவளுக்கும் இடையில் ஏதாவது பனிப்போர் நடந்திருக்குமோ என்ற யோசனை மனதில் பொறி தட்டியது.

"சரி அங்கிள்! நீங்க யோசிச்சி சொல்லுங்க... இல்லைன்னா நான் அப்பாவை அந்த வேலைக்கு அனுப்பறதா யுகேன்கிட்ட சொல்லிடுறேன்..." என்றவன் சகியிடம் திரும்பினான்.

"யுகேன் என்னிக்குமே பணத்தை பெரிசா நினைக்கிறவன் இல்லைம்மா... அப்படி நினைக்கிறவனா இருந்தா என்கூட நட்பு வெச்சிருக்கமாட்டான்... உங்க வீட்டுல வந்து தங்கியிருக்க மாட்டான்.

"அவ்வளவு ஏன்? அந்த ஜமீனைவிட்டு பிரிஞ்சி அந்த சொத்தெல்லாம் தனக்கு துச்சம்னு தூக்கியெறிஞ்சிட்டு வெளியே வந்திருக்கமாட்டான்... அவனை நீ சரியா புரிஞ்சிக்கலைன்னு நினைக்கிறேன்..." அழுத்தமான குரலில் கூறினான்.

சகி மனதிற்குள் விரக்தியாகப் புன்னகைத்தாள்.

"நான் அவரைப் பத்தி ரொம்ப சரியாப் புரிஞ்சி வச்சிருக்கேன்..." ரகசியமாக முணுமுணுத்தாள்.

**அ**ன்றிரவு யுகேனின் நினைவுகள் வெகுவாய் அவளை ஆட்படுத்த- அதிலிருந்து பிடிவாதமாகத் தன்னை விலக்கிக்கொள்ள அவள் மிகவும் சிரமப்பட வேண்டியது இருந்தது.

பிறருக்கு அறிவுரை கூறுவது எளிதென்பதும், அதுவே தனக்கென்று வரும்போது எல்லாமே மாறிப் போவதும் புரிந்தது.

முன்பு, காதல் பிரச்சினை என்பது சாகவதமல்ல... அது ஒரு கலைகிற மேகம்மாதிரி என்று பிறருக்கு எளிதாக அறிவுரை கூறியவளுக்கு, இப்போதுதான் அதன் தாக்கமும், வலிமையும் புரிந்தன.

ஆனால், அதற்காக ஒரு கோழைத்தனமான முடிவு என்பது தவறு என்பது மட்டும் மனதில் ஆழமாய் வேரூன்றியது.

அவன் நினைவிலேயே கடைசிவரை தனியாக வாழ்ந்தபடி, நர்ஸாகப் பணிபுரிந்து தன் வாழ்க்கையை கழித்துவிடலாமென்பதில் தீர்மானமாக இருந்தாள், அவள். இந்த ஒரு மாதத்தில் அவனைப் புறக்கணிக்க எண்ணிய மனம் பெரிதும் தோல்வியையே தழுவியிருக்க– அதுவே அவளை மேலும் இறுகச் செய்வதாய்!

ஜமீன் வாரிசு என்ற அவனுடைய பெரும் தகுதியே அவளுக்கும், யுகேந்திரனுக்குமிடையே பெரும் பிரிவெனும் ஆயுதமாய்!

இப்போதெல்லாம் அதுவே பெரிய இரும்புத் திரையாய் விசுவரூபமெடுத்து அவள் காதலுக்கு அவளே போட்டுக்கொண்ட வேலியாய் மாறி இருந்தது. பொருத்தமில்லாத தன்னை அவன் ஏற்க மறுத்ததையும் இப்போது புரிந்துகொண்டாள்.

அதனாலேயே தன் காதலை ஆழ்மனவெளியில் இறுகப் புதைத்துக்கொண்டாள்.

"என்னாச்சு சகி உனக்கு? ஏன் இப்படி 'டல்'லா இருக்கே! முன்னாடி கண்ணிலே தெரியுமே ஒரு ஒளி... பழைய துள்ளல் எதையுமே இப்ப காணோம்! அந்தச்சிரிப்பு... அது ஒண்ணு போதுமே மந்தவங்களையும் இதமாக்கிறதுக்கு! ஏதோ ஒருமாற்றம் தெரியுது உன்கிட்டே! என்ன பிரச்சினை... என்கிட்ட சொல்லக்கூடாதா?

"ஒண்ணுமில்லை சாந்தா... லேசா தலைவலி! அவ்வளவுதான்!"

"அப்படியா நீ சொன்னா நம்புறேன். ஆனா ஒரு வாரமா தலைவலின்னா கொஞ்சம் நம்பமுடியவில்லை!"

"ம்... இப்ப சிரிச்சாச்சு... போதுமா?"

"ஊகூம்... இந்தச் சிரிப்பு போதுமா. இன்னும் கொஞ்சம் வேணுமான்னு கேக்கவைக்கும் உன்னோட முத்திரைச் சிரிப்பு இது இல்லை! ஏதோ சிக்கல் இருக்கு..." கூறிவிட்டு யோசனையுடன் அகன்றாள்.

நர்ஸ் சாந்தா கண்டுபிடித்துக் கேட்குமளவுக்கு தான் மாறியிருப்பது, அவளைத் திடுக்கிட வைத்தது.

இப்போதெல்லாம் தன்னை மாற்றிக்கொள்ள பெருமுயற்சி செய்ய ஆரம்பித்திருந்தாள், அவள்.

கிருஷ்ணனுக்கும், சாரதாவிற்கும்தான் அவளைப் பார்த்தால் பெரும் வேதனையாய்!

சகியின் எதிர்காலமே கேள்விக்குறியாக நிற்க, வேதனையை



உள்ளே மறைத்து– வெளியில் புன்னகைப்பது போல் நடிக்க அவள் படுகின்ற கஷ்டத்தைப் பார்த்தால் இருவருக்கும் ரத்தக்கண்ணீர் வந்தது.

ஒரு நாள், சகியிடம் இதுபற்றிப் பேசினார், சாரதா.

"சகி! ஒருவேளை உன்மேல ஓர் ஈடுபாடு வந்ததினாலதான் யுகேன் உங்கப்பாவை அங்கே வேலைக்கு வரச்சொல்லி இருப்பாரோன்னு நான் நினைக்கிறேன்" மெதுவாகக் கூறினார்.

வேகமாக நிமிர்ந்தவள், "நானே அதை ஒரு பயங்கரக் கனவா நினைச்சி மறக்க முயற்சி செஞ்சிட்டிருக்கேன். அப்படி நிச்சயமா இருக்காதும்மா... அவர் இங்கே இருந்தப்ப நீங்க செஞ்ச உதவிகளுக்கு எந்த கைமாறும் செய்யலையேன்னு உறுத்தியிருக்கும். அதான் இப்படி ஒரு ஏற்பாடு!

"மத்தபடி இதுல வேற எந்த மென்மையான உணர்வுகளும் இருக்காது. நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. 'சிறுத்தைகள் எப்பவுமே தன் புள்ளிகளை மாத்திக்கொள்வதில்லை'ங்கிற பழமொழி எனக்குப் புரிஞ்சிடுச்சு.

வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்கம்மா... நான் இப்பதான் தெளிவாகியிருக்கேன்..." தீர்மானமான குரலில் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

கிருஷ்ணனே, ஒரு நாள் யுகேந்திரனுக்கு 'போன்' செய்து பேசினார். "சாரி மிஸ்டர் யுகேந்திரன். நீங்க சொன்ன வாய்ப்பை ஏத்துக்க முடியாத ஒரு சூழ்நிலை... எனக்கு உடனே இங்கே 'ரிசைன்' பண்ணிட்டு வரமுடியாது. அதோட சகிக்கும் இங்கேதான் இருக்கணும்னு இருக்கு!

அதான் அவளுக்கு இதிலே விருப்பமில்லை. கணபதிகிட்ட சொன்னேன். அவரே வந்து எல்லாப் பொறுப்பையும் ஏத்துக்கிறதா சொல்லி இருக்காரு... தப்பா நினைச்சிக்காதீங்க!" தர்ம சங்கடத்துடன் கூறினார்.

"இல்லை அங்கிள்! எனக்குப் புரியுது. சகிக்கும் இங்கே நம்ம ஆஸ்பத்திரியிலேயே வேலைக்கு ஏற்பாடு பண்ணலாம்னு பிரபுகிட்ட சொன்னேன். பரவாயில்லை... ஆன்ட்டியையும், சகியையும் விசாரிச்சதா சொல்லுங்க" என்று கூறி வைத்தான்.

மனதிற்குள் பெரும் பிரளயம் ஒன்று மையம் கொள்ளத் தொடங்கியது.

வாழ்க்கை எப்போதுமே இயல்பாக செல்வதில்லை. சில

நேரங்களில் பனிக்காலப் பூங்காற்றின் மென்மையான வருடலையும், சில பொழுதுகளில் ஊழிக்காற்றின் உக்கிர தாண்டவத்தையும் எதிர்கொண்டுதான் ஆக வேண்டுமென்பது புரிந்தது.

அந்த நிமிடம் எப்படியாவது சகியை இங்கே வரவழைக்க வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

தன்னுடைய மறுப்பு அவளிடம் கோபத்தைத் தூண்டியிருக்க வேண்டுமென்று தோன்ற— அதை உடனே மாற்றவேண்டும் என்ற எண்ணம் மனதில் உறுதியாய் நிலைபெற்றது.

பிறகு கணபதியும், அவர் மனைவியும் அந்த ஊருக்கே வந்துவிட— அவர் பொறுப்புகளை எல்லாம் ஏற்றதும்— யுகேந்திரனுக்கு இப்போதெல்லாம் ஓய்வு நேரங்கள் அதிகமாகக் கிடைக்கத் தொடங்கின.

அதுபோன்ற நேரத்தில் தோன்றிய ஒரு யோசனைதான், அவனை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது.

உடனே அதைச் செயல்படுத்துவதில் முனைந்தவன், பிரபுவையும் அதற்குத் துணையாக அழைத்தான்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்கப்பட்டு— தன் எண்ணம் நிறைவேறும் நாளுக்காக அவன் காத்திருந்தபோதுதான், அவனுக்கு எதிர்பாராமல் ஒரு சிறு விபத்து நிகழ்ந்தது.

ஒரு நாள் ஜீப்பில் சென்று பழப் பண்ணையைப் பார்வையிட்ட போது, ஜீப் பெரிய பள்ளத்தில் சாய்ந்து, கீழே விழுந்தவனுக்கு காலில் நன்றாக அடிபட்டது.

காலில் கட்டுப் போட்டுவிட்டு மூன்று வாரமாவது அவன் ஓய்விலிருக்க வேண்டும் என்று குடும்ப டாக்டர் கூறிவிட்டார்.

அப்போதுதான் அவனை உடனிருந்து கவனித்துக்கொள்ள ஒரு நர்ஸ் தேவைப்பட்டாள்.

அதை பயன்படுத்திக்கொள்ள முடிவுசெய்தான், யுகேந்திரன்.

ஆனால், அவன் எதிர்பார்த்ததைப் போல் இல்லாமல், சகி மிகவும் மாறிவிட்டதை அவன் அறியவில்லை.

## 10

அன்று, மருத்துவமனையில் சாகித்யா ஒரு வெண் புறாவாய்ச் சிறகடித்து, நோயாளிகளை கவனித்துக்கொண்டிருந்தாள்.

மனம் சோர்ந்திருந்தாலும், கடமை அவளை செயல்பட



வைத்துக்கொண்டிருந்தது.

அப்போது தலைமை டாக்டர் அவளை அழைப்பதாக 'வார்டு பாய்' வந்து சொன்னான்.

'என்ன விஷயமாக இருக்கும்?' என்ற யோசனையுடன் சென்று அவரை வணங்கினாள் சகி.

"உக்காரும்மா! நம்ம ஆஸ்பத்திரி நிர்வாகம் சமீப காலத்துல வேற ஒருத்தர் கைக்குப் போனது உனக்குத் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்" என்றார் அவர், பீடிகையுடன்.

"ஆமாம் சார்! போன வாரம்தான் தெரியும்! 'மீட்டிங்'ல சொன்னாங்க" பணிவுடன் கூறினாள்.

"அந்த சேர்மனுக்கு இப்ப ஒரு சின்ன விபத்து! அதனால காலில அடிபட்டு ஒரு மாசம் ஓய்வில இருக்கவேண்டிய கட்டாயம்! அவரு நம்ம ஆஸ்பத்திரியிலேருந்து ஒரு நர்ஸ் வேணும்னு விரும்பறாரு! அதை செய்ய வேண்டியது நம்ம கடமை இல்லையா? இங்கே எல்லார்கிட்டயும் நல்ல பெயரெடுத்தவ நீ! இந்த வேலைக்கு உன்னைத்தான் அனுப்பணும்னு என் மனசுக்குப்பட்டுது— நீ என்ன சொல்றே?" என்று கேட்டார்.

"சரி சார்! நான் நிச்சயமா அவரைப் பாத்துக்கிறேன்... திருநெல்வேலியில தானே சார்?" கேள்வியாக தன் ஒப்புதலைக் கூறினாள்.

"இல்லைம்மா... கோயம்புத்தூருக்கு பக்கத்துல இருக்கிற ராஜசிம்மபுரத்தில்! ஒரு மாசம் நீ அங்கேயே தங்கியிருக்கிற மாதிரி இருக்கும்...!"

சட்டென்று பனித் திவலைகள் சிதறி— முகத்தில் அறைந்தாற்போன்ற விதிர்ப்புடன் எழுந்தவள், "சார்... சாந்தா சிஸ்டர் என்னைவிட சீனியர்! அவங்களை அனுப்பலாமே?"

தயக்கத்துடன் கூறினாள்.

"டாக்டர்ஸ் எல்லாம் உன்னைத்தான் 'பரிந்துரை' பண்ணினாங்க... நிர்வாகமும் அதை ஏத்துக்கிட்டு உனக்கு தங்கற இடம், அலவன்ஸ், போக வர செலவு, சாப்பாடு எல்லாம் தானே பாத்துக்கறதா சொல்லியாச்சு! நீ போகணும்னு நானும் விரும்பறேன்!" அவர் முடிவாகக் கூறியபோது அவளால் மறுத்து எதுவும் பேச முடியவில்லை.

சதுரங்க ஆட்டத்தில் 'செக்-டு-குயின்' என்பதுபோல அவன் தனக்கு ஒரு 'செக்' வைத்திருப்பது புரிந்தாலும், அவனுக்கு அடிபட்டுவிட்டதாமே இப்போது எப்படி இருக்கிறானோ என்ற

வேதனையும், தவிப்பும் எழுந்தன.

அவரிடம் விடைபெற்று வெளியில் வந்தபோது, எந்த நோக்கத்திற்காக அவன் தன்னை அழைக்கிறான் என்ற கேள்வி புதிராய்!

தான் சாகடித்த பூச்சிகளை காலால் தட்டித் தட்டி விளையாடும் நாய்க்குட்டியாய் தன் மனதை சாகடித்துவிட்டு, இப்போது அது தன்னை நிஜமாகவே பாதித்திருக்கிறதா என்று அறிந்துகொள்ளும் 'வக்கிரம்' நிறைந்தவனாக யுகேந்திரன் மாறிவிட்டானோ என்றும், எண்ணம் எழுந்தது.

எந்த நாளிலும், தன் மனதில் அடி ஆழத்திலிருக்கும் அந்த பலவீனத்தை அவன் அறிய விடக்கூடாது என்ற உறுதியுடன் வீட்டிற்கு வந்தான் அவள்.

அப்பா– அம்மாவிடம் எல்லாவற்றையும் கூறியபோது, இருவருமே மனதிற்குள் மகிழ்ந்தாலும், அவளைத் தனியே அனுப்பவும் மிகவும் யோசித்தனர்.

அப்போதுதான் பிரபு 'போன்' செய்து, யுகேந்திரனின் வீட்டிலேயே அவள் தங்கிக் கொள்ளலாம் என்று கூறினான்.

அவன் தங்கை மதிவதனி பரீட்சை முடிந்து வந்துவிட்டதால் அவளுடன் இருப்பது பாதுகாப்பு என்றும், கணபதி அவளைப் பார்த்துக் கொள்வாரென்றும் தைரியம் கூறினான்.

பிறகு பிரபு அவளிடம் பேசியபோது, 'கார்ட்லெஸ்' போனை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்கு சென்றாள் சகி.

அவனிடம் சில விஷயங்களை பிறர் அறியாமல் பேச வேண்டியிருந்தது.

"பிரபுண்ணா! உங்க நண்பர் தன்னை ரொம்ப புத்திசாலின்னு நினைச்சிட்டிருக்காரு! எனக்கு ஒரு 'செக்' வைச்சு அங்கே வரவழைக்க ஏற்பாடு பண்ணி இருக்காரு... பெரிய பணக்காரர் இல்லையா? தான் அருமை தெரியாம புறக்கணிச்ச குத்துயிரா மனசை கொலை செஞ்ச பொண்ணுங்களை எல்லாம் பட்டியல் போட்டு திரும்பவும் பார்த்து, அதில் திருப்தி அடையற 'சாடிஸ்ட்'னு நான் நினைக்கிறேன்...

"ஆனா இந்த சகியைப் பத்தி அவருக்குத் தெரியாது... இப்ப என் மனசு முழுக்க அவரோட புறக்கணிப்பும், சீனச்சுவரா வளர்ந்து நிக்கிற அந்தஸ்தும், மூச்சுமுட்டுற வெறுப்பும்தான் இருக்குன்னு அவர்கிட்ட சொல்லுங்க..." குரல் தீக்கனலாய் வந்தது.

ஒரு நொடிக்குப் பிறகு, பிரபுவின் குரல் மென்மையாக ஒலித்தது.



"சகிம்மா! நான் உன்னை எப்பவுமே என்னோட கூடப்பிறந்த தங்கையாத்தான் நினைக்கிறேன்... உனக்கும், யுகேனுக்கும் நடுவில் என்ன பிரச்சினைன்னு எனக்குத் தெரியாது! ஆனா, நீ அவனைப்பத்தி நினைச்சிட்டிருக்கிறது தப்புன்னு மட்டும் தெரியுது! நீ நினைக்கிற மாதிரி யுகேன் ஒரு 'சாடிஸ்ட்' இல்லை... எத்தனையோ பொண்ணுங்க அவன் ஒரு ஜமீன் வாரிசுன்னு தெரிஞ்ச உடனே அவனை அடையணும்னு துடிச்சப்போ எல்லோரையும் கடைசியா ஒதுக்கினவன் அவன்.!

"தனக்குன்னு ஒரு கொள்கையோடு வாழுறவன்..! குதிரையேற்றம், களரி, வித்தை, துப்பாக்கி சுடுதல் எல்லாத்துலயும் நம்பர் ஒன்னாத் தேர்ந்தவன். அவன் ஒரு 'ரிஷி' மாதிரிம்மா!" என்று முடித்தான்.

காலை ரயிலில் கிளம்பி மாலையில் அவள் கோயம்புத்தூரைச் சென்றடைந்தபோது, அங்கு கணபதி அவளுக்காக காருடன் காத்திருந்தார்.

"வாம்மா– கிருஷ்ணாவும், சாரதாவும் எப்படி இருக்காங்க? கிருஷ்ணாவை யுகேந்திரன் வரச் சொன்னாரு. இப்ப நீயே வார மாதிரி ஆகிப்போச்சு.." புன்னகையுடன் வரவேற்றார்.

மனது ஒரு கடிகாரம் போல் 'டக்டக்' என்று வேகமாக துடிக்கத் தொடங்க, காரில் ஏறி அமர்ந்தாள் சகி.

இதய ஓட்டம் தாறுமாறாகத் துடிக்க, யுகேந்திரனைப் பார்க்கப் போகிற படபடப்பு அவளுக்குள் அதிகமாய்!

**த**ங்களுடைய பங்களாவின் மாடி வராந்தாவில் அமர்ந்து தோட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்த யுகேந்திரனுக்கோ, அவள் வருகையை எதிர்நோக்கியே இன்று ரோஜாக்கள் மலர்ந்து சிரிக்கின்றனவோ என்று தோன்றியது.

அந்தி வானச் சூரியன் அழகாகச் சிவந்தபடி பூமியிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டிருக்க, சகியின் நினைவுகள் மனதைப் பூஞ்சாரலாய் நனைக்க ஆரம்பித்தன.

தான் எப்படி இதுபோல் மாறினோம் என்பது அவனுக்கே புரியாத புதிராய்!

"அண்ணா! கணபதி அங்கிள் எங்கே?" கேட்டபடி காபியை எடுத்து வந்து அவனிடம் தந்தாள் மதிவதனி!

"சகியை அழைச்சிட்டு வரப் போயிருக்காரு வதனி!"

எங்கோ தூரத்தில் தெரிந்த மலை உச்சியையே பார்த்தபடி கண்களில் மின்னலுடன் அவன் கூற, தன் அண்ணனுக்கும் அந்த

சாகித்யாவுக்கும் இடையே ஏதோ நிகழ்ந்திருப்பதை அந்த நொடியே புரிந்துகொண்டாள் அவள்.

அது என்னவென்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன், "அவங்க எப்படி இருப்பாங்கண்ணா?" மெதுவாகக் கேட்டாள்.

"ம்... இன்னும் கொஞ்ச நேரத்தில நீதான் பாக்கப் போறியே!"

கண்ணோரங்கள் சுருங்க சிறு குறும்புடன் கூறியவனிடம் காலையிலிருந்தே தெரிந்த அலைப்புறுதலும், தவிப்பும் புன்னகையை அரும்பச் செய்தன.

சகியைப் பார்க்கும் ஆசை அவளுக்குள்ளும் அதிகரித்தது.

செல்லும் வழி முழுவதும் ஆவலாகச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்த சாகித்யாவிற்கு அந்த பூமி பெரும் வளம் மிகுந்ததென்று தோன்றியது.

எங்கு திரும்பினாலும் விரவித் தெரிந்த பசுமையும், தூரத்தே தெரிந்த மலைத் தொடர்களும், சில்லென்ற குளிர்ச்சியுடன் இதமாக வீசிய காற்றும் மனதை இதம் செய்யும் வித்தை அறிந்திருந்தன.

**வெ**கு நேரப் பயணத்திற்குப் பிறகு, அந்த பங்களாவிற்குள் கார் நுழைந்தபோது, அவளுக்கு யுகேந்திரன் இவ்வளவு பெரிய பணக்காரனா என்ற பிரமிப்பு வந்தது.

அந்த ஆற்றங்கரையில், அழகிய வெண் பளிங்கு நிறத்தில் தந்தப் பேழையாய் கம்பீரமாக நின்றிருந்தது அவன் பங்களா!

அவள் மனதில் எழுதப்பட்டிருந்த காதல் வாசகத்தை அழிக்க, அந்த பிரம்மாண்டம் ஒன்றே போதுமானதாய்!

தனக்கும், அவனுக்குமிடையே இருந்த அந்தஸ்தெனும் இடைவெளி மூர்க்கமாய் மனதில் புகுந்து தாழ்வு மனப்பான்மை தலைதூக்க, அவள் முகம் மென்மையைத் தொலைத்து இறுக்கமானது.

காரிலிருந்து இறங்கியவுடன், டிரைவர் அவளுடைய பொருட்களுடன் இருவரையும் பின் தொடர்ந்தான்.

கணபதியுடன் பேசிக்கொண்டே உள்ளே சென்றபோது, மனம் மத்தளமாய் முரசு கொட்ட ஆரம்பித்தது.

மாடிக்குச் சென்றவர், அவளை ஒரு பெரிய அறைக்குள் அழைத்துப் போனார்.

அங்கு போடப்பட்டிருந்த பெரிய தந்த நிறக்கட்டிலில் கம்பீரமாகச் சாய்ந்து படுத்திருந்தான் யுகேந்திரன்.

அவளைக் கண்டதும் குறும்புடன் புன்னகைத்து, மென்மையாக வரவேற்றான்.



பதிலேதும் கூறாமல் அவன் உடலை வேகமாக ஆராய்ந்தவளின் விழிகள், காலில் உள்ள கட்டில் நிலைத்தன.

அவள் பார்வையைப் புரிந்துகொண்டவன், "ம்... இதுதான் உன்னை இங்கே வரவழைச்சிது இல்லை?" கூர்மையாகக் கேட்டான்.

சாகித்யா உள்ளே நுழையும் போதே கவனித்த மதிவதனிக்கு, அவளுடைய அழகு பெரும் பிரமிப்பாய்!

அவ்வளவு நேரம் பயணித்திருந்தாலும், அப்போதுதான் மலர்ந்த பூவாய் மிளிர்ந்த முகமும், அந்தக் கம்பீரமான உயரமும், கொடியாய் துவண்ட உடலும், எல்லாவற்றிற்கும் மேல் ஒருவித நிமிர்வுடன் அவள் நின்றிருந்த தோற்றமும் வதனியை வெகுவாய் கவர்ந்தன.

அவளை மேலும் அளவிடும்போதே, யுகேந்திரன் அழைப்பது காதில் விழுந்தது.

"வதனி! நீ கேட்டுட்டே இருந்தே இல்லை... இதுதான்... சகி! என்னைப் பார்த்துக்கறதுக்கு நம்ப ஆஸ்பத்திரி தேர்ந்தெடுத்திருக்கற நர்ஸ்...!

இடையே ஒரு இடைவெளிவிட்டு அறிமுகப்படுத்தினான்.

வேகமாக எழுந்து வந்து வாஞ்சையுடன் அவளுடைய கைகளைப் பற்றினாள், வதனி.

"வாங்க... உங்க குடும்பத்தைப் பத்தி அண்ணா நிறைய சொல்லியிருக்காங்க... அண்ணாவுக்கு உடம்பு சரியில்லாம இருந்தப்ப அவங்களை உங்க அம்மாதான் நல்லா கவனிச்சிட்டதா சொன்னாங்க... ரொம்ப நன்றி சகி! நான் உங்களை அப்படி கூப்பிடலாமில்லை?" புன்னகையுடன் கேட்டாள்.

"நிச்சயமா! நீங்க சொன்ன மாதிரி நன்றி சொல்ற அளவுக்கு நாங்க பெரிசா எதுவும் செஞ்சிடலை. ஒருத்தருக்கொருத்தர் உதவி செஞ்சுக்கிற சாதாரண மனிதாபிமானம்தான் அது!"

சிறு முறுவலுடன் கூறியவளை, மதிவதனியின் கள்ளம் கபடமில்லாத முகமும், தான் ஒரு ஜமீன் வாரிசு என்ற கர்வமும், பந்தாவுமில்லாத எளிமையான அணுகு முறையும் வெகுவாகக் கவர்ந்தன.

அந்த நிமிடம், யுகேன் அவளையே இமை கொட்டாது பார்த்திருந்தான். பனி படர்ந்த கண்ணாடிச் சுவரின் வழியே, ஒரு அழகிய ரோஜாத் தோட்டத்தைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்வு!

ஆனால், ரோஜாக்களைப் பறிப்பதற்கு, முட்செடியில்தான்

கை வைக்க வேண்டுமென்பது யுகேனுக்கு தெரிந்திருந்தாலும், அவள் மனம் இறுகிய பாறையாகிவிட்டதை அறியாதிருந்தான்.

## 11

பிறகு கணபதியும், வதனியும் வெளியில் செல்ல- அவள் மட்டும் யுகேனுடன் தனித்திருக்க வேண்டிய தருணமும் வந்தது.

"என்ன சகி.. ரொம்ப அமைதியா இருக்கே? நீ எப்பவுமே சலசலன்னு அருவி மாதிரிப் பேசிட்டே இருப்பே... நான்தான் மவுனமா இருப்பேன்! ரெண்டுபேருமே நிறைய மாறிட்டோம் இல்லை...?"

அவளையே குறுகுறுத்தபார்வையால் வருடியபடிக் கேட்டான் யுகேன்.

அலைகளின் அடித்தலுக்குப் பதில் கூறாமல் பல யுகங்களாய் மவுனித்திருக்கும் பாறையைப் போன்ற ஒருவித அமைதியுடன் இறுகித் தெரிந்தாள், சகி!

பதில் கூறாத அவளுடைய மவுனத்தையும், வரவழைத்த இறுக்கத்துடன் ஒரு வில்லேற்றிய நாணைப்போல் விரைத்து நின்ற தோற்றத்தையும், ரசனையுடன் அளவிட்டான் அவன்.

பிறகு, "ஏன் எதுவுமே பேசமாட்டேன்கிறே சகி!" மென் குரலில் கேட்டான்.

"என்ன சொல்றது.. எல்லாம்தான் நீங்களே சொல்லிட்டீங்களே!" என்றவளின் குரலில் சிறு எரிச்சல் தெரிந்தது.

"இன்னும் ஒண்ணே ஒண்ணு சொல்லணுமே..! தன் காட்டுக்குள்ளே தைரியமா வந்திருக்கிற ஒரு அழகான புள்ளிமானை... இந்தக் காயம்பட்ட புலி ஆவலோடு வரவேற்குதுன்னு சொல்லலாமா?..ம்" ஒற்றைக்கண் சிமிட்டியபடிக் கேட்டான்.

சட்டென்று இதயம் சுரம் தப்ப, விதிர்ப்புடன் திரும்பிக்கொண்டாள் அவள்.

அவளையே கூர்த்தவன், "ஏன் இங்கே வந்தோம்னு தோணுதா சகி? உங்க அப்பாவை இங்கே வேலைக்கு கூப்பிட்டேன்.. அவர் வரலை.. அவரை அநேகமா நீதான் தடுத்திருக்கணும்.. ஆனா, இப்ப உன்னையே வரவழைச்சிட்டேன். பாரு.. என்கிட்டே மோதினா தோத்துப் போவோம்கிறது இப்பவாவது புரிஞ்சிருக்குமே..."



வேண்டுமென்றே அவனை சீண்டினான்.

"நானா விருப்பப்பட்டு இங்கே வரலை சார்... கையைக் காலைக்கட்டி அழைச்சிட்டு வராமாதிரி, ஆஸ்பத்திரியை விலைக்கு வாங்கி நான்தான் நர்ஸா வரணும்னு 'ஆர்டர்' போட்டது நீங்க! ஆனா நானா விருப்பப்பட்டு வந்த மாதிரி, வரவழைச்சிட்டேன் பாருன்னு இப்ப வீரமாப் பேசற ஒருத்தரை சந்திப்பேன்னு நான் இங்கே எதிர்பார்க்கலை..."

விரக்தியுடன் கூறிவிட்டுத் திரும்பியபோது- அறை வாசலில் மதிவதனியும், டிபனுடன் ஒரு சிறு பெண்ணும் நின்றிருந்தனர்.

சகியின் முகம் இறுகித்தெரிய யுகேனிருவருக்கும் அவனுக்குமிடையே ஏதோ ஒரு டயலாக் நடந்திருப்பது வதனிக்குப் புரிந்தது.

"சகி! அவ்வளவு தூரம் பயணம் பண்ணிட்டு வந்ததிலே ரொம்ப களைப்பா இருப்பீங்க! வாங்க.. உங்க அறையைக் காட்டுறேன். முதல்லே 'டிபன்' சாப்பிடறீங்களா?"

"இல்லை! நான் குளிச்சிட்டு அப்புறமா சாப்பிடுறேன்" என்றபடி அவனிடம் திரும்பினாள்.

"நான் ஒரு அரைமணிநேரம் கழிச்சி வந்து என் வேலையைத் தொடரலாமா சார்... உங்களுக்கொண்ணும் ஆட்சேபனை இல்லையே?" வதனிக்காக போலியாகப் புன்னகைத்தபடிக் கேட்டான்.

"ஓகே.. பிரச்சினை இல்லை.." என்றான், அவனும் குறுகுறுத்த விழிகளுடன்!

தங்கை கண்களிலிருந்து மறைந்ததும்" ஒரு நிமிடம்! வதனிக்காக செயற்கையா சிரிச்சியே.. அது சுத்தமா நல்லாயில்லை! முன்னாடியெல்லாம் சிரிப்பியே.. மனசுக்குள்ளேருந்து நேரா வெளியே வந்தமாதிரி உதடுகளிலே அழகா கசியுமே ஒரு புன்னகை.. அதுதான் அழகா இருக்கும்.." என்றான்.

அவன் குரலில் குறும்பும், கேலியும் கசிந்தன.

உள்ளூரப் பொருமியபடித் திரும்பியவள்- தலையை சிலுப்பியபடி வெளியில் செல்ல, அவனுடைய உதட்டோரம் ரகசியப் புன்னகை ஒன்று புதிதாய் தடம் பதித்தது.

சகியைத் தன்னுடைய அறைக்கு பக்கத்து அறையிலேயே தங்க வைத்தாள், மதிவதனி.

அவள் குளித்துவிட்டு வந்ததும் 'டிபன்' எடுத்து வரச்சொல்லி அந்தப் பெண்ணிடம் அனுப்பினான்.





குளியலறை உள்ளே நுழைந்த சகிக்கோ தனது வீட்டிலிருக்கும் ஒரு படுக்கை அறையை அதற்குள் அடக்கிவிடலாம் போலிருக்க பெரும் வியப்பு வந்தது.

இவ்வளவு வசதியாக இருந்தவன், தங்கள் வீட்டிற்கு வந்து ஒரு வார்த்தை குறைபேசாமல் தங்கியிருந்தது, அவன் பெருந்தன்மையை மெய்ப்பிப்பதாய்!

அவள் தயாராகி யுகேந்திரனின் அறைக்குச் சென்றபோது, அவன் நாற்காலியில் அமர்ந்து டி.வி. பார்த்துக்கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் விழிகளில் குறும்புப் புன்னகையுடன் வரவேற்க, அவனிடம் தெரிந்த மாற்றம், சகியை பெரிதும் வியக்கச் செய்வதாய்!

தன் உணர்வுகளை மறைத்தபடி மவுனமாக அவனருகில் சென்றாள் அவள்.

"உங்களுக்கு வேறே ஏதாவது வேணுமா சார்?" தான் நர்ஸ் மட்டுமே என்ற தொழில்முறைத் தொனியில் வந்தது அவள் குரல்.

"ம்... எனக்கு என்ன வேணும்னு சொல்லிடுவேன். ஆனா, அதைக் கேட்டா உனக்குக் கோபம் வந்துடும்.. இப்ப நீ நல்ல மனநிலையில் இல்லைன்னு தெரியுது. அதனால வெறும் தண்ணி போதும்! அதோ மேசையில் இருக்கும்" என்றான்.

அவன் கூறியது காதில் விழாததைப்போல் அவனது தேவைகளை கவனித்தவள்– அவனுடைய புறங்கையிலும், காலிலும் ஏற்பட்டிருந்த ரத்தக் காயத்தை, பிளாஸ்டரை மென்மையாக அகற்றிவிட்டுப் பரிசோதித்தாள்.

காயத்தின் ரணம் இன்னும் ஆறாமலிருக்க, மருந்து போட்டுவிட்டு புதிதாக 'பிளாஸ்டர்' போட்டுவிட்டாள்.

'ரிபோர்ட்'களை படித்தபோது, கணுக்காலில் லேசான 'பிராக்சர்' என்று புரிய– அவன் விழுந்துவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பும், தனக்கிருப்பது புரிந்தது.

திடீரென்று அவனது குரல் தாழ்ந்த தொனியில் கிண்டலாய் ஒலித்தது.

"வெளிநாட்டில் எல்லாம் 'டேட்டிங்' போறதும், விருப்பமிருந்தா சேர்ந்து வாழுறதும், இல்லைன்னா ஒரு 'பை' சொல்லிட்டுப் பிரியறதும் ரொம்ப சாதாரண விஷயமா இருக்கு.. இங்கேதான் ரொம்ப நிபந்தனைகள். காதலிக்கிற பொண்ணை, ஆசையா ஒரே ஒரு... ப்ச்.. எதுவுமே முடியாது போலிருக்கு.. எரிச்சலா வருது!"

சிறு கோபத்துடன் கூறினான்.

ஓரக்கண்ணால் அவனையே நோக்கியவள், "அதுக்கு வெளிநாட்டில் போய் காதலிச்சிருக்கணும். அதோடு அதுக்கெல்லாம் அந்தப் பொண்ணோட அனுமதி வேணும்..!" உதடு சுழித்து மெதுவாக முணுமுணுத்தாள்.

"ம்..என்ன சொன்னே..?" கண்களில் குறும்பும், ரசனையுமாக அவன் கேட்கவும் ஒருவித எச்சரிக்கை உணர்வோடு பின்னால் நகர்ந்துகொண்டாள் அவள்.

அவளுடைய செய்கையால் சட்டென்று வாய்விட்டு சிரித்தான், அவன்.

அந்தச் சிரிப்பு அவளை பலமாக விழுத்தியது.

பிறகு வந்த நாட்களில், தினமும் அவனுக்கு உடல் துடைத்து 'ஸ்பான்ஜ் பாத்' எடுப்பதும், காயங்களுக்கு மருந்திடுவதும், ஊன்றுகோலின் துணையுடன் தாங்கிப்பிடித்தபடி மெதுவாக நடக்க உதவுவதும் அவளுக்கு வாடிக்கையாயின.

மற்ற நேரங்களைவிட, காயங்கள் ஆறாதிருப்பதால் 'ஸ்பான்ஜ் பாத்' எடுக்கும் நேரங்களில்தான் அவளுக்கு மிகவும் தர்ம சங்கடமாகிப்போனது.

சட்டையைக் கழற்றிவிட்டு ஆணழகன் போட்டிக்கு செல்பவன் போல் அவன் அமர்ந்திருக்க, மெதுவாக உடம்பு துடைத்துவிடும்போது மனம் தாறுமாறாக துடிக்க ஆரம்பித்தது.

மருத்துவமனையில் எத்தனையோ நோயாளிகளுக்கு இதுபோல் செய்தவள்தான்!

ஆனால், மனதில் காதலுடன் இருத்திக் கொண்டவனை தொட நேர்ந்தபோது இனம்புரியா உணர்வில் நெஞ்சம் தடதடத்துப்போனது.

அதைப் புரிந்துகொண்ட யுகேனின் பார்வையும், கூசிச் சிவந்த அவளுடைய முகத்திலேயே குறும்புடன் பதிந்திருக்கும்.

சில நேரங்களில் அவனை ஏறிட்டுப் பார்க்க நேரிட்டால், கூர்மையாக அவள் விழிகளில் நுழைந்து மனதைப் படிக்கும் அவன் பார்வை, சட்டென்று மூச்சை நிறுத்தி- உள்ளே நுழைந்த சுவாசக்காற்றை நுரையீரல் தீண்டாமலே திரும்பச் செய்யும்.

உடனே கன்னங்களில் இரு இளம்சிவப்பு மலர, தன்னை சமாளித்துக்கொள்ள மிகவும் சிரமப்படுவாள் அவள்.

அதுபோல் ஒரு நாள், "எப்படி இவ்வளவு நாள் இதை 'மிஸ்'



பண்ணினேன்?" புரியாத குரலில் அவன் மெல்லென்று கேட்டான்.

"எதை..?" கேள்வியுடன் நிமிர்ந்தாள் அவள்.

"இல்லை.. வெட்கத்துல சிவப்பா மாறுற அந்தக் கன்னத்துல தெரியுற அற்புத அழகை..!"

குறும்புடன் அவன் கூற, பதற்றத்தில் அவள் கையிலிருந்த துண்டு நழுவிக் கீழே விழுந்தது.

"சகி... என்னாச்சு? ஏன் இந்தப் பதற்றம்? இது ஒரு சின்ன பாராட்டு... அவ்வளவுதான்! இதை ஈஸியா எடுத்துக்கலாமே..! நீ ஒரு நர்ஸ். ஆண்- பெண் வித்தியாசமில்லாம நோயாளிகளை உச்சிமுதல் பாதம் வரை தொட்டு சிகிச்சை தர்றவ!

"என் பார்வையிலயே இப்படி சிவந்துபோறியா, அதுக்கு ஏதோ ஒரு அர்த்தம் இருந்துதானே ஆகணும்..? அதை ஏன் ஒத்துக்க மறுக்கிறே?" உதட்டோரம் துடித்த புன்னகையை அடக்கியபடி கேட்டான்.

நாணத்தில் சிவந்திருந்த முகம், அந்தக் கேள்வியால் எழுந்த கோபத்தில் அனலாய் தகித்து மேலும் சிவக்க- விழிகள் தீச்சுடர்களாகின.

"அப்பப்பா! என்ன கோபம்... அனல் அடிக்குது! 'சுட்டும் விழிச்சுடரே'ன்னு பெண்களைப்பத்தி சரியாதான் சொல்லி இருக்காரு, பாரதியார்!" சிரிப்பை அடக்கியபடிக் கூறினான்.

'இவன் ஏன் இப்படி என்னை வதைக்கிறான்..! நான் விரும்பியபோது காதலை ஏற்றுக்கொள்ள மறுத்தவன்.. இப்போது நிலைமை உணர்ந்து நான் விலகும்போது, ஏன் தன் சொற்களாலே என்னை பனித்துளியாய் சிலிர்க்கச்செய்கிறான்?' என்று கோபம் வந்தது.

உடனே, இறுக்கத்துடன் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டவள்- அன்று முழுவதும் அப்படியே இருந்தாள்.

அவளது தீண்டல் ஏற்படுத்திய [illegible] மனதின் பூகம்பங்களும், அவளிடமிருந்து வரும் மென்மையான நறுமணமும், யுகேனையும் பெரும் தவிப்பில் ஆழ்த்தின.

யுகேனின் மனதிலோ, கற்பனையில் வடித்த கவிதையாய், கனவில் மீட்டிய வீணையாய் அவள் நினைவுகள்!

அன்றிரவு அவளும், வதனியும் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

"நீங்க யாரையாவது காதலிச்சிருக்கீங்களா சகி?" திடீரென்று

கேட்டு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் அவன்.

ஒரு கணம் பதைப்புடன் எழுந்துவிட்ட சகி, "ம்... இல்லையே...! ஏன் கேக்கிறீங்க?" வியப்புடன் கேட்டாள்.

"காதலிக்கறவங்கதான் அடிக்கடி பேசறப்ப தடுமாறுவாங்க... எந்த வேலையைச் செஞ்சாலும் நினைவுகள் வேறே எங்கேயோ இருக்கும்... அடிக்கடி தனக்குள்ளே சிரிச்சிப்பாங்க... அப்படின்னெல்லாம் எங்க ஆஸ்டல் பொண்ணுங்க பேசிப்பாங்க... அதான் கேட்டேன்..."

"ஏன், நான் அதுமாதிரி ஏதாவது செய்யறேனா?"

"இல்லை... என்னவோ கேக்கணும்னு தோணுச்சு அதான்! ஆனா எங்க அண்ணா ஒரு பொண்ணை விரும்பறாரு... உங்களுக்குத் தெரியுமா?" உற்சாகத்துடன் கேட்டாள்.

உடனே உடலெங்கும் சூடாகிவிட – கூடவே தகித்த மனதையும் அடக்கியவள், "ஓ...!" என்றாள் மென்குரலில்.

"அது யாருன்னு நீங்க கேட்க மாட்டீங்களா? எனக்குத் தெரியும்... இதே ஊர்லதான் அந்தப் பொண்ணு இருக்காங்க" குறும்புடன் கூறிவிட்டு, அவள் திரும்பினாள்.

வெண்பளிங்காய் வெளுத்த சகியின் முகம், ஒரு மெழுகுச்சிற்பத்தை நினைவுபடுத்தியது.

ஒரு நொடி அவள் மனம், முகத்தில் கண்ணாடியாய் பிரதிபலித்துவிட, வதனிக்குள் புன்னகை.

ஆனால் மனதிற்குள் மவுனக் குமுறலுடன் உறங்கச் சென்றாள் சாகித்யா.

மனதிற்குள் புன்னகைத்துக்கொண்டே தன் அண்ணனிடம் சென்ற வதனி, எல்லாவற்றையும் கூறி சிரித்தாள்.

"ஏய் கழுதை... உன்னை சின்னப் பொண்ணுன்னு நினைச்சா... கண்டுபிடிச்சிட்டியா...! வாலு... உன்னை என்ன பண்ணுறேன் பாரு..." குறும்புடன் கையை ஓங்கினான், யுகேன்.

"பாத்தீங்களா? உங்க வாயால ஒத்துக்க வெச்சிட்டேன்... பெரிய சி.ஐ.டி. வேலை எல்லாம் பாக்க வேண்டியிருந்தது. சரியான அழுத்தம்ணா, நீங்க! சகி அதைவிட மோசம்... சாரி... அண்ணின்னு சொல்லணும் இல்லை?" கண் சிமிட்டியபடி கேட்டாள்.

"ஏய்! சும்மாவே அவ என் மேல கோபமா இருக்கா! நீ வேற எதையாவது கிளப்பிவிட்டுட்டியா? நாளைக்கு அவ்வளவுதான்!"

"ஹாம்... என் அண்ணனை பெரிய வீரன்னு நினைச்சேன்... அவ்வளவுதானா? அண்ணிக்கு இப்படி பயப்படுறீங்க!" கிண்டல்



செய்தவள், பிறகு 'குட்நைட்' கூறிவிட்டுச் சென்றாள்.

உறங்காமல் படுத்திருந்த சகியின் மனமோ, உலைக்களமாய்!

வதனி கூறிய அந்தப் பெண்யாராக இருக்கும்...?

தன்னிடம் பெண்களைப் பற்றி அவ்வளவு ஏகத்தாளமாகப் பேசியவன்... இப்போது ஒரு பெண்ணை விரும்புகிறான் என்றால் அவளால் நம்பவே முடியவில்லை...!

நம்ப நினைத்தபோது, அவனுடைய தற்போதைய மாற்றம் வேறு மனதை கத்திக் கப்பலாய் கிழித்துச் சென்றது.

# 12

மறுநாள் காலையில் யுகேனின் அறைக்கு வரும்போதே பெரும் யோசனையுடன் இருந்தாள் சகி!

அவனுடைய சட்டைக் காலருக்கு மேல் பார்வையை உயர்த்தவே இல்லை.

பொறுமையாகத் தன் பணிகளை செய்தவளிடம், சிறிது நேரம் கழித்து "இது கோயம்புத்தூர்ல வாங்கின 'டி-சர்ட்' உனக்குப் பிடிச்சிருக்கா... நல்லாருக்குதானே...?"

திடீரென்று அவன் கேட்க – குழப்பத்துடன் அவள் நிமிர்ந்தபோது, "இல்லை. ரொம்ப நேரமா இந்த 'டி-சர்ட்'டையே உத்து உத்துப் பார்த்துட்டிருந்தியே அதான் கேட்டேன்..." –கேலியாகக் கூறினான்.

"நான்... ப்ச்..." என்றபடி அவள் திரும்பவும் கட்டுப்போட ஆரம்பித்தாள்.

"அதென்ன நான்... ப்ச்... புரியலையே?" விடாமல் தொடர்ந்தான்.

"சார்! என்னை நிம்மதியா வேலைபார்க்க விடுங்க...! சும்மா எதையாவது பேசி தொந்தரவு பண்ணாதீங்க! ப்ளீஸ்..."

சீற்றத்துடன் கூறியவளையே ஒரு நொடி அதிசயமாகப் பார்த்தவன், அன்று முழுவதும் ஏனோ அமைதியாக இருந்தான்.

ஆனால் சகியின் மனமோ நிலைகொள்ளாமல் தவித்தது– ரெயில்போலும் தடம்புரண்டது!

அவன் சின்னதலும், பாரமாய்... அவனுடைய மவுன விலகலும் ஒடித்துப் போடுவதாய்...!

காதல் என்பது சுகத்தையும், சோகத்தையும் கலந்து தரும்

பல வர்ணம் கொண்ட வானவில் என்பதை சகி அறியவில்லை.

இறுகிப்போன அவனுடைய இதயச் சுரங்கத்தின் ஆழத்தில் காதல் வைரம் உருவாகி இருப்பதையும் அவள் உணரவில்லை.

தன்னை ஜமீனுக்கு வரவழைத்து, 'நான் எவ்வளவு வசதியானவன்... ஒரு ஜமீனின் வாரிசு பார்!' என்பதைப் பிரகடனப்படுத்தி– 'உன் ஆசைகளை மனதிற்குள் புதைத்துக்கொள். நீ எனக்கு தகுதியானவன் இல்லை' என்று சொல்லாமல் சொல்லி தன்னை வதைப்பானோ என்று எதிர்பார்த்து வந்தவளுக்கு, இன்று அவன் செய்கைகள் புதிராய்...!

ஆனால் தனக்கும், அவனுக்கும் இடையே தெரிந்த மலையளவு அந்தஸ்து வித்தியாசமும், பெண்களைப் பற்றிய அவனுடைய கணிப்பும் அவர்கள் மேல் அவன் கொண்ட வெறுப்பும் அவனுடைய காதலைக் குற்றுயிராக்கி இருந்தன.

**கா**லமெனும் ராஜபாட்டையில், வாழ்க்கை சீராக பயணிக்க ஆரம்பித்தது.

ஒரு நாள், காலையிலிருந்தே அவன் மெல்லிய குரலில் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டே இருந்தபோது, அவள் முதலில் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

பிறகு மதியம் தன்னையும் அறியாமல் அவளும் அந்தப் பாட்டை முணுமுணுக்க ஆரம்பிக்க, "ஓ உனக்கும் அப்படித்தானா?" அவன் உல்லாசக்குரலில் கேட்டான்.

என்னவென்று புரியாமலே மெதுவாக நிமிர்ந்தாள்.

பிறகுதான் அதன் அர்த்தம் புரிய, வெகுவாக விதிர்த்துப் போனாள் அவள்.

**"தீண்டத் தீண்ட மலர்ந்ததென்ன...**
**பார்வை பார்த்து கலந்ததென்ன...?"**

என்ற பாடல் அவளை கேலி செய்யவே பாடப்பட்டதுபோல் தோன்ற, அதுவுமே அவள் மனதிலும் கோபத் தீயை மூட்டியது.

"சே!" என்றபடி அவள் திரும்ப, அவள் கை இறுக்கமாகப் பற்றி நிறுத்தப்பட்டது.

சட்டென்று, காற்றில் ஒருவிதக்கோப வெப்பம் பரவுவது போல்...!

"சகி! இது என் வீடு! நீ இங்கே எனக்கு உதவி பண்ண வந்திருக்கிற ஒரு நர்ஸ்...! அத மறந்துடாதே... என்கிட்ட இந்த முகம் திருப்பற அலட்சியமெல்லாம் வேண்டாம்!" அடிக் குரலில் தெளிவாகக்



கூறினான், யுகேன்.

அந்தக் குரல் அவளை ஏதோ செய்து, மந்திரத்துக்குக் கட்டுண்டவளைப் போல் ஆட்படுத்த, ஒன்றுமே பேசாமல் சகி.

செக்குமாடாய் ஒரு வளையத்திற்குள்ளேயே சுற்றி வருவதுபோல், திடீரென்று ஒருவித ஆயாசம் வந்து மனதைத் தழுவியது.

மறுகணமே மனம் தாய்–தந்தையின் அருகாமையையும்... வளர்த்த ஊரையும் எண்ணி ஏக்கமானது.

எங்காவது, அவன் பார்வையிலிருந்து நீங்கி தொலைதூரம் செல்ல வேண்டும்போல்...!

அன்று மாலையில், "வதனி! இங்கே பக்கத்துல கோவில் ஏதாவது இருக்குமா? போகணும் போல இருக்கு.. மனசே சரியில்லை.. உங்க அண்ணனை கொஞ்ச நேரம் பாத்துக்கிறீங்களா? நான் போயிட்டு வந்திடுறேன்.." மெதுவாகக் கேட்டாள் அவள்.

"ஏன் சகி.. ரொம்ப 'டல்'லா இருக்கீங்க! அம்மா– அப்பா ஞாபகமா?"

"ம்..." என்று கூறியபோது, தினமும் இரவில் 'செல்'லில் பேசும் தாய்– தந்தையின் நினைவுகள் ஏக்கமாய் படர்ந்தன.

"அண்ணாவை மருதன் பாத்துக்குவான். இங்கே ஒரு வனதுர்க்கை கோவில் இருக்கு– நாம ரெண்டு பேரும் அங்கு போயிட்டு வரலாம்" என்று அவளும் கிளம்பினாள். இருவருமாகச் சென்று யுகேனிடம் கூறியபோது, அவனுடைய புருவங்கள் கேள்வியுடன் உயர்ந்தன.

"ம்... சரி.. வீட்டிலேயே அடைஞ்சு கிடந்தா போரடிக்கும்தான்! கணபதி அங்கிளையும் அழைச்சிட்டுப்போங்க. சீக்கிரம் வந்துடுங்க" என்று அனுப்பிவைத்தான்.

காரில் கணபதியுடன் இருவரும் அந்தக் கோவிலுக்குச் சென்றனர்.

அங்கிருந்த அம்மன் உக்கிரமாகக் காட்சியளித்தாலும், ஏதோ சொல்லொணாத ஒரு அமைதி மனதில் பரவுவதை அவளால் உணர முடிந்தது.

துர்க்கையை தரிசித்தபிறகு கோவிலை சுற்றி முடித்துவிட்டுத் திரும்பி வரும்போதுதான் ஒரு சிறு பையனைத் தூக்கிக்கொண்டு பலர் ஓடிவந்தனர்.

என்னவென்று விசாரித்தால்– பாம்பு கடித்ததாகவும், பூசாரி மந்திரித்தால் சரியாகிவிடுமென்றும் உடன் வந்தவர்கள் கூறினர்.

உடனே அவசரமாக செயல்பட்டாள் சகி.

அவர்களை எல்லாம் விலக்கிவிட்டு– விஷம் பரவாதபடி ஒரு

[illegible] கட்டுப்போட்டு– காரிலிருந்த கத்தியை எடுத்து வந்து அந்த காயத்தைக் கீறி அழுத்தி– கடிவாயில் இருந்த ரத்தத்தை வெளியேற்றிக் கழுவினாள்.

உடனே கணவதியிடம் திரும்பியவள், "அங்கிள் ப்ளீஸ்! இந்தப் பையனை உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனா பிழைச்சிடுவான்" எனும்போதே அந்தச் சிறுவனின் வாயில் நுரை தள்ள ஆரம்பித்திருந்தது.

உடனே அவனையும், அவனுடைய தந்தையையும் ஏற்றிக்கொண்டு அவர்கள் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கு மருந்து கொடுத்ததில் அந்தப் பையன் பிழைத்துக் கொண்டான்.

பிறகு அவர்களின் கூட்டமே கண்ணீருடன் சகிக்கு நன்றி கூறியது.

"பாம்பு கடிச்சா பூசாரிகிட்ட போறதை விட்டுட்டு, உடனே நான் செஞ்சா மாதிரி கட்டுப்போட்டு, ஆஸ்பத்திரிக்கு உடனே அழைச்சிட்டுப் போங்க.. ஆள் நிச்சயமா பிழைச்சிடுவாங்க."

பரிவுடன் அவர்களுக்குப் புரியும்விதமாக அவள் எடுத்துரைத்த போது, அவர்கள் அக்கறையுடன் கேட்டுக்கொண்டனர்.

"ரொம்ப நன்றிம்மா.." அந்தச் சிறுவனின் தாய் கண்ணீர் கலந்த நன்றியுடன் கைகூப்பினார்.

அந்தக் கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டவள், "தெய்வத்தைத்தான் வணங்கணும்மா! நான் சாதாரண மனுஷிதான்..! நோயாளிக்கு உடனே என்ன செஞ்சா அவங்க குணமாவாங்கன்றதைத் தெரிஞ்சிகிட்டு செய்யற ஒரு நர்ஸ். அவ்வளவுதான்! நீங்களே அந்த நிமிஷம் சமயோசிதமா செயல்பட்டு இந்த மாதிரி ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு வந்திட்டீங்கன்னா, எல்லாரையும் காப்பாத்திடலாம்."

சிறுமுறுவலுடன் அவள் கூற, நன்றி சொல்லிய கூட்டத்தினர் சிறுவனைப் பார்க்க ஓடினர்.

மயக்கமும், பயமும் பெரிதும் தெளிந்து இப்போது இயல்பாகியிருந்தான் அவன்.

சோமன் என்ற அந்தச் சிறுவனிடம் தைரியம் கூறி விடைபெற்று வெளியே வந்தபோது மனம் நிர்மலமாகி இருந்தது.

ஆதுரை மனதில் படிந்திருந்த வேதனைகளும், சஞ்சலங்களும் சட்டென்று காணாமல் போயிருக்க ஒரு உயிரைக் காப்பாற்ற தன்னால் உதவ முடிந்ததே என்ற நிம்மதி மனதில் படர்வதாய்..!



தன்னால் எவரையும் காயப்படுத்த முடியாது. குணப்படுத்த மட்டுமே முடியும் என்ற எண்ணத்தில் பெரும் தெளிவு வந்தது. அவளையே பெருமையுடன் பார்த்துக்கொண்டிருந்த வதனி, வீட்டிற்கு வந்ததும் எல்லாவற்றையும் அண்ணனிடம் கூறிவிட்டாள்.

அவள் கூறியதையே யோசனையுடன் கேட்டுக்கொண்டிருந்தான் அவன்.

பிறகு, "சகி எப்பவுமே அப்படித்தானம்மா! மத்தவங்க கஷ்டப்பட்டா அவளுக்குத் தாங்காதுன்றதை, நான் உடம்பு சரியில்லாம படுத்திருந்தப்ப அவ தலையோட அம்மாகிட்ட பேசறதை வச்சிப்புரிஞ்சிகிட்டேன்" என்றான் பெருமையுடன்.

பிறகு வதனி சென்றபின், அவளிடம் மெதுவாகத் திரும்பினான்.

"மத்தவங்க கஷ்டப்பட்டா தாங்காம ஓடி ஓடிச் செய்யறவ, பக்கத்துலயே ஒருத்தன் இவ்வளவு கஷ்டப்படும்போது புரிஞ்சிக்காம இருக்கிறதுதான்.. ம்.. ஆச்சரியமா இருக்கு!"

போலிப் பெருமூச்சுடன் கூறினான்.

வேகமாகத் திரும்பியவள், "நான் என் வேலையை சரியாதான் செய்யறேன் சார்.. நீங்கதான் பேசிப் பேசி என்னை தொந்தரவு செய்யறீங்க..! உங்களுக்குத் திருப்தியா இல்லைன்னா பேசாம வேற யாரையாவது ஒரு நர்ஸை வரவழைச்சிக்கங்க. நான் நிம்மதியா போயிடுவேன்.." அழுத்தமான குரலில் சொன்னாள்.

"ம்.. கொஞ்சம்கூட விட்டுக்கொடுக்கமாட்டியே... நான் உடம்பைப் பத்தி சொல்லலை.. அதுக்குள்ளே இருக்கிற என் மனசை பத்தி சொன்னேன்" குறும்புடன் கூறினான்.

"சாரி சார்! அதுக்கு நீங்க ஒரு மனநல மருத்துவரைப் பார்க்கணும்! நான் சாதாரண நர்ஸ்தான்.."

–கூறிவிட்டு ஒரு பிளாஸ்டரை எடுத்தாள். கனிப்பு பூசி இறுகிப் போயிருந்த அவன் கால் தசைகளை உருவி, 'பிஸியோதெரபி' செய்ய ஆரம்பித்தாள் சகி.

பதிலுக்கு பதில் கொடுத்தாலும், ஏனோ நெஞ்சுக்குள் திருப்தி வர மறுத்தது.

படபடத்த மனச் சிறகிலிருந்து உதிர்ந்த பழைய ஞாபகங்கள் அவனுடைய புறக்கணிப்பை, காற்றின் சிறலாய் அவளுக்கு நினைவுபடுத்தின.

அவனுடைய பேச்சினால் அவள் முகமும் இறுகிவிட... அன்றிலிருந்து அவன் அவளிடம் அனாவசியமாக எதுவுமே பேசவில்லை...

ஏதாவது வேண்டுமென்றால் கூட, வதனி இருக்கும்போது மட்டுமே அவனிடம் சொல்ல ஆரம்பித்தான்.

மறுவாரமே, மருத்துவமனைக்குச் சென்று 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்ததில் எலும்புகள் இணைந்திருந்தன.

போனவாரமே கால் கட்டைப் பிரித்திருந்தனர்.

அதற்கான பயிற்சிகள் நடக்கும்போது, தாங்கிப் பிடிப்பதற்கென்று மருதனை உடன் வைத்துக்கொண்டாள் சகி.

ஆனால், அவள் அந்த அறையில் இருக்கும்போது, உணர்ச்சிகளைத் தொலைத்த யுகேனுடைய பார்வை மட்டும், அவளைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

வார்த்தைகளைவிட, ஊசியாக உரசிய உறுத்தும் பார்வைகள் அவளை பெரிதும் பலமிழக்கச் செய்தன.

அவன் விரும்பும் பெண், இந்த ஊரில் யாரென்ற கேள்வியும்... வண்டாய் இதயத்தைக் குடைந்துகொண்டே இருந்தது.

இந்த சில நாட்களாய் தன்னையே அவனிடம் தொலைத்துத் தவிப்பது புரிந்தது.

வேறு ஒரு பெண்ணை அவனுடைய இணையாய் ஏற்றுக்கொள்ள மனமின்றி இதயம் ரத்தக்கண்ணீர் வடித்தது.

அவனுக்காகவே மீண்டும் உயிர்த்தெழுந்தன... இதயத்தில் மீட்டப்பட்ட உணர்வுகள்.

ஆனால், வேறு ஒரு பெண்ணை விரும்புபவன், தன்னிடம் நெருங்கிப் பழகுவதைத்தான் அவளால் ஏற்கவே முடியவில்லை.

## 13

ஒரு வெள்ளிக்கிழமையன்று, எப்போதும்போல் சகியும், வதனியும் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

அம்மன் தரிசனம் முடிந்து, நிறைந்த மனதுடன் திரும்பி வரும்போதுதான், கார் திடீரென்று பழுதாகி நின்றுவிட்டது.

உடனே, டிரைவர் இறங்கிச்சென்று என்னவென்று பார்க்க, அவருக்கும் எதனால் பழுதாகி இருக்கிறதென்று தெரியவில்லை.

பெண்கள் இருவரையும் காரிலேயே அமர வைத்துவிட்டு, 'மெக்கானிக்'கை அழைத்து வரச்சென்றார் அவர்.

உடனே, அருகிலிருந்த டீக்கடையிலிருந்து தேநீர்க் கோப்பை



களுடன் ஓடிவந்தார் அந்தக் கடைக்காரர்.

மகிழ்ச்சியுடன் டீயை நீட்டியவர், "ரொம்ப சந்தோஷம்மா! இன்னிக்கு கார் ரிப்பேராகி நின்னதாலே, உங்களுக்கு 'டீ' சப்ளை பண்ணுற பாக்கியம் எனக்கு கிடைச்சது. வேற ஏதாவது வேணுங்களாம்மா?" பணிவுடன் கேட்டார்.

வதனி மெல்லிய புன்னகையுடன் மறுத்துவிட்டு, நன்றி கூறினாள்.

தேநீரைப் பருகியபடி மெதுவாகத் திரும்பியவளின் விழிகளில் அந்தக் காட்சிபட, பார்வை உடனே கூர்மையாகியது.

பெஞ்சில் சிலர் அமர்ந்திருக்க, ஒரு சிறுவன் அவர்களுக்கு தேநீர் கோப்பைகளை அளித்துக்கொண்டிருந்தான். அருகிலேயே ஒரு சிறுமி பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருக்க- இதுவரை தான் பார்த்த எல்லா இடங்களிலுமே சிறுபெண்களும், சிறுவர்களுமே வேலைசெய்வது நினைவுக்கு வர யோசனையுடன் திரும்பினாள்.

"வதனி! இங்கே கடைகள், ஓட்டல், மார்க்கெட்டுன்னு, ஏன் எல்லா இடத்துலயும் சின்னப் பசங்களே வேலை பார்க்குறாங்க? அவங்க படிக்கமாட்டாங்களா?" கவலையுடன் வினவினாள்.

"சகி! இங்கே அப்படித்தான்! அப்பா இருந்தப்ப, ஒரு பள்ளிக்கூடம் கட்டினாங்க. இந்தமாதிரித் தொழிலாளர்களோட பிள்ளைகளுக்கெல்லாம் இலவசமாக் கல்வின்னு அறிவிச்சாங்க!"

"ஆனா, படிக்க அனுப்பிட்டா எங்களுக்கு யாரு சம்பாதிச்சிப் போடுறதுன்னு அவங்க யாருமே பிள்ளைங்களை சேர்க்கலை! பள்ளிக்கூடம் இப்ப நடந்திட்டுதான் இருக்கு-இருபது பசங்ககூட இல்லை!

"எல்லா வகுப்பும் காலியாத்தான் இருக்கு! இவங்களுக்கெல்லாம் படிக்கணும்கிற ஆர்வத்தை வரவழைக்கறது ரொம்பக்கஷ்டம் சகி!" ஒரு பெருமூச்சுடன் கூறினாள் அவள்!

"நாமதான் அந்த விழிப்புணர்வை உருவாக்கணும் வதனி! எவ்வளவு சின்னப்பசங்க... பாவம் துள்ளி விளையாட வேண்டிய வயசுல, வேலைன்ற பெரிய பாரத்தை சின்னமுதுகிலே சுமக்கிறதை நினைச்சா கஷ்டமா இருக்கு...

"படிப்பறிவும் இல்லாம, எதிர்காலக் கனவுகளெல்லாம் சிதைக்கப்பட்டு பெரியவர்களோட சோம்பேறித்தனத்துக்கும், சுயநலத்துக்கும் அவங்க வாழ்க்கையே அடகு வைக்கப்படறதை தடுக்கணும்! ஏதாவது செய்யணும்" உறுதியுடன் முடித்தாள் சகி!

ஆனால், பேசக்கென்று இல்லாமல், மறுநாளே அதற்கான முயற்சிகளை ஆரம்பித்துவிட்டாள்.

முதல் முயற்சியாக, யுகேனிடம் இதுபற்றி அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே, யோசனையுடன் அவளை அளந்தான் அவன்.

"குழந்தைகளுக்கு படிப்பு ரொம்ப முக்கியம்... அவங்கதான் நம்ம வருங்காலத் தூண்கள்... நம்ம நாட்டோட எதிர்காலத்தை செதுக்கப்போற சிற்பிகள்... அவங்களோட கனவுகளை அழிக்க யாருக்குமே உரிமையில்லை... அது அவங்க பெற்றோரா இருந்தாக் கூட!" கோபத்துடன் முடித்தாள்.

"எனக்கும் புரியுது சகி! ஆனா, இது காலம் காலமா நடந்துட்டிருக்கிற ஒரு விஷயம்! ஒரே நாளிலே இதை மாத்துங்கன்னா நிச்சயமா முடியாது!" இயல்பாக பதிலளித்தான்.

"உடனே மாத்துங்கன்னு சொல்லலை! இந்த ஊரிலே உங்க பேச்சுக்கு மதிப்பு குடுக்கறவங்க அதிகம்! நீங்க நினைச்சா இதை சாதிக்கலாம். குழந்தை தொழிலாளர்களை காக்க மத்திய அரசே ஒரு சட்டம் கொண்டு வந்திருக்காங்க!

ஆனா, சட்டம் மட்டுமே இதற்குத் தீர்வாகாது. இந்த சமுதாய மறுமலர்ச்சியை சாதிக்கணும்னா, நம்மை மாதிரி மேல்தட்டு மக்களோட எண்ணங்களிலேயும் மாறுதல் வரணும்!

"குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகறதுக்குக் காரணமே வறுமையும், பெத்தவங்களோட பொறுப்பில்லாத்தனமும், சுயநலமும்தான்! இதுமாதிரி வேலைக்குப் போயிட்டு, இந்தப் பசங்க படுற துயரங்களைப் பார்த்து நமக்கென்னன்னு ஒதுங்கிப் போற மனோபாவம் முதல்லே மாறணும்!

"குழந்தைத்தொழிலாளர்ங்கிற வார்த்தையையே அகராதியிலருந்து மறையணும்! எல்லாத்துலயும் நாம வேகமா முன்னேறிட்டிருந்தாலும், மனிதாபிமானம்– மனிதநேயம்கிற அற்புதமான விஷயத்துல ரொம்பப பின்னோக்கி இருக்கோம்...

"அந்த சின்னஞ்சிறு ஜீவன்களோட காயங்களை, வலிகளைக் கண்டுக்காம ஒதுங்கிப் பழகிட்டோம்! அவங்க அனுபவிக்கிற துயரங்களுக்கு நமக்கு எப்போ வலிக்குதோ, அப்பதான் அதைத் தடுக்க முடியும்!"

அழுத்தமான குரலில் உறுதியுடன் முடித்தாள் அவள்.

உடனே பெருமிதமும், சிலிர்ப்புமாய் மெலிதாக



கைதட்டினான் அவன்!

"எப்பவுமே நான் உன்னைப் பாத்து வியந்து பிரமிச்சுப் போற விஷயம், இந்த மனிதநேயமும், சமூக சிந்தனையும்தான்..." ஆழ்ந்த குரலில் கூறினான்.

"ம்... நன்றி! ஆனா, நீங்கதான் இதை மாத்த முயற்சிக்கணும்!"

"ப்ச்... என் இதயத்துக்குப் பிடிச்ச ஒரு பெண்ணோட மனசையே என்னால மாத்த முடியலை! இதிலே... ஒரு ஊரையே எப்படி?"

வேண்டுமென்றே ஒருவித விலகல்தன்மையுடன் கூறினான்.

"ப்ளீஸ் சார்! இது ஒரு சமுதாயப் பிரச்சினை! அதைப் பேசும்போது... சொந்த விஷயம் தயவுசெஞ்சு வேண்டாமே!"

அவன் மனதிலிருக்கின்ற அந்தப் பெண் யாரென்ற சிறு வலியுடன், மெல்லிய குரலில் பகர்ந்தாள்.

"சரி! உனக்காக இதை நான் செய்யறேன்..." சிறுமுறுவலுடன் இழுத்தாற்போல் முடித்தான் அவன்.

ஒரு பெரிய பாரம் இறங்கிய நிம்மதியுடன் "ரொம்ப நன்றி" என்றாள், அவள்.

"ஒரு நிமிஷம் சகி உன்னால முடியுமா?"

"புரியலை..."

"நீ கேட்டதை நான் செய்யணும்னா, பதிலுக்கு நீ எனக்கு ஏதாவது பண்ணணுமே...ம்... என்ன தருவே... உன்னைத் தருவியா?" கிசுகிசுப்பான குறும்புடன் முடித்தான்.

சட்டென்று, விதிர்த்துப் போய் நிமிர்ந்தாள் அவள்

"ப்ச்... ஒரு நல்ல விஷயம் பேசறப்போ... அதைப் போய் பண்டமாற்று வியாபாரம் போலாக்கி... சே!" தலையைக் குலுக்கியபடி வேகமாக எழுந்தாள்.

உடனே அவளை இரும்பின் கடினத்துடன் பற்றி நிறுத்தியது அவன் கரம்!

"ஊரிலே இருக்கிற எல்லாருக்காகவும், முன்னே பின்னே பழகாதவங்க மேலக்கூட இவ்வளவு கரிசனம் காட்டுறியே? என்மேல மட்டும் ஏன் இரக்கமே வரமாட்டேங்குது...ம்...?"

ஒற்றைப்புருவம் ஏறி இறங்க– அவன் கேட்ட கேள்விக்கு பதில் கூறாமல்– அவனுடைய பிடியிலிருந்து கையை விடுவித்துக்கொண்டு விலகி ஓடினாள் அவள்.

"ஏய்... பாத்து! இரு...இரு... ஒரு நாள் இதுக்கெல்லாம் சேத்து

வட்டியும், முதலுமா வசூலிக்கத்தான் போறேன்!"

குறுஞ்சிரிப்புடன் கூறிவிட்டு- கண்களை மூடி சாய்ந்து கொண்டான் அவன்.

வேகமாகத் தன் அறைக்குள் வந்தவளுக்கு, பல விடை தெரியாத கேள்விகள்!

தான் விரும்புகிறேன் என்றபோது மறுத்தவன், வேண்டுமென்றே இப்போதெல்லாம் தன்னை சீண்டுவது புரியவில்லை!

அவன் மேலிருந்த கோபம்... பெரும் ஊடலாய் மாறி இருக்க, ஓட்டுக்குள் சுருங்குகிற நத்தையாய் பழையபடி தனக்குள்ளேயே இறுகிப் போனாள்.

ஆனால் தன் வழித்துணை, எதிர்காலம், நம்பிக்கை எல்லாமே அவள்தானென்று யுகேனுடைய உள்ளுணர்வுகள் உறுதி செய்ததை அவள் அறியவில்லை.

## 14

மறுநாளிலிருந்தே, யுகேந்திரனும் ஏதோ ஒருவித ஆழ்ந்த யோசனையிலிருக்க, அவள் ஒதுங்கிக்கொண்டாள்.

இரண்டு நாட்கள் அமைதியாகக் கழிய, ஒருநாள் மாலையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளான யூனியன் தலைவர்கள் அவனை சந்திக்க வந்து காத்திருப்பதாக, கணபதி வந்து கூறினார்.

அவனுடன், அவர்களைச் சந்திக்கச் சென்றபோதுதான், அவளுக்கு விபரமே புரிந்தது.

சுவாரசியமின்றி அமர்ந்து அவனுடன் 'டி.வி.' பார்த்துக் கொண்டிருந்தவளை, அவன் அழைத்தபோது எந்த உணர்வுமின்றி பின்தொடர்ந்தாள் அவள்.

இனி,தொழிலாளர்களின் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல், பள்ளிக்குச் சென்று படிக்கவைத்தால், அவர்களுக்கு தனியாக சில சலுகைகள் வழங்கப்படுமென்று அறிவித்தான் அவன்.

சட்டென்று அவள் முகம்மலர, ஓரக்கண்ணால் அவளையே ஒருகணம் நோக்கியவன் உடனே திரும்பினான்.

"இலவசக்கல்வி, மதியம் இலவச உணவு, பள்ளிச்சீருடை எல்லாமே கிடைச்சிடறதாலே, இதுவே கூடுதல் வசதிதான்! தொழிலாளர்களுக்கு பெரிய பொருட்செலவு இருக்காது. புத்தகங்கள்





# நரம்பு இல்லா நாக்கு

விஜயா ராஜன்

'பேரன்' விபத்துல சிக்கி ஆஸ்பத்திரிலே கெடக்கான்.. போய்ப் பார்த்து ரெண்டு வார்த்தை ஆறுதலா சொல்லலாம். ஆனா, வாயைத் தொறந்தாலே.. மகனும், மருமவளும் கேள்விமேல் கேள்வி கேட்பாங்களே' என்று மனக்குள்ளே முனகிக்கொண்டு, ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த கிழவி, பேரனை வாஞ்சையுடன் பார்த்தாள். தலையை தடவிவிட்டு, பேசாமல் நின்றபோது, மருமகள் தன் கணவனிடம் இப்படிச் சொன்னாள்.

"உங்க அம்மாவைப் பார்த்தீங்களா...? நம்ம பேரனாச்சேன்னு கொஞ்சமாவது கரிசனம் இருக்குதா..? என்னாச்சு... ஏதாச்சுன்னு கேட்டு, நாலு வார்த்தை ஆறுதலா சொல்லணும்னு தோணிச்சா...? ஊமைக் கோட்டான்ட்டம் சும்மா வந்து நிக்கிறாங்க... ஆனாலும் இம்புட்டு கல்நெஞ்சக்கார பொம்பளையை நான் பார்த்ததில்லே..."

மட்டும் வாங்கினால் போதும்!

"இதை செயல்படுத்தறதுக்கான ஒரு அறிவிப்பை எல்லா தொழிலாளர்களுக்கும் இந்த வாரமே அனுப்பிடுங்க. விருப்பப் படுறவங்க உடனே நம்ம பள்ளிக்கு வந்துவிபரம் கேட்டு விண்ணப்பம் வாங்கிக்கலாம்!"

அவன் முடித்தபோது அனைவரின் மனமும் நன்றியுணர்ச்சியிலும், பிரமிப்பிலும் நிறைய, நெகிழ்ந்துபோய் விடைபெற்றனர்.

"ஒரு நிமிஷம்..." என்று அவர்களை நிறுத்தினான், அவன்!

"இதுக்கெல்லாம் நீங்க இவங்களுக்குத்தான் நன்றி சொல்லணும். இவங்க மிஸ் சாகித்யா! என்னைப் பாத்துக்க வந்திருக்கிற நர்ஸ்!

குழந்தைத் தொழிலாளர்களே நம்ம ஜமீன்லே இருக்கக் கூடாது. எல்லாருக்கும் கல்வியைக் கொடுக்கணும்னு என்கிட்ட வாதாடி, இதை செய்யத் தூண்டினவங்க!"

அவன் பெருமையுடன் அவளை அறிமுகம் செய்ய, கூச்சத்துடன் புன்னகைத்தவளை வியப்புடன் அனைவரும் வணங்கினர்.

"அதெல்லாம் இல்லைங்க! இது யுகேந்திரன் சார் எடுத்த சொந்த முடிவு! என்னதான் நான் சொன்னாலும், அதை செயல்படுத்தறதுக்கு நிறைய மனிதநேயமும், பணம் செலவழிக்கப் பரந்த மனசும் இருக்கணுமே...

"இந்த நல்ல விஷயம் முழுசா வெற்றிபெற்றால், அதுக்கான முழுப் பெருமையும் இவரைத்தான் சேரும்! கல்வியோட அருமையை உங்க தொழிலாளர்களுக்கு எடுத்துசொல்லிப் புரியவையுங்க.

"அதாலே இவங்களோட வாழ்க்கைத்தரமே எவ்வளவு உயரும்கிறதை உணர்த்துங்க! குறைந்தபட்சம் குடும்பத்துல ஒருத்தரை. நல்லாப்படிக்க விருப்பமுள்ளவங்களை. பெண் குழந்தைகளை. இப்போ ஆரம்பப் பள்ளிக்குப்போற வயசுலே இருக்கிறவங்களையாவது நிச்சயமா படிக்க அனுப்ப சொல்லுங்க!"

கையெடுத்துக் கும்பிட்டபடி விடைகொடுத்தான்.

அனைவரும் சென்றபிறகு அவளையே ஊடுருவிய அவனுடைய கூர்ந்த பார்வையும், கர்வப் புன்னகையும் ஏதோ செய்ய எப்படி நன்றி சொல்வதென்றே புரியாமல் உதட்டைக் கடித்தபடித் திரும்பிக்கொண்டாள்.

"ஏன்... என்னைப் பார்த்தாலே பிடிக்கலையா? இல்லை... என்கிட்ட நன்றி சொல்றது அவ்வளவு கஷ்டமா...ம்?"

ஆழ்ந்த குரலில், மயிற்பீலியாய் வருடுகிற தொனியில் கேட்டான்.

தர்மசங்கடமும், சிறு கூச்சமுமாய் திரும்பி அவனை ஏறிட்டவள், "நன்றி சார்..." என்று மென்குரலில் பகர்ந்தாள்.

"ஊகூம்! நான்தான் உனக்கு நன்றி சொல்லணும்! இந்த மா... ஒரு நல்ல காரியத்தை செய்யத் தூண்டுகோலா இருந்ததுக்கு...! நன்றி சகி!"

"அதெல்லாம் இல்லை... என்னதான் நான் சொன்னாலும், முடிவு செஞ்சது நீங்கதானே! இதுக்கான செலவையும் நீங்கதானே ஏற்கணும்... இதுக்கெல்லாம் நிச்சயமா பெரியமனசு வேணும்!" மீண்டும் மெல்லிய குரலில் மொழிந்தாள்.

"முதல்முறையா... உன்கிட்டேயிருந்து வந்த மனமார்ந்த பாராட்டு இது... இல்லே? இந்த நம்பிக்கையை நான் கடைசிவரைக்கும் நிச்சயமா காப்பாத்துவேன்...

"ஆனாலும்... இப்போ 'ஹிம்பர்'ங்கிற ஒரு அறிஞரோட பொன்மொழிதான் ஞாபகம் வருது!

'நான் தூங்கிக்கொண்டிருந்தேன்... வாழ்வே அழகு என்று கனவுகண்டேன்! விழித்தெழுந்தேன்...! வாழ்வே கடமைதான்' என்று உணர்ந்தேன்..." எவ்வளவு அர்த்தமுள்ள வரிகள்!

"அறியாமைங்கிற உறக்கத்தில் இருந்து என்னை எழுப்பினதுக்கு நிச்சயமான நன்றி சொல்லித்தானே ஆகணும்!"

சட்டென்று அவளுடைய கரங்களைப் பற்றிக்கூற, ஏதோ ஒருவித சிலிர்ப்பில்- மெல்ல முறுவலித்தாள் அவள்.

ஒரு மரக்கிளையிலிருந்து இயல்பாய் உதிர்ந்து விழுகின்ற அழகிய பூவாய்; அவளுடைய இதழ்களிலிருந்து அழகாய் சிந்தியது அந்த ஒற்றைப் புன்னகை!

"இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே சகி! மனசு அழகா இருக்கிறவங்களுக்கு முகமும் ரொம்ப எழிலாத் தெரியும்கிறது இன்னிக்குத்தான் எனக்குப் புரிஞ்சது!"

ஒருவித உருக்கத்துடன் அவன் கூற, அவள் விழி இரண்டிலும் மெல்லிய குறுகுறுப்பும், கன்னங்களில் இளஞ்சிவப்பு மலர்களும் மலர்ந்தன.

ஓடும் ஆற்றின் சில்லென்ற சிலிர்ப்பை இதயத்துக்குள் இறக்கியது போலிருந்தது- அவன் பார்வை!

**ம**றுவாரமே, தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பேசி நல்லதொரு முடிவுடன் யுகேனை சந்தித்துப் பேசினர்.

நான்கு வயது முதல் பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உடனே பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டனர்.

புதிதாக ஆசிரியர்களை சேர்க்கும் பணியிலும், பள்ளியை சுத்தப்படுத்தி பூட்டிக்கிடந்த அறைகளுக்கு வர்ணம் பூசுவதிலும், ஆட்கள் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து இலவச சீருடை வழங்குதல், மதிய உணவுக்கான ஏற்பாடுகள், பணியாளர்கள் சேர்க்கை என்று எல்லா ஏற்பாடுகளுமே துரிதப்படுத்தப்பட்டன.

அடுத்த மாதமே விஜயதசமியிலிருந்து பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

அன்றிரவு, எல்லாவற்றிற்கும் யுகன்தானே காரணமென்ற பெருமித உணர்வில் இதயம் சிலிர்க்க, வதனியிடம் மனம் நிறைந்து அவனை பாராட்டிக்கொண்டிருந்தாள்.

வதனியும் எல்லாக் காரியங்களிலும் ஆர்வத்துடன் பங்கெடுத்துப் பெரும் உதவியாக இருந்தாள்.

எல்லாச் செலவுகளும் வருமான வரிக்கழிவில் பெரிதும் கழிக்கப்படும் என்று வதனி கூறியபோது பெரும் இதமாய்!

தன்னால் அவனுக்கு பெரும்பொருட்செலவு நேரிட்டுவிட்டதோ என்ற சிறு குற்ற உணர்வையும் அது போக்கிவிட, தன்னை அறியாமலே எழுந்த பெருமூச்சுடன் யுகேனை வாழ்த்தினாள். திடீரென்று பின்னாலிருந்து அவனுடைய குரல் இடைமறித்தது.

“என்ன வதனி? இப்படி ஜொக்கு மாதிரிக் காத்திருந்தாத்தான், உன் தோழி வாயிலிருந்து பாராட்டெல்லாம் வாங்கமுடியுமா? இதிலே கூடவா கஞ்சத்தனம்...! ஏன்... என்... எதிரிலேயே சொன்னா அவங்க குறைஞ்சு போயிடுவாங்களா?” கிண்டலாக வந்தது அவன் குரல்!

“ம்... எனக்குத் தெரியாதுப்பா! நீங்களாச்சு... உங்க நர்சுமாச்சு...! அதை அவங்ககிட்டயே கேளுங்க! நான் என்ன நடுவிலே... மொழிபெயர்ப்பாளரா?”

குறும்புடன் கேட்டுவிட்டு அங்கிருந்து அகன்றாள் வதனி. சட்டென்று உயர்ந்த விழிகளில், புரியாத ஒரு பாவனை தெரிய,



...ார்க்கப்பட்ட பொற்சித்திரமாய் அவள் நின்றிருந்தாள்.

சங்கேத விழிமொழியின், உனக்கு மட்டுமே சொந்தமா என்று கேட்க ...வேண்டும்போல் அவள் உள்ளமும், உதடுகளும் பரபரத்தன.

“தன்னிடம் இவ்வளவு சண்டையிடுபவன், உருகுபவன் வேறு பெண்ணை விரும்புவானா என்று நினைக்கும்போதே புதிராய்! ஆனாலும், அவனுடைய மனதில் இருப்பதாக வதனி கூறிய பெண் யாராக இருக்கும் என்ற கேள்வியும் எழுந்தது உடனே, வேகமாக ஓடிச்சென்று ...ன் அறைக்குள் சிறை இருந்தவளுக்குள் பல வினாக்கள்!

தன்னைப் பார்ப்பதற்கு முன்பே... அவனுக்கு வேறு ஒரு காதலி இருப்பாளோ! அந்தக் காதல் தோல்வியால்தான் அவன் அவ்வளவு ...ட்டேத்தியாக இருந்தானோ?

ஒரு பெண் அவனை ஏமாற்றியதால்தான், அவனைத் ...ான் விரும்பியதாகக் கூறிய அன்று, திருநெல்வேலியில் ...பெண்களை நயவஞ்சகிகள்... மோசக்காரிகள்... என்று வெறுத்துத் ...ட்டினானோ?

அன்று... தன் வாழ்வில் இனி ஒரு பெண்ணுக்கு இடமில்லை ...ன்றானே... அப்படியானால் அவனை ஏமாற்றிய பெண் யார்? ...ரயப்படுத்துகிற அம்மாவைத்தான் தெரியும்...பெண்களின் துரோகம் ...ந்த காயத்தால் மனது ரணமாகி இருக்கிறதென்றானே...!

கடவுளே... அவனை இந்த அளவு மாற்றிய அந்தப் பெண் ...ார்...? இங்கு வந்தபிறகு, அந்தக் பெண்ணை மீண்டும் ...ந்தித்திருப்பானோ!

ஆனால், அவனிடம் புதிதாய் ஒருவித இளக்கமும், மென்மையும் ...ற்சாகமும் வந்திருக்கிறதே?

அப்படியென்றால், தன்னிடம் ஏன் குறும்புடன் நெருங்கிப் பழகி ...ண்டுகிறான்? நம்மை விரும்பியவள்தானே... எப்படியும் காலடியில் ...ழவைத்துவிடலாம் என்ற ஆணாதிக்க மனப்பான்மையா...?

“இல்லை... இதோ பாரு... என்னையும் விரும்புகிற ஒருத்தி ...ருக்கிறாளென்று தன் கடந்த காலக் காதலியிடம் வெளிச்சம் ...ாட்டுக் காட்டும் வேகத்தில், ஒன்றுமில்லாததற்குஇவள் ...வாயில்லை என்று என்னை ஏற்றுக்கொள்ள நினைக்கிறானா?

புரியாத பல கேள்விகள் உள்ளே வண்டாய்க் குடைய, மனம் ...ப்ப வலை பின்னியது.

## 15

மறுநாள் அவன் சாப்பிட்டுவிட்டுத் திரும்பியபோது, ஹாலிலிருந்த 'போன்' அடித்தது.

அப்போது அங்கு யாருமில்லாததால், அவனே வேகமாகச் சென்று ரிசீவரை எடுத்து "அலோ..." என்றான்.

உடனே "வதனி இருக்காளா நான் அவ மாமா பொண்ணு மாதங்கினி பேசறேன்" என்றது ஒரு குரல்.

"ஒரு நிமிஷம் இருங்க... நான் அவங்களைக் கூப்பிடுறேன்..."

அவன் கூறும்போதே, "நீங்க யாரு...?" தயக்கத்துடன் கேட்டாள் அந்தப் பெண்.

"நான் இங்கே மிஸ்டர் யுகேந்திரனைப் பாத்துக்க வந்திருக்கிற நர்ஸ்!" என்றான் சகி.

"ஓ..." என்றவளின் குரல் ஒரு தவிப்பு தெரிய, வதனியை அழைத்து ரிசீவரைக் கொடுத்தான்.

பிறகு, யுகேனுடைய அறைக்கு வந்தபோதுதான் சட்டென்று ஒன்று தோன்றியது.

அதை தெளிவுபடுத்த விரும்பியவன் அன்று மாலையே வதனியிடம் மெதுவாகப் பேசினான்.

"இன்னிக்கு காலையில 'போன்' செஞ்சாங்களே மாதங்கினி... அவங்கதான் உங்க அண்ணனோட காதலியா?"

சகி கேட்டதும் ஆச்சரியமாக நிமிர்ந்தவளுக்கு, அவனுடைய முகத்தைக்காண மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

பரீட்சை எழுதிவிட்டு முடிவிற்கு காத்திருக்கும் மாணவியைப் போன்ற ஒரு தவிப்பு அவனிடம் தெரிய, சட்டென்று பொங்கிய சிரிப்பை புறங்கையால் மறைத்து ஒளித்தவள், "ம்..." என்று கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றாள்.

பிறகு தனியே சென்று விழுந்து விழுந்து சிரித்தவள், யுகேனிடம் விபரத்தைக் கூறினாள்.

"வதனி! ஏன் இப்படி செஞ்சே...? ஏற்கெனவே என் மேல அவ நெருப்பா காயறா... இப்பஇது வேற! இந்த விளையாட்டு வேண்டாமே!" ஒரு பெருமூச்சுடன் கூறினான் யுகேன்.

"அண்ணா! காதல்லே கொஞ்சம் ஊடல் இருந்தாதானே நல்லாருக்கும்... நானும் கொஞ்சநாளா உங்களை கவனிச்சிட்டே



...ான் இருந்தேன். ரெண்டு பேரும் மூஞ்சியைத் தூக்கி உம்முன்னு ...ச்சிக்கிட்டு விலகிவிலகிப் போறீங்க... இதுக்கு ஒரு முடிவு தெரிய ...வணாமா? அதான்..." கேலியுடன் கண் சிமிட்டினாள்.

உடனே "ம்... இப்ப மட்டும் என்ன? காதலோட ஊடல் ...டும்தான் இருக்கு... கூடல்தான் இல்லையே! ப்ச்... அதுவும் ...ர்வைக் கூடல்கூட இல்லை" மெதுவாக முணுமுணுத்தான் ...கேன்.

அவனிடமிருந்து காற்றை கூடாக்கும் ஒரு பெருமூச்சு வெப்பமாக ...வெளிப்பட்டது.

அவளுடைய ஒற்றைப் பார்வைக்கு, இப்போது ஓராயிரம் ...விதை வழங்கக் காத்திருந்த தன் இதயத்தை அவள் புரிந்துகொள்ள ...ல்லையே என்று மனதிற்குள் ஏக்கமாய்!

**என் இனிய சகி!**
**என்னுள்...**
**நேசம் தந்த**
**நிலவே!**
**என்னுயிரில்**
**இருப்பவளே...**
**என் நெஞ்சில்**
**உந்தன்**
**நினைவே!**


மறுநாள் முழுவதும் அவனும் அமைதியாக இருக்க, சகியும் ...ந்த யோசனையில் இருந்தான்.

முதல் நாள் மாதங்கினியைப் பற்றி வதனி கூறியதிலிருந்தே, ...ம் நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தது.

அவனை வெறுத்துவிட்டோம் என்று வர்ணம் பூசிக்கொண்டிருந்த ...மனதிற்குள், அவனை வேறு ஒரு பெண்ணுடன் இணைத்து ...பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

உறக்கம் வராமல்... சாப்பிடப் பிடிக்காமல்... வேலையில் ...பாடில்லாமல்... தன்னையே தொலைத்து நின்ற அந்த ...டத்தில்தான் தன் மனதில் ஆழமாய் வேர்ப்பிடித்திருந்த ...லின் வலிமை புரிவதாய்...!

மறுவாரம் முழுவதும் மவுனமாகவே செல்ல, அவள் இளம்ப





வேண்டிய நாள் நெருங்குவதை நினைத்துப் பார்க்கக்கூட சகியின் மனதில் வலுவின்றிப் போனது.

அன்று மாலையில் யுகேனுடைய தேவைகளை கவனித்துவிட்டு அவள் கோவிலுக்குச் செல்லக் கிளம்பினாள்.

அப்போதுதான் "ஒரு நிமிடம்" என்று நிறுத்தினான் அவன்.

அவள் தயக்கத்துடன் நின்றபோது, "நான்கூட கொஞ்சம் பேசணும் சகி! உட்காரு.. ப்ளீஸ்! எனக்காக ஒரு அரை மணி நேரம் ஒதுக்கமுடியுமா?" என்றான், மென்மையான குரலில்.

அவளும் மெதுவாக அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். மனம் அவன் என்ன சொல்லப்போகிறானோ என்ற பயத்தில் அதிர்ந்து தடதடத்தது.

"சகி! நான் உங்க வீட்டுக்கு வந்து உன்னை முதல்லே பாத்தப்பவே வித்தியாசமான ஒரு பொண்ணா தான் நீ எனக்கு அறிமுகமானே! ஆனா, 'எந்தப் பொண்ணுகிட்டேயும் என்னை இழக்கக்கூடாது... எந்தப் பொண்ணும் என்னை ஆட்படுத்தவிடமாட்டேன்'னு நான் பிடிவாதமா இருந்த காலம் அது!

ஆனால் உடம்பு சரியில்லாதப்ப உங்க அம்மாவும், நீயும் என்னை கவனிச்சிக்கிட்டவுங்க பாரு! அப்போ உங்க அன்பு என்னை இளக வச்சிடுச்சு! ஆனா அப்புறமும் நீ என்னை விரும்பறேன்னு சொன்னப்ப என்னால அதை ஒத்துக்கவே முடியலை.

ஒரு பெண்ணால நான் நிறைய காயப்பட்டிருந்த நேரம் அது- ஒரு பெண்கிட்ட அடிமையாகிறதை, அது அன்புக்குன்னாலும்கூட என் 'ஈகோ' அதுக்கு ஒத்துக்கலை... அப்புறம்தான் நான் இங்கே கிளம்பி வரவேண்டியதாப் போச்சு. இங்கே வந்தப்புறம்தான் எனக்குள்ள நிறைய மாற்றங்கள்...

முதன்முதலா என் மனசுக்குள்ளே ஒரு பெண்ணோட உருவம் ஆழமாய் பதிஞ்சிருக்கிறது புரிஞ்சுது. பிரிவுதான் என் காதலை இன்னும் அதிகரிக்க செஞ்சதுன்னு அப்பதான் புரிஞ்சிக்கிட்டேன். நானா இப்படி மாறினேன்னு அச்சரியமா இருக்கு...

முதல்லே உன்கிட்டதான் இதைப்பத்தி சொல்லணும்னு நான் நினைச்சிட்டிருந்தேன்... ஆனா, வதனிக்கு எப்படியோ தெரிஞ்சுபோச்சு.. அவ ஒரேடியா என்னை கிண்டல் பண்ண ஆரம்பிச்சிட்டா!" என்றவனை உடனே இடைமறித்தாள் சகி!

"ஆமாம் எனக்கும் எல்லாம்தெரியும்... வதனிதான் சொன்னாங்க...! சாரி! நான்தான் புத்தியில்லாம உங்களை

விரும்புறதா சொல்லி குழப்பிட்டேன்... அது வெறும் இனக்கவர்ச்சிதான்னு இப்ப புரிஞ்சிக்கிட்டேன்.

நம்ம ரெண்டு பேருக்கும் அந்தஸ்து விஷயத்துல எவ்வளவு வச்சாக்கூட எட்டாதுன்னும் தெரிஞ்சிக்கிட்டேன். வாழ்க்கையில எல்லாத்தையும் சரியா கணிச்சவ உங்க மனசை மட்டும் எப்படி தப்பா கணிச்சேன்னு தெரியலை. இப்ப எல்லாமே தெளிவாயிடுச்சு.

இந்த வாரமே நான் ஊருக்குக் கிளம்பலாம்னு இருக்கேன். பெண்களையே வெறுத்த உங்களுக்கு திரும்பவும் எப்படி அவங்க மேல நம்பிக்கை வந்ததுன்னு ஆச்சரியமா இருக்கு. எனக்கு அவங்களை உடனே பாக்கணும்போல இருக்கு."

மெல்லிய குரலில் அவள் கூற அவனுக்குள் குறும்புச் சிரிப்பு வெள்ளமாய் கரைபுரண்டது.

தான் மாதங்கினியை விரும்புவதாக அவள் தவறாக எண்ணி இருக்கிறாள் என்றும், அவனுக்கு திருமணமாகிவிட்ட செய்தியை கூறினால் அவள் என்ன செய்வாள் என்று தோன்றும்போதே சிரிப்பை அடக்கியபடி நிமிர்ந்தான்.

"அவளைப் பாக்கணும்னா நீ உடனே கண்ணாடியில் போய்தான் பார்க்கணும்" என்றபோது, சகி அங்கு இருந்த சுவடே தெரியவில்லை.

அவனுடைய வார்த்தைகள், காற்றில்கலந்து முகவரியைத் தொலைத்த கடிதமாய் அவனிடமே திரும்பின.

"சகி..!" அவன் தவிப்புடன் அழைக்க, அவளோ தன் அறைக்கு வந்து குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டிருந்தாள்.

அவனை மறக்க நினைத்த பிறகு, இதயமே துடிப்பதற்கு மறந்ததைப்போல ஒரு உணர்வு!

நெஞ்சத்தைப் பஞ்சாக்கி, அதில் தீப்பொறியைத் தூவின அவன் சொற்கள்!

உயிரே கரைந்துவிடும் போல் அழுதவள், திடீரென்று அறைக்கதவு தட்டப்படும் ஒலி கேட்டதும் திடுக்கிட்டாள்.

"சகி! கோவிலுக்குப்போக தயாரா?" வதனியின் குரல் கதவு வழியே கசிந்தது.

"வரேன் வதனி! துணி மாத்திட்டிருக்கேன்" என்றபடி வேகமாக



குளியலறைக்குள் சென்றவள், முகத்தை தண்ணீர் அடித்து நன்றாகக் கழுவினாள்.

கண்களை கழுவியபிறகு லேசான ஒப்பனையுடன் ஒரு பருத்தி சேலை அணிந்து வெளியில் வந்தபோது, வதனி தன் அறையில் அவளுக்காகக் காத்திருந்தாள்.

சகியின் முகச்சிவப்பையும், இடுங்கிய கண்களையும் கவனித்தவள்– சகிக்கும் தன் அண்ணனுக்கும் இடையே ஏதோ நடக்கிறதென்பதை புரிந்துகொண்டாள்.

இருவரும் கிளம்பி கோவிலுக்குச் செல்ல, யுகேன் தவிப்புடன் அமர்ந்திருந்தான்.

தன் காதலை இன்று அவளிடம் எப்படியாவது தெரிவித்துவிடவேண்டும் என்று பேச ஆரம்பித்து, அது தவறான கோணத்தில் சென்று– தான் கூறவந்த பெண் வேறு யாரோவென்று அவள் தப்பாக அர்த்தம்செய்து கொண்டது புரிந்தது.

இன்றிரவு நேரடியாகவே பேசிவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருந்தான் அவன்.

கோவிலில்சாமி தரிசனம் முடிந்து– வெளிப்பிரகாரத்தில் பெண்கள் காற்றாட அமர்ந்திருந்தனர்.

இருவருக்குமிடையே ஒருவிதத் தவிப்பான மவுனம் நிலவியது.

தன் அண்ணன் அவளைத்தான் விரும்புகிறாரென்ற உண்மையை சகியிடம் கூறிவிடலாமா என்று வதனி யோசிக்கும்போதே, "வதனி...!" என்ற அழைப்புடன் வேகமாக அவளருகில் வந்து அமர்ந்தாள் ஒரு பெண்.

மனதில் யுகேனின் நினைவுகளே மையம் கொண்டிருக்க, அசுவாரசியமாக அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆரம்பித்தாள் சகி.

ஆனால் மாதங்கினி என்ற பெயரைக்கேட்டதும் உடனே நிமிர்ந்தாள்.

அவள் விழிகள், தவிப்பு கலந்த ஆர்வத்துடன் மாதங்கினியை துளாவிட்டன.

அவளுடைய அழகும், உருவமும் தன்னை அறியாமலேயே சகிக்குள் பொறாமைத் தீயை கிளறிவிட்டு, தவிப்புடன் கொழுந்துவிட்டு எரிந்தன.

## 16

வதனி அவளிடம் திரும்பினாள்.

"சகி! இவதான் மாதங்கினி.. என் மாமா பொண்ணு!" என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

"இவங்க யாரு வதனி..?"

ஆவலாக் கேட்ட அந்தப் பெண்ணிடம், "இவங்க சாகித்யா.. எங்க அண்ணாவை கவனிச்சிக்கிறதுக்காக வந்திருக்கிற நர்ஸ்" மெதுவாகக் கூறினாள்.

பிறகு அவர்கள் இருவரும் குடும்ப விஷயங்கள் பேச அவள் மாதங்கினியையே கூர்மையுடன் அளவெடுத்துக் கொண்டிருந்தாள்.

"உங்க அண்ணாவுக்கு இன்னும் என்மேல ரொம்ப கோபம் இருக்கும் இல்லை.. அதனாலதான் வீட்டுக்கு வரவே யோசனையா இருக்கு.. போனிலே பேசினேன்..." தர்மசங்கடத்துடன் வந்தது அவள் குரல்.

"ஆமாம்! ரொம்பக் கோபமா இருக்காரு.. ஒருத்தரை நம்பி ஏமாந்து போறது எப்படி வலிக்கும்னுதான் நீங்க எல்லாரும் சேர்ந்து அவருக்குப் பாடம் எடுத்து வச்சிருக்கீங்களே..." விரக்தியுடன் கூறினாள் வதனி.

"சாரி வதனி..! எல்லாம் அப்பாவாலதான்! நான் விரும்பறேன்னு சொல்லியும் புரிஞ்சிக்காம இந்த மாதிரி... எனக்கு ரொம்ப தர்மசங்கடமா இருக்கு...!"

"சரி! நீ கிளம்பு.. அப்புறம் வீட்டிலே தேடப் போறாங்க.."

வதனி அவளை எழுப்பும்போதே ஒரு இளைஞன் அங்கு வந்துவிட்டான்.

"மாதி... நான்தான் வரேன்னு சொன்னேன் இல்லை... அதுக்குள்ளே ஏன் அவசரப்பட்டு வந்தே! காரில வர்றதை விட்டுட்டு இப்படி நடந்து வந்து, கர்ப்பமா இருக்கிற உனக்கு ஏதாவது ஆயிட்டா..?" கடிந்துகொண்டான், அவன்.

திடுக்கிட்டு எழுந்த சகி- வதனியையும் அவனையுமே மாறி மாறிப் பார்க்க, இதயம் படபடத்துப் போனது அவளுக்கு!

அவர்கள் விடைபெற்றுச் சென்றதும் உணர்வுகள் சடசடவென்று சரிய, தொப்பென்று அமர்ந்தவள், "இப்பதான் எல்லாம் புரியுது!"



என்று முணுமுணுத்தாள்.

"என்ன புரிஞ்சுது சகி, உங்களுக்கு..?" அவளையே கூர்ந்தபடி கேட்டாள் வதனி.

"ம்.. உங்க அண்ணா, இப்பதான் தன் காதல் தோல்வியைப் பத்தி பேசினாங்க.. மாதங்கினியைப் பார்த்தபிறகுதான் எல்லா உண்மையும் புரியுது.

"உங்கண்ணா மாதங்கினியை விரும்பி இருக்காரு. ஆனா அவங்க விரும்பலை. வேற ஒருத்தரை கல்யாணம் செஞ்சுகிட்டாங்க" கூறும்போதே சகியின் விழிகளில் அடிபட்ட வலி தெரிய, முகம் சுருங்கியது.

"ம்.. அப்புறம்?"

"அவங்க, முதல்லே தன் அப்பாவோட விருப்பத்துக்காக உங்க அண்ணாவை மணக்க சம்மதிச்சிருக்கணும்.. அப்புறம் உண்மைக் காதல்தான் முக்கியம்னு உணர்ந்து தான் காதலிச்சவரையே கைப்பிடிச்சிருக்கணும். அதைத் தாங்க முடியாமதான் பெண்களே ஏமாத்துறவங்கன்ற முடிவோட அவர் இங்கேயிருந்து கிளம்பி திருநெல்வேலிக்கு வந்திருக்கணும்... சரிதானே?"

"ரொம்ப சரின்னு நினைச்சிட்டு தப்பாவே யூகிச்சிருக்கீங்க.. நீங்க சொன்னதுல ஒன்னே ஒன்னுதான் நிஜம். மாதங்கினி அந்த கோபியை விரும்பினது மட்டும்தான்!"

"அப்போ உங்க அண்ணா விரும்புனது வேற பொண்ணா? நீங்கதானே இவங்கன்னு சொன்னீங்க?".

"ம்... நான்தான் பொய் சொன்னேன்... அப்பவாவது என சகி அண்ணிக்கு வீரம் வந்து தைரியமா தன் காதலை எங்க அண்ணாகிட்ட சொல்லுவாங்களா பார்க்கலாம்னுதான்!" குறும்புடன் அவள் கூற-

"வதனி.. என்ன சொல்றீங்க..? சும்மா என்னை சமாதானப் படுத்தணும்னு பொய்தானே சொல்றீங்க?" மூச்சை இழுத்துப் பிடித்தபடி தவிப்புடன் கேட்டாள் சகி.

"இல்லை.. நிஜம்! சில நேரங்களிலே கற்பனை நிஜம் போலவும், உண்மை பொய் மாதிரியும் தெரியும்கிறது உண்மைதான் போலிருக்கு! உங்களுக்கு விபரமா சொல்றேன். அப்புறமாவது இந்தப் பட்டுத் தலைக்குள்ளே அது பதிஞ்சி, மாற்றம் ஏதாவது வருதான்னு பார்ப்போம்!" என்றவள் எல்லாவற்றையும் கூறத் தொடங்கினாள்.

"சகி! எங்கம்மா, அண்ணனுக்கு சித்திதான்! அண்ணா பிறந்தவுடனே பெரியம்மா இறந்துட்டாங்களாம்! அது எங்க யாருக்குமே மூணு மாசம் முன்னாடி வரைக்கும் தெரியாது.

அண்ணா எம்.பி.ஏ. முடிச்சிட்டு இங்க வந்து பொறுப்பேத்துக் கிட்டப்ப மாதங்கினி அவரை விரும்பற மாதிரி சுத்தி சுத்தி வட்டிருக்கா.. நான் அப்ப ஆஸ்டல்லே இருந்தேன்.

அண்ணாகிட்ட திருமணத்தைப்பத்தி அம்மாவும், மாமாவும் பேசி இருக்காங்க. அப்பதான் அவர், மாதங்கினியை தான் ஒரு தங்கையா நினைக்கிறதா சொல்லியிருக்காங்க.. ஆனா, இதிலே 'ஷாக்' என்னன்னா.. மாதங்கினியும், இந்த கோபியைத்தான் விரும்பி இருக்கா... மாமாவோட பயமுறுத்தலுக்கும், வற்புறுத்தலுக்கும் இணங்கி அண்ணாவை விரும்பற மாதிரி நடிச்சிருக்கா...

மாதங்கினியை அண்ணா மணக்க மறுத்ததும் அன்னிக்கு இரவே அம்மாவும், மாமாவும் இதைப்பத்தி பேசியிருக்காங்க... அதை அண்ணன் கேட்டுட்டாங்க. அப்பக்கூட அண்ணாவுக்கு எங்கம்மா, தன் அம்மா இல்லைன்ற உண்மை தெரியாது. சொத்தெல்லாம் அண்ணா பேருக்குதான் அப்பா எழுதி இருந்தாங்க.. ஜமீன் கணக்கு வழக்கில தப்பு பண்ணி நிறைய பணம் ஏமாத்தியிருந்த மாமாவுக்கு பயமாயிடுச்சு! அதனால அம்மாவை கைக்குள்ளே போட்டுட்டு, தன் மகளை அண்ணனுக்கு கொடுத்துட்டா ஒரு பிரச்சினையும் இருக்காது. சொத்தெல்லாம் தன் மகளுக்குப் பாதி, எனக்குப் பாதின்னு மாத்திடலாம்னு அவர் ஆசை காட்டியிருக்காரு... அம்மா ரொம்பக் குழம்பி இருந்திருக்காங்க. அப்பதான் அண்ணன் மறுக்கவும், அவர் ஒரு திட்டத்தை சொல்லியிருக்காரு...

இப்ப வந்துதே.. அண்ணாவோட இருபத்தஞ்சாவது பிறந்த நாள்! அன்னிக்குதான் அண்ணா சட்டபூர்வமா பொறுப்பேற்கிற நாள். அன்னிக்கு அண்ணாவை.. முடிச்சிடணும்னு..." சட்டென்று பூத்த கண்ணீருடன் நிறுத்தினாள் வதனி!

"கடவுளே! வதனி... அப்புறம்...!" நம்ப இயலாத வியப்பும், பரிதவிப்புமாய் சகி கேட்டாள்.

கண்களைத் துடைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள் வதனி.

"அதுக்கு ஒத்துக்கிற மாதிரி அம்மா மவுனமா இருந்ததும், அண்ணா ரொம்ப உடைஞ்சி போயிட்டாங்க.. அப்பாவுக்காக காதலிக்கிற மாதிரி நடிச்ச மாதங்கினி.. சொத்துக்காக மகனையே கொல்றதுக்கு தயாரான என் அம்மா.. இதெல்லாம் அண்ணாவை



டிச்சிப் போட்டிருந்திருக்கணும்.

அதான் சொத்தெல்லாம் என் பேருக்கு மாத்த ஒப்புக்கொள்றதா க்கீல்கிட்ட சொல்லி ஏற்பாடு செஞ்சுட்டு, அம்மாவுக்கு ஒரு டிதம் எழுதி வச்சிட்டு தன்னை தேட வேண்டாம்னு எங்கேயோ போயிட்டாங்க!" —கூறிவிட்டு அவள் நிமிர்ந்தபோது, சகியின் விழிகளிலும் கண்ணீர்த் துளிகள் துளிர்த்திருந்தன.

பிறகு ஒரு பெருமூச்சுடன், "அதைப் படிச்சவுடனேதான் எங்கம்மாவுக்கு தன் தப்பே உறைச்சிருக்கு.. 'தன்னைக் கேட்டிருந்தா சொத்தையெல்லாம் தானே எழுதி கொடுத்திருப்பேனே.. இப்படியொரு பொண்ணை பொய்யா காதலிக்க வச்சி, தன்னைக் கொலை செய்ய மாமா கூறியதை ஆமோதிப்பது போல் மவுனமாக இருந்ததை தன்னால மன்னிக்கவே முடியாது'ன்னு அவர் எழுதியிருந்ததை படிச்சப்ப அம்மா.. தான் எவ்வளவு பெரிய துரோகம் பண்ணிட்டோம்னு உணர்ந்திருக்காங்க. அந்த மன உளைச்சல்னாலேயே அவங்களுக்கு உடம்பு சரியில்லாமப் போயிடுச்சி..

"நான் ஆஸ்டல்லேருந்து வந்தப்ப, அண்ணா வெளிநாட்டுக்கு ஏதோ மேல படிக்க போயிருக்கிறதா மாமா சொன்னாரு. ஆனா, அம்மா இறந்து போறதுக்கு முதல் நாள்தான் என்கிட்ட எல்லா உண்மையும் சொல்லி அழுதாங்க.. அண்ணாகிட்ட மன்னிப்பு கேக்கணும்னு துடிச்சாங்க.. எனக்கு பயங்கர அதிர்ச்சி.. அம்மா மேல கடும் வெறுப்பு!

பத்து மாசம் சுமந்து பெறலைன்னாலும், வளர்த்த பாசம் அவங்களை வாட்டி வதைக்குதுன்றதை நான் புரிஞ்சிக்கிட்டுதான் அந்த விளம்பரத்தைக் கொடுத்தேன். அப்புறம் அண்ணா வந்தாங்க...

அதுக்குள்ளே அம்மா இறந்துட்டாங்க... நான்தான், அவங்க அண்ணனோட அம்மா இல்லைங்கிற உண்மையை சொல்லி, சொத்தெல்லாம் அவர் பேரிலயே இருக்கட்டும்னு சொல்லிட்டேன்.

மாமாவை பங்களாவை விட்டே அனுப்பியாச்சு. அதுக்கிடையே மாதங்கினி ஓடிப்போய் கோபியைக் கல்யாணம் செஞ்சிக்கிட்டா.. இதுதான் உண்மை! இப்பவாவது எங்க அண்ணாவைப் பத்தி புரிஞ்சுதா?" வதனி பெருமையாக முடித்தாள்.

## 17

சாஹித்யாவிற்கு தான் எப்படி உணர்கிறோமென்றே புரியவில்லை.

ஒருபுறம் படபடப்பாகவும், மறுபுறம் மனம் லேசானது போலவும் ஒரு தவிப்பான நிலையிலிருந்தாள் அவள்.

இதழின் புன்னகை உள்ளேயே புதைவுண்டு, மனம் அவனுக்காக உருகித் தவித்தது.

குழல்மேல் அலையும் மெல்லிய விரல்களின் ஜாலமாய், தன் உயிர் அடுக்குகளை வதனியின் வார்த்தைகள் மெலிதாய் நீவி வருடுவதை உணர்ந்தாள்.

மனதிற்குள் யுகேனின் நினைவுகள் ராட்டினமாய் சுற்ற, அவனை உடனே பார்க்க வேண்டுமென்று புலன்கள் ஏக்கம் கொண்டன.

"இப்பவாவது எங்க அண்ணனைப் புரிஞ்சிக்கிட்டீங்களா? ஒரு தாயோட பாசமும், அரவணைப்புமில்லாம தனிமையில ஆஸ்டலில் முரட்டுத்தனமா வளர்ந்தவங்களை உங்க காதல் மட்டுமே மாத்தி இருக்குன்னு நினைக்கிறேன். முன்னாடியெல்லாம் ஒரு மாதிரி இறுக்கத்தோடு ரொம்பக் கோபமா இருக்கிற அண்ணாகிட்டே ஊரிலே இருந்து வந்து உண்மையெல்லாம் தெரிஞ்சு சமாதானமானப்புறம், பெரிய மாற்றம் தெரிய ஆரம்பிச்சது.

இத்தனை நாள் இந்தச் சிரிப்பு, மென்மையான உணர்வுகள் எல்லாத்தையும் அண்ணா எங்கே ஒளிச்சி வெச்சிருந்தாங்கன்னு நான் ஆச்சரியமா யோசிச்சப்பதான் நீங்க வரப் போறதைப் பத்தி அவங்க சொன்னாங்க.

அப்ப அவங்க முகத்திலே தெரிஞ்ச பிரகாசம், கண்ணில பிரதிபலிச்ச ஒளி எனக்கு உண்மையைப் புரிய வச்சது.

ஆனா நான் அப்ப எதுவுமே கேக்கலை. நீங்க வந்தப்புறம்தான் ஒருநாள் அண்ணா ஒத்துக்கிட்டாங்க. ஆனா, நீங்க கோபமா விலகி இருக்கிறத பாத்துட்டு மாதாங்கியைப் பத்தி சொன்னா, அந்தப் பொறாமையிலயாவது உங்க மனசை அண்ணாகிட்ட வெளிப்படுத்துவீங்கன்னு பாத்தேன். சரியான அழுத்தம் அண்ணி நீங்க...!" செல்லக் கோபத்துடன் கூறினாள், வதனி.

"பெண்கள் மேல அவ்வளவு வெறுப்பில் இருந்தவரு இப்படி மாறி இருப்பாருன்னு என்னால நம்பவே முடியலை வதனி, அதான்...! அதைவிட அந்தஸ்துதான் பெரிய மாயச் சுவரா எங்களுக்கு இடையில நின்னுது" தலை குனிந்தபடி கூறினாள் சகி.

"இப்ப எல்லாம் நேராயிடுச்சின்ற நினைப்போட வீட்டுக்குப் போலாமே? அங்கே அண்ணனைப் பார்த்தா எல்லாம் சரியாயிடும்...!"

குறும்புடன் வதனி சொல்ல– "தெரியலை..." என வெட்கத்துடன் தலையசைத்தாள் சகி!

"அதென்ன தெரியலை... வீட்டுக்குப் போனதும் அண்ணன் எல்லாத்தையும் தெரிய வச்சிடுவாரு..." குறும்புடன் கண் சிமிட்டினாள் வதனி.

## 18

வீட்டிற்கு சென்று யுகேந்திரனைப் பார்க்கும்வரை, அவளுடைய உயிர் அவளிடம் இல்லை.

"வாழ்த்துக்கள்..." என்றபடித் தன் அறைக்குள் சென்றுவிட்டாள், வதனி.

சகி, மெதுவாக யுகேனின் அறைக்குள் நுழைந்தாள்.

அவன் ஜன்னலருகே வெளியில் தெரிந்த காட்சிகளை பார்த்தபடி, இரு புருவ மத்தியில் தெரிந்த யோசனை முடிச்சுடன் நின்றிருந்தான்.

அந்தக் கணம் யுகேனுடைய கஷ்டங்களையெல்லாம் துடைத்தெறிய வேண்டும் என்ற உணர்வு மட்டுமே அவளுள் எழுந்தது.

அவளுக்கும், அவனுக்குமிடையே எழுப்பப்பட்டிருந்த அந்தஸ்து எனும் மாயச் சுவர் சுக்குநூறாக கதறலுடன் ஓடிச்சென்று அவனை அணைத்துக் கொண்டவள், அடக்கமுடியாமல் அழ ஆரம்பித்தாள். திடீரென்று உலகையே இரு கைக்குள் சுமந்த பிரமிப்பு வந்தது அவனுக்கு!

மென்மையாக சகியின் கூந்தலை வருடியபடி, அவள் அழுது முடிக்கட்டும் என்று காத்திருந்தான் அவன்.

சோகத்தினாலோ, வலிகளினாலோ இல்லாமல்... மகிழ்ச்சி தாங்க முடியாமல் அவள் சிந்திய ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் அவனைக் காதலுடன் நனைத்தன.

அவள் அசைவுகளில்... செல்லச் சிணுங்கலில்... பொங்கிய ஆனந்தக் கண்ணீரில்... மெல்லிய வளையோசையில்... சுகமான விசும்பல்களில்... இன்னும் அதிகமான காதலின் நடம் தெரிந்தது.

அவள் சமாதானமாகி திமிறிதுபோது- மூக்கை செல்லமாகப் பிடித்து ஆட்டியபடி, "அதென்னது யுகேன்...! ம்... அழுதுவிட்டே. காதலை சொல்ற பொண்ணை நான் இப்பதான் பாக்கறேன்... வதனி... முந்திரிக்கொட்டை... எல்லாத்தையும் சொல்லிட்டாளா?"

"ம்... ஆமாம்... சாரி! நான் உங்களைப் புரிஞ்சிக்காம இன்னும் கஷ்டம் குடுத்திட்டேன்... நீங்க திருநெல்வேலிக்கு எவ்வளவு மனக்கஷ்டத்தோடு வந்திருப்பீங்க? அப்படி வந்தவரால எப்படி ஒரு பொண்ணை நம்ப முடியும்? ஏன் நீங்க என்கிட்ட எதையுமே சொல்லாம மறைச்சீங்க?" பொய்க் கோபத்துடன் அவன் மார்பில் குத்தினாள்.

"ஏய்... அப்போ எனக்கே நிச்சயமாத் தெரியலை! இங்கே வந்தப்புறம், அதுவும் எல்லா உண்மையும் தெரிஞ்சப்புறம்தான் பெண்கள் எல்லாருமே மோசமானவங்க இல்லை... மாதாங்கினியும், அம்மாவும்கூட தங்களோட சுயவிருப்பமில்லாம மாமாவுக்கு தலையாட்டி பொம்மைகளா, சூழ்நிலைக் கைதிகளா இருந்திருக்காங்கன்ற உண்மையும் புரிஞ்சுது. ஆனா, பெத்த மகளையே ஒரு அம்மாவால சாகடிக்க முடியுமாங்கிற உறுத்தல்கூட - அவங்க என் சித்திதான்னு தெரிஞ்சப்ப குறைய ஆரம்பிச்சது...

நாளாக ஆக உன்னோட நேசத்தையும், காதலையும் அந்தப் பிரிவே உணரவைக்க, அதனாலதான் உங்க எல்லாரையும் இங்கே வரவழைக்க முயற்சி பண்ணினேன். ஆனா நீ மறுத்திட்டே!

திருநெல்வேலியில உன் காதலை நீ சொன்னப்ப நான் மறுத்துட்டேன்... சாரி சகி! அப்ப என் மனசுல நீ இருந்தியான்றது எனக்குத் தெரியலை... ஆனா இந்த ரெண்டு மாசமா, நீ எவ்வளவு தெரியுமா என்னை அலை பாய வச்சிருக்கே!

பெண்களே மோசமானவங்கன்னு என் அனுபவத்தில் உணர்ந்திருந்த நான், ஒரு வித்தியாசமான பொண்ணை மறக்க முடியாம தவிச்சிப் போனேன்.

அழகும், அறிவும், அன்பும், மனிதநேயமும், எல்லாத்துக்கும் மேல என் மேல நீ வெச்சிருந்த எதிர்பார்ப்பில்லாத காதலும்தான் என்னை மாத்த ஆரம்பிச்சது.

நான் நடுத்தர குடும்பம்னு நினைச்சி என்னைப் பத்தின உண்மை



தெரியாம நீ விரும்பியிருக்கணும்... அப்ப இருக்கற நிலைமையில பெரிய பணக்காரனா [illegible] வந்து நின்னு உன் காதலை யாசிச்சபடி நீ மாறி இருக்கலாம்.

என்னா, அப்போ நான் உன்னை விரும்பறேன்னுகூட உனக்குத் தெரியாது! ஆனா நீ மாறலை! அந்த நிமிடம் எதுக்காகவும் உன்னை மாத்திக்காம... பணத்துக்கு காதலை விலை பேச முடியாதுன்னு மறுத்த உன்னோட தெளிவும், உறுதியும்... என்னை எனக்காக மட்டுமே காதலிச்ச உன் மனசும், இதுவும் வந்தப்புறம்தான் சம்மட்டி அடியா எனக்கு உறைச்சது.

ஒரு அருமையான பெண்ணோட... மனசை நோகடிச்சிட்டோமேன்னு உறுத்த ஆரம்பிச்சி, பல நாள் தூக்கத்தை இழந்து தவிச்சிருக்கேன்.

அதான்! கணபதி அங்கிள் இங்கே வந்தப்ப... பேர் பிரபலமும் வரவழைச்சி உன்னை விரும்பறதப் பத்தி சொன்னேன். அவர்தான் அந்த ஆஸ்பத்திரியை விலைக்கு வாங்கவும், உன்னை இங்கே வரவழைக்கவும் எல்லா ஏற்பாடும் செஞ்சார்.

ஒரு பொண்ணால என் மனசுக்குள்ளேயும் வசந்தத்தை அறிமுகப்படுத்த முடியும்கிறதை உணர்ந்து உனக்காக காத்திட்டிருந்தேன்...

இப்பல்லாம், நமக்கு யாருமே இல்லைன்ற ஒரு தனிமை உணர்வு என்னை ஆட்கொள்றதில்லை... எனக்குள்ள உன்னோட நினைவுகள் துணை இருக்கிறதாலே!

இன்னிக்கு என் மனசை உன்கிட்ட சொல்லிடறதுன்னுதான் நான் பேச ஆரம்பிச்சேன்... ஆனா... இந்த வதனி பண்ணின வேலை... என்னைப்பத்தி தப்பாவே உன்னை நினைக்க வச்சிடுச்சு! காதல்லே செல்லப் பொய்கள்கூட... இன்ன ரகசியங்கள் இல்லை...! இப்பவாவது எல்லாம்... எல்லாமே... புரிஞ்சுதா சகி!" மிருதுவான குரலில் கேட்டான் யுகேன்.

அவளுடைய உயிரை, வேரோடு இளக்கியது அவன் பேச்சு!

செவிமடலை சிலிர்க்கச் செய்யும் அவன் சுவாசச் சூடு, அவளுக்குள் வெட்கத்தைப் பூக்கச் செய்து, மறுநிமிடமே அவனுடைய பரந்த மார்பில் முகம் புதைக்க வைத்தது.

"இனிமே என்னால ஒரு நொடிகூட... உன்னைவிட்டு விலகி இருக்க முடியும்னு தோணலை' சகி! நாளைக்கே உங்கப்பா- அம்மாகிட்டே பேசி உடனே கல்யாணத்தை முடிவு பண்ணணும்... என்னால

ரொம்ப நாள் காத்திருக்க முடியாது..."

அவள் காதோரம் கூறியபடி முரட்டுத்தனமாக இழுத்து அணைத்து, அவளுடைய இதழ்களை காதலுடன் தன்வசமாக்கிக் கொண்டான் யுகேன்.

மறுகணமே, சகியின் இதழ்களை ஓலையாக்கி, அதில் இன்பத்தின் முகவுரையே எழுத ஆரம்பித்தன... அவனுடைய உதடுகள்!

இத்தனை காலமாக விடைதெரியாத கேள்வியாக நெஞ்சத்தில் அழுத்தியிருந்த அந்தஸ்தெனும் இரும்புக்குண்டொன்று, சகியிடமிருந்து இனிதாய் விடைபெற்றுச் சென்றது.

என்றும்... எதற்காகவும் விட்டுத் தருகிற பொருளாய் காதல் இருந்ததில்லை என்பது இருவருக்குமே இன்று புரிவதாய்...!

உடல் இலவம்பஞ்சாய் லேசாகி, மெல்லக் காற்றில் மிதப்பதுபோல் ஒரு புது அனுபவம்... யுகேனுக்குள்...!

தனக்கெனவே பிறந்தவள்... ஒரு நேசத் தருணத்தில் சட்டென்று தன் கைகளுக்குள் பொக்கிஷமாய் வந்து அடங்கியதைப்போல் ஒரு சிலிர்ப்பு!

சாகித்யா, நாணத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தபோது, "என் சகி...! நின்னையே சகியென்று சரணமெய்தினேன்" என்ற குறும்புச் செய்தியை அவன் விழிகள் ரசனையுடன் கூறின.

அந்த நிமிடமே, ஒரு இனிய கனவுக்கூடு இருவருக்கும் சொந்தமாகிவிட, சகியின் முகமும், உடலும் வெட்கச் செந்தூரம் பூசிக்கொண்டன.

ஜன்னல் வழியே தெரிந்த அந்த ஆறு, கிசுகிசுவென்று காற்றுடன் காதல் கதை பேசியபடிச் சென்றுகொண்டிருந்தது.

அதன் கரையில், சலவைக்கல்லால் செதுக்கிய ஜீவ சிற்பம் போல் ஒளிர்ந்த யுகேந்திரவர்மனின் வெண்ணிற பங்களாவைப் பார்த்து, நட்சத்திரங்கள் மழைக்கால மின்மினிகளாய்க் கண்சிமிட்டின.

**(முடிந்தது)**

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.